Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஒக்.15-21,1995

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 123

## புலிகளின் புதிய தந்திரோபாயம்

வடபுலநிலவரம்



எக்ஸ்ரே ரிப்போர்ட்



## நடந்தது என்ன?

## கலைக்கூடத்தில் வெடிகுண்டு

ஷொட் 1
ஷொட் 2
சினி ஸ்பெஷல்

## தலை மறைவான பிரபாகரன்

# முரசம்

## கரம் நீட்டலாமே...!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

இது கொஞ்சம் கசப்பானது-
ஆனால் நேரடியாகச்
சொல்வது தவிர வேறுவழியில்லை.

'யுத்தத்தை நிறுத்துக'
என்ற கோஷங்களால்
தற்போது பயனேதுமில்லை.
வேண்டுமானால் கோஷமிடுபவர்கள்
பதாகையோடு படமெடுக்கப்பட்டு
பத்திரிகைகளில் இடம்பிடிக்கலாம்.

இப்போது தேவையானது-
யுத்தத்தில் பொதுமக்களை
பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை
மேற்கொள்வதும்,
பொதுமக்களின் உயிரிழப்புக்களை
தடுத்து நிறுத்துவதற்கு
முடிந்தளவு முயல்வதும் மட்டுமே!

யுத்தத்தை நிறுத்துமாறு
உரத்துக் கூறுபவர்கள்
உடனடியாகச் செய்ய வேண்டியது-
யுத்தம் நடக்கும் பகுதிகளுக்கு
விரைந்து போய்
பொதுமக்களைப் பாதுகாக்கும்
நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான்!

சாத்தியமான அளவுக்கு மருத்துவர்களை
திரட்டி அனுப்பிவைக்கலாம்;
தொண்டர்களைத் திரட்டிப் போய்
நிவாரண நடவடிக்கைகளில்
முன்னின்று உழைக்கலாம்.

சமாதான யாத்திரைக்கு
திரள்வோர்களை,
யுத்த அரக்கனிடமிருந்து
மக்களைக் காக்கும்
நடவடிக்கைக்குத் திரட்ட முடியாதா?

முன்னது சுலபம்;
பின்னது கடினம்.
ஆனால்-பின்னதைச் செய்வது
காலத்திற்கு ஏற்றது.
விளம்பரமில்லாதது-ஆனால்
விரயமில்லாத முயற்சி.
முழக்கமிட்டவர்கள்
முன்வருவார்களா?

ஆயிரமாயிரமாய் வடக்கில்
அகதிகள் குவிகிறார்கள்.
மருந்தில்லை; மருத்துவர்களில்லை;
உடை இல்லை; உறையுள் இல்லை.
வெறும் முழக்கங்களால்
முழம் துணிகூட கொடுக்க முடியுமா?

வானொலியிலும்- தொலைக்காட்சியிலும்
திடீரென்று தோன்றிய
சமாதானப் பிரமுகர்களுக்கு
விளம்பரம் கிடைத்தது மெய்!

இப்போது அவர்கள் எங்கே?
வலைவீசித் தேடுங்கள்;
மாட்டவே மாட்டார்கள்.
அவர்களை மீண்டும் காண்பதற்கு
இன்னொரு போர்நிறுத்தம்
வந்தால் தான் உண்டு.

அப்போதே இதனைச்
சுட்டிக்காட்டியிருந்தோம்;
முரசு வாசகர்கள் அறிவீர்கள்!

இப்போதும் சிலர்
"யுத்தத்தை நிறுத்துக" என்கிறார்கள்.
பஸ் நிலையத்திலும் ரயில் நிலையத்திலும்
கூடிநின்று மக்களிடம் சொல்கிறார்கள்.
மக்களா யுத்தம் செய்கிறார்கள்?

யுத்தம் புரியும் இரு தரப்பும்
ஒரு முடிவோடு இருக்கின்றன.
ஒரு கட்டம்வரை
ஆடிப்பார்த்து விடுவது என்று
தீர்மானித்து களத்தில் இறங்கிவிட்டன!

ஏதாவது ஒரு தரப்பு-இனிப்
போதும் என்று நினைக்கும்வரை
போர் தொடர்ந்தே தீரும்.
போதும் என்று நினைக்கவைக்கும்
வாத்தியாரும் போர்தான்.

எனவே-தற்போது
யுத்தத்தை நிறுத்துக என்று
கண்களைக் கசக்குவதைவிட
யுத்தம் கசக்கிப்போடும் மக்களுக்கு
ஆதரவுக்கரம் நீட்டுவதே முக்கியம்.
அதனைச் செய்வதே அவசியம்!
உதவி செய்யப் பல வழிகள்
இருக்கின்றன.
மனமுண்டானால் இடமுண்டு.
முயலட்டுமேன்!
அதனோடு சேர்த்து
யுத்த எதிர்ப்பையும் தொடரலாமே!

□□

மீண்டும் மருடலில்
வந்து கலக்கும் வரை, என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## விசுவாசம் கொள்ளுங்கள்

விசுவாசமும் நம்பிக்கையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." (எபிரேயர் 11-1)

இயேசுகிறிஸ்து ஒருமுறை தனது சீடர்களை படகிலே அனுப்பிவிட்டு, செபிப்பதற்காக ஒரு மலைமீது ஏறி, மாலைப்பொழுதில் தனிமையில் இருந்தார்.

சீடர்கள் பயணம் செய்த படகிற்கு நடுக்கடலிலே, அலைகளினால் அலைவு ஏற்பட்டது. கிறிஸ்து கடலின் மேல் நடந்து, தனது சீடர்களிடம் வருகிறார். கடலின்மேல் நடந்து வரும் கிறிஸ்துவைக் கண்ட அவரது சீடர்கள் பயத்தினால் அலறினார்கள். அவர்களுக்கு அவர் 'பயப்படாதீர்கள்' என்கிறார்.

ஆனால் பேதுரு, "ஆண்டவரே! நீரேயானால் நான் தண்ணீரின் மேலே உம்மிடத்தில் நடந்துவரக் கட்டளையிடுக" என்றான். கிறிஸ்துவும் "வா" என்கிறார்.

உடனே பேதுரு படகைவிட்டு இறங்கி தண்ணீரின் மேல் நடந்து வருகிறார். அப்போது காற்று பலமாக வீசுகிறது. அவன் அமிழும் நிலை உருவாகிறது. அப்போது அவனுக்குள் தான் காற்றினால் அமிழ்ந்து விடுவோமோ என்று பயத்தினால் ஆண்டவரிடத்தில் அவிசுவாசம் ஏற்படுகின்றது. அமிழும்போது, "ஆண்டவரே என்னை இரட்சியும்" என்று கிறிஸ்துவை அழைத்தான்.

அவர் தனது கையை நீட்டி அவனைப்பிடித்து, "அற்ப விசுவாசியே! ஏன் சந்தேகப்பட்டாய்?" என்கிறார்.

அவிசுவாசத்தை ஒழித்தால் தான் கடவுளின் கிருபையும், வல்லமையும் பூரணமாகக் கிடைக்கும்.

ஜி.செல்வா

## தகாத வழியில் வரும் செல்வம்

நாம் ஆகுமான வழியில் சம்பாதித்து ஆகுமான வழிகளில் செலவு செய்ய வேண்டும் என்பதே அல்லாஹ்வின் கட்டளையாகும். இன்று நம்மில் சிலர் மிகவும் சிரமப்பட்டு பொருள் சேர்க்கின்றனர்; பலர் தகாத வழிகளிலெல்லாம் பொருள் சேர்க்கின்றனர். தான தருமம் செய்யாது தனக்காகவும் செலவு செய்து கொள்ளாது கஞ்சத்தனம் செய்து, செல்வத்தைக் குவிக்கின்றனர். அப்படிச் சேகரமான செல்வத்தை அல்லாஹ் அழிக்க நாடிவிட்டால், செல்வம் சேகரித்தவரை ஏதாவதொரு வியாதியில் சிக்கவைத்து விடுகிறான்; தாறுமாறான வழியில் குவிந்த அந்தச் செல்வம் தண்ணீராகக் கரைந்து டாக்டர்களிடம், வைத்தியர்களிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது.

மற்றும் சிலருக்கு நீதிமன்ற விவகாரங்களில் சிக்க நேர்ந்து விடுகிறது; வழக்கு மெய்யோ, பொய்யோ- நீதி மன்றத்திற்கும், வீட்டிற்கும் ஓயாத அலைச்சல்; வழக்கறிஞர்களின் பிடுங்கல்; சாட்சிக்காரர்களின் சிக்கல், ஆக, எப்படியோ செல்வம் பனிக்கட்டிபோல கரைந்து கொண்டே போகிறது. மற்றும் சிலர் நோய்களை விட்டும், வழக்குகளை விட்டும் தப்பித்துக் கொண்டாலும் அவர்களுக்குப் பிறக்கும் செல்வ மக்கள் அந்தச் செல்வத்தை தமது ஊதாரித்தனத்தால் கரைத்து விடுவதைக் கண்டு ஓட்டாண்டியாகிவிடுகின்றனர். வருடக்கணக்கில் சேர்த்த செல்வம் சில மாதங்களிலே மிக மோசமான வழிகளிலே போய் ஒளிந்து கொள்கின்றது.

இவையெல்லாம் இன்று உண்மையாக நடக்கக்கூடியவை! எத்தனையோ நபர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டும், தாம் சேகரித்த செல்வத்தை தமது கரங்களாலேயே நல்ல வழிகளில் செலவழியாது பத்திரப்படுத்தி இறந்துவிடுகின்றனர். ஆக, எந்தப் பொருள் ஆகாத வழிகளில், இலஞ்சம், ஊழல், சூது, வட்டி, போன்ற பெரும் பாவங்களின் அடிப்படையில் சம்பாதிக்கப்படுகிறதோ நிச்சயம் அப்பொருள் அப்படிச் சம்பாதித்தவர்களுக்கே கேடாய் அமையும் என்பதில் ஐயமில்லை! நாம் நல்ல வழியில் சம்பாதித்து நல்ல வழியில் செலவு செய்வோமாக! அதற்கு வல்ல நாயகன் நமக்கு நல்லருள் புரிவானாக! ஆமீன்

வியானி நஸீர்-அக்குறணை

## கவிதைப்போட்டி இல-120

### பரிசுக்குரிய கவிதை

### தொலைந்தது முகவரி!

வாழ்வது சோகம்
வாட்டிடும் சுமைகள்!
வெம்பிச் சோர்ந்தது
நம்பிக்கை நாட்கள்!
முகங்களில் போர்வை
மனங்களில் நெருப்பு!
அந்தர இருளில்
தொலைந்தது முகவரி!

நஜீமா அஹமட், கல்முனை-04.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**'முகமூடி'**

மூடி மறைத்து வாழ-அங்கு
கால நிலை அப்படி.
மூடி மறைந்து வாழ-இங்கு
சூழ்நிலை இப்படி!

- றோஸ், பண்டாரவளை-

**இழப்பின் தாக்கம்**

இல்லத்தை வெள்ளம் அள்ள,
இனியமக்கள் அதில் இறக்க,
உள்ளத்தை சோகம் தாக்க,
ஊமைகளாய் நிற்கின்றோம்!

திருமதி.க.கமலாம்பிகை, வவுனியா.



**யார்....?**

இவர்கள்-
வறுமைக்கு வாழ்க்கைப்
பட்டவர்களா?
இல்லை
வஞ்சகர்களால்
வதைக்கப்பட்டவர்களா?

செல்வி.சுப்ரமணியம் வாணீஸ்வரி,
அப்பர்கலஹா.

**அகதியான அபலைகள்**

கோரயுத்த உருவில் வந்த
குலை நடுக்கும் அரக்கனுக்கு
பதியுடனே பாலரையும்
பரிதவிக்கப் பறிகொடுத்து
பதைபதைக்க அகதிகளாய்
பாதையிலே நடைபோடும்
பாவையர்கள் சோகமதை
தீர்ப்பவர்கள் யாருளரோ?

ஏ.எம்.முஸ்தபா, ஏறாவூர்-01.

**மானம் காக்க**

வீணான யுத்தத்தால்
வீடுவாசல் இழந்தோரின்
மானத்தைக் காப்பாற்ற
மறைதுணியும் உதவியதோ?

ச.மகாலிங்கம்-வெளிமடை.

**எங்கேயோ?**

பாதகப் போர் எங்கும்,
பரவிவிட்ட இவ்வேளை,
பூவுலகில் மாதருக்கு,
புகலிடம்தான் எங்கேயோ?

நஸ்பியா பஹுர்தீன், புத்தளம்.

**அகதியின் அங்கலாய்ப்பு**

சமாதானப் பேச்சு வார்த்தை
நடக்கப்போகிறதாம்...?
இங்கே கோடிக்கணக்கில்
மூச்சுக்கள் தொலைந்த பிறகு....!

தேன்மொழி-கொழும்பு.

**வேண்டாம்**

தனிமனித நிம்மதிக்காய்த்
தாழ் போடும் மனிதா!
இனியேனும் இத்தரைக்கு
இனிதென்ப தெளிதா?

முகம்மது தஹ்சான், நீர்கொழும்பு.

## கவிதைப் போட்டி இல-123



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 21.10.1995

-முகவரி- கவிதைப் போட்டி இல: 123 தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

**அகதியின் கதி....!**

குளிருக்கு போர்வை தந்தனர்;
குமுறிய வயிற்றுக்கு 'பார்சல்' தீனியிட்டனர்;
இருப்பதற்கு குடிசை தந்தனர்-இருந்தும்
இருண்டு போன எம் வாழ்க்கைக்கு
இனியார் தான் ஒளி தருவதோ?

ஷர்மி, கண்டி -

**சின்னம்**

மரணித்த
மனிதத்தின்
நிர்வாண
சின்னம்!

எம்.எல்.எம்.இர்ஷாத்,
ஹெம்மாத்தகம.

**அருகேயோ...?**

பொட்டிட்டுப் பூச்சூடி
சுட்டியாய் வந்துவிட்டு
சட்டென்று ஏன் மறைத்தாய்
அருகே "சென்றி பொயின்டோ?"

சுபாவரன், கண்டி.

## வாசகர் சாலை

பக்கங்களுக்குப் பக்கம் பக்கச் சார்பற்ற தகவல்கள் என்னை மிகவும் கவர்ந்தன.

உதாரணம்...தணிக்கை...தணிக்கை...
வளர்க உமதுபணி.

எல்.சத்தியமூர்த்தி-கொழும்பு-11.

மணியான முரசே!
உன் கண்கவர் அட்டையுடன்
பவனிவரும் உன்னை
காணாத கண்ணென்ன
கண்ணோ!

இராமாயணம் ஆரம்பமே "இராஜகுமார"னுக்கு புகழ் சேர்க்கிறது.

"தகவல் பெட்டி" அசத்தோ அசத்தல். "வாளின் கூர்மையை விட பேனாவின் கூர்மை மேலானது" இராஜதந்திரியின் அரசியல் அலசல் சோக்காய் இருந்தது.

செல்வன்கள்.ஸ்ரீரவி.குலசேகரன்,
ஷாஹீர்.ரம்சான்-இரத்தினபுரி.

எம்மனதை ஈர்த்துவிட்ட இனிய முரசே!

நீ சுமந்து வரும் அம்சங்கள் அத்தனையும் தேன்பலா சுவையே! பெரியோர் முதல் சிறியோர் வரை படிக்கத்தூண்டும் தினமுரசே,

உன்புகழ் உலகம் போற்றும் விந்தை இதுதானோ?

என்றும் உன் அபிமானிகள்
சுப்ரமணியம்.மீனா, தர்ஷினி,சிந்துஜா,முத்துராக்கு, கனகராஜா, சிவராஜா,காந்தன், சாமிளா, சகுந்தலா, சசி,சிவனு, செந்தமிழ் செல்வி,
உனுகலை எஸ்டேட், மேல்பிரிவு.

தேன்கிண்ணத்தில் செல்வி பஹீமாவின் கவிதை இனித்தது. அதிரடி அய்யாத்துரை அசத்திவிட்டார்.

சபாஷ்...!சபாஷ்...!சபாஷ்...!

ஏ.நஸ்புள்ளா, கிண்ணியா-06.

மடல் அனுப்பியவர்களில் இடமுள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

கல்பனா புவனச்சந்திரன்-கொட்டா வீதி, கொழும்பு-8.
எஸ்.கருணாநிதி-கரவெட்டி, மட்டக்களப்பு.
எம்.எம்.எம்.தாஹிர்-ஜித்தா, சவுதி அரேபியா.
ஆர்.நித்தியேஸ்வரன்-சின்மணையடி.
எம்.வை.இசட்.ஜெஸ்பின்-ஹெமத்தகம.
ஆர்.கண்ணன்-மன்னார் வீதி, புத்தளம்.
எம்.ஆர்.எம்.ஸர்ஜின்-வரக்காப்பொலை.
வி.யோகேந்திரன்-ரொரன்டோ, கனடா.
செல்வி.நிம்லா பர்வீன்-கிண்ணியா.
தி.திலகன்-ஹவாஎலியண்ட்ஸ், பண்டாரவளை.
செல்வி.சீத்தா தம்பிராஜா-சாம்பல்தீவு-05.
முர்ஸி அப்பால-பேருவளை.
செல்வி.மாலா-நம்பொட.
எம்.மனீனா-நெய்தல்நகர், மூதூர்-01.
எம்.பௌசுல் மாலித்தா-புத்தளம்.
ஆர்.பாலகிருஷ்ணன்-மாத்தளை.
செல்வி.ப.சுபா-டெமோரியா, பசறை.
மாத்தளை கமால்-திஹாரிய.
எப்.சல்மான் பாரிஸ்-கஹட்டோவிட.
பே.வாசமதி-வாழைச்சேனை.
கலாயுவன்-நீட்டம்புவ.
எம்.சிவகுமார்-காலி.
ஏ.எச்.ராஸிக் மொகமட்-ஏத்தாலை.
எம்.ஐ.எஃப்.பஸ்லா-கொச்சிக்கடை.
எஸ்.கவிதா-ராகுஹொ.
ஸலீல், இஷ்ராக்-திருதாலூர்-06.
எம்.ஆனந்த்-திருமலை.
செ.கமலதாசன்-மருதானை, கொழும்பு.
எம்.உஷா பிரசாந்தி-இறக்குவானை.



என் அபிமானத்துக்குரிய முரசே! குறிப்பாக "அன்டநோவ்" விமானம் பற்றியும் அதன் "பைலட்" பாக்கியநாதன் பற்றியும் நன்றாக விளக்கினீர். எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.கணேஷ், கல்குடா.

உள்ளதை உள்ளபடி உரைக்கும் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும், இராஜதந்திரியின் அலசலும் தினமுரசில் படுசூப்பர்! துணிந்து செயல்படும் தினமுரசின் சேவை தொடர வாழ்த்துகிறேன்!

சமீனா ஹுசைன், தர்கா நகர்.

"ப்ரிய" ரசிகனின் இலக்கியநயம் சிரிப்பதற்கு மட்டுமல்ல; சிந்திப்பதற்கும் வைத்தது. "இலக்கண நயம்" கல(கனி)ந்து "இலக்கிய நயம்" இனிக்கும்விதம், மகாபிரமாதம்! கூடவே, "அழகு தமிழில்; இனிய வடிவில்," ரசிகன் தரும் "கார்லோஸ்" தொடரும் "அதிகபட்ச சுவாரஸ்யம்!..."

கோட்டைமுனை-முத்துமணி-மட்டுநகர்.

முரசின் அசத்தல்களால் கிறங்கிப் போயிருக்கும் நாம் மயங்கிப் போக வாரந்தோறும் இராமாயணப் போட்டியா? வாவ்! முரசே உன்னை வாழ்த்த வார்த்தையின்றி வாடும் உன் அபிமானிகள் இவர்கள்-

எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத் - கொழும்பு-10.

பட்டுக்கோட்டை பிரபாகரின் தொடர்கதையின் முதல் அத்தியாயம் அடுத்த வாரத்திற்கான "விளைவறி வேட்கையை" விரைவாகத் தோற்றுவிக்கின்றது. ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

ஏ.எச்.ராஸின் மொகமட்-ஏத்தாலை.

வரவர சினிவிசிட்டில் சூப்பர் படங்களைத் தந்து எங்களை ஏன்சார் இனம் புரியாத இன்பவெள்ளத்தில் ஆழ்த்துகிறீர்கள்?

விஸ்ணுராஜா, பள்ளகெட்டுவ.

# அமெரிக்காவுக்குப் புலிகள் பாராட்டுத் தெரிவிப்பு

## ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று புகழாரம்

# போருக்கு மத்தியிலும் குடாநாட்டில் ஆட் திரட்டல்

**யாழ்-குடாநாட்டில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. அதேவேளையில் தமது அணிகளுக்கு ஆட்களை திரட்டும் வேலைகளையும் புலிகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.**

(யாழ் நிருபர் வர்மா)

### பிரசார வகுப்புக்கள்

யாழ்-குடாநாட்டில் இடி-மின்னல் தாக்குதலையடுத்து இதுவரை 163 உறுப்பினர்கள் பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர். ஆயினும் பலியான உறுப்பினர்களின் பதவித்தரங்கள் குறித்தோ, பலியானவர்களில் முக்கியமானவர்களும் அடங்குகிறார்களா என்பது தொடர்பாகவோ புலிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்த 3ம் திகதிவரை பலியான 163 புலிகளுக்காக 4ம், 5ம் திகதிகளில் யாழ் குடாநாடெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது.

யாழ்-குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஆட்பற்றாக்குறையே முக்கிய காரணம் என்று புலிகளது பிரசாரப் பிரிவினர் கூறிவருகின்றனர்.

ஆட்திரட்டல் நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதிகளில் செல்லும் இளைஞர்களைப் புலிகள் தமது வாகனங்களில் அழைத்துச் சென்று பிரசார வகுப்பு நடத்துகிறார்கள். அந்த வகுப்பின் பின்னர் இயக்கத்தில் சேர விரும்புவோர் மட்டும் புலிகளது முகாம்களில் தங்கவைக்கப்படுவார்கள். விருப்பம் தெரிவிக்காதோர் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

### அமெரிக்காவுக்கு பாராட்டு

புலிகள் அமைப்பினரால் யாழ்ப் பாணத்தில் வெளியிடப்படும் 'இன்சைட் ரிப்போர்ட்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் அமெரிக்காவுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் தென் ஆசியப் பிராந்தியத்துக்கான இராஜாங்க இணை உதவிச் செயலாளர் செல்வி றொபின் றஃபீல் தனது இலங்கை விஜயத்தின்போது தெரிவித்த கருத்துக்களையே 'இன்சைட் ரிப்போர்ட்' பாராட்டியுள்ளது.

"பிரச்சனையில் இருந்து மீள்வதற்கு இராணுவ நடவடிக்கை சிறந்த மார்க்கமாக முடியாது என்று றஃபீல் கூறியிருந்தார். வாஷிங்டன் நேரடியாக இதில் தலையிட விரும்பவில்லை என்ற கருத்தும் அவரது கருத்துக்களில் தொனித்தது.

இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை பிறநாட்டு அரசாங்கங்கள் நடுநிலையான மதிப்பீடுகளை வெளியிட வேண்டும் என்பதையே நாம் கூறிவந்துள்ளோம். இதைவிட அதிகமாகவோ குறைச்சலாகவோ அந்த நாடுகளிடம் இருந்து தமிழ் மக்கள் எதையும் எதிர்பார்க்கவில்லை.

செல்வி றஃபீல் கொழும்பில் 'செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்த கருத்துக்களில் இருந்து அமெரிக்கா புலிகள் தொடர்பாக விசேஷமான கருத்தைக் கொண்டுள்ளது என்பது புலனாகிறது. புலிகளைப் புறக் கணித்து, அவர்களுடைய நிலைப்பாட்டை அமெரிக்கா ஒதுக்கி வைத்துவிடவில்லை என்பதும் தெளிவாகிறது.

### பின்பற்ற வேண்டும்

அமெரிக்கா பல சர்வதேசப் பிரச்சனைகளில் எடுத்துவரும் நிலைப்பாடுகளை பல நாடுகள் பின்பற்றுகின்றன. இலங்கை இனப் பிரச்சனை தொடர்பாக அமெரிக்கா ராஜ தந்திர ரீதியில் நல்லிணக்கம் வாய்ந்த கருத்துக்களை தெரிவித்துள்ளது. ஏனைய வெளிநாட்டு ராஜதந்திரிகளும் மெய்யான நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்."

இவ்வாறு புலிகள் அமைப்பின் 'இன்சைட் ரிப்போர்ட்' டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம், திருமதி. அடேல் பாலசிங்கம் ஆகியோரின் நேரடிக் கவனிப்பில் 'இன்சைட் ரிப்போர்ட்' மாதாந்தம் வெளியிடப் பட்டு வருகிறது.

# ஈ.பி.டி.பி. தலைவருக்கு குறி!

## கொழும்பு இல்லம் மீது தாக்குதல்

**9.10.95** அன்று இரவு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் இல்லத்தின் மீது இனம் தெரியாத ஆயுதபாணிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக அறியப்படுவதாவது: ஈ.பி.டி.பி.யின் பிரதான அலுவலகம் கொழும்பு பாக் றோட்டில் இருக்கிறது. அதிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.யின் இல்லம் இருக்கிறது.

9.10.95 அன்று இரவு சரியாக 10.10 மணியளவில் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.யின் இல்லம் மீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதனையடுத்து டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலர்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அந்த நேரம் வெடிகுண்டுவீசி இல்லக் கதவு தகர்க்கப்பட்டது. கைக் குண்டுகளும் இல்லத்திற்குள் வீசப்பட்டன.

அச்சமயம் டக்ளஸ் தேவானந்தாவின் மெய்காப்பாளர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி டக்ளஸ் தேவானந்தாவை இல்லத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றனர்.

சுமார் பதினைந்து நிமிடம் இடம்பெற்ற சமரில் டக்ளஸ் தேவானந்தாவின் மெய்க்காப்பாளர்கள் நால்வர் பலியானார்கள். இல்லக்கதவருகே இரத்தம் கொட்டியிருந்தது. அதனால் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் சிலரும் காயமடைந்துள்ளனர் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

தாக்குதலுக்கு காரணமானவர்கள் யார் என்பதை உடனடியாக உறுதிப்படுத்த இயலவில்லை.

ரகு (பாலன் செல்வக்குமார்), குட்டி (அரசானந்த் உதயானந்த்), தாஸ்(ஆசைப் பிள்ளை மோகனதாஸ்), வரதன் (கிருஷ்ண பிள்ளை உதயகுமார்) ஆகியோரே பலியான ஈ.பி.டி.பி. உறுப்பினர்களாவர்.

சம்பவம் பற்றி அறிந்தவுடன் ஜனாதிபதி சந்திரிக்காவும், மற்றும் அமைச்சர்களும் டக்ளஸ் தேவானந்தாவோடு தொடர்பு கொண்டு நிலமையைக் கேட்டறிந்தனர். ஜனாதிபதியின் உத்தரவையடுத்து ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு உடனடியாக இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டது. வீதித்தடைகள் போடப்பட்டு வாகனங்கள் சோதனையிடப்பட்டன.

# உணவு நெருக்கடி ஏற்படும் அபாயம்

## தங்க இடமின்றித் தவிக்கும் அகதிகள்

(யாழ் நிருபர் வர்மா)

இடி-மின்னல் தாக்குதல் நடவடிக்கையை அடுத்து 94 ஆயிரம் குடும்பங்கள்- கிட்டத்தட்ட 3 1/2 இலட்சம் மக்கள் யாழ் குடாநாட்டில் இடம் பெயர்ந்துள்ளனர் என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு. சந்திரகுமார் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

முரசுக்கு கிடைத்துள்ள தகவல்களின் படி இடம்பெயர்ந்த மக்கள் தென்மராட்சிப் பகுதியில் குவிந்துள்ளனர். தென்மராட்சியிலும் பாதுகாப்பற்ற நிலை உருவாகக்கூடும் என்று அஞ்சும் பல குடும்பங்கள் கிளிநொச்சிப் பகுதிக்கு சென்றுள்ளன. கிளிநொச்சியிலுள்ள அக்கராயன்குளத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல தங்கியுள்ளன.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கவில்லை. ஆனாலும் கோப்பாயில் இருந்து மட்டும் 10 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளன.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டில் வந்துள்ள பகுதிகளிலும் மக்கள் தங்கியுள்ளனர். அவர்களின் எண்ணிக்கை பற்றி சரியான தகவல் கிடைக்கவில்லை. கோவில்களில் அவர்கள் தங்கவைக்கப் பட்டுள்ளதாக தெரிகிறது.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களில் 50 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் முகாம்களிலும், வீதியோரங்களிலும் தங்கியுள்ளனர். கடந்த 5ம் 6ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கடும் மழை கொட்டியபோது அவர்களது நிலை மோசமாகியது. சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளன.

தென்மராட்சியில் அகதிகள் சென்று குவிந்து வருவதால் முகாம்களிலும், வீடுகளிலும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒரு வீட்டில் மூன்று குடும்பங்கள் என்ற ரீதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர். மலசலகூட வசதியின்மையால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் உணவு நெருக்கடி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கையிருப்பில் இருந்த மாவு தீர்ந்துவிட்டது. அதனால் பாண் பேக்கறிகள் மூடப்பட்டுவிட்டன. வர்த்தகர்கள் சிலர் கோதுமை மாவைப் பதுக்கி கொள்ளை இலாபத்தில் விற்பனை செய்கின்றனர்.

யாழ்-குடாநாட்டில் செம்மண் பிரதேசத்தில்தான் பயிர் செய்கைகள் பிரதானமாக நடப்பதுண்டு. செம்மண் பிரதேசத்தின் பெரும்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நிலமை இவ்வாறு தொடருமானால் குடாநாட்டில் இம்முறை பருவகால மழை பொழிந்தாலும்கூட பயிர்ச்செய்கையில் கடும் வீழ்ச்சி ஏற்படும். மரக்கறி வகைகளை வன்னிப்பிரதேசத்தில் இருந்தும், கொழும்பில் இருந்தும் தருவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

# உபவேந்தர் நியமனத்தில் சர்ச்சை

(மட்டக்களப்பு நிருபர்)

**கி**ழக்கு பல்கலைக்கழக புதிய உப-வேந்தர் நியமனம் தொடர்பாக பல்கலைக்கழக கவுன்சிலின் சிபாரிசு பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பலராலும் எதிர்பார்க்கப்பட்ட வண. பிதா பேராசிரியர் ஜீ.எப். ராஜேந்திரம் அவர்களின் பெயரை கவுன்சில் நிராகரித்தது காரணமாகப் பல்கலைக்கழகக் கவுன்சிலின் மீது பல்கலைக்கழக மாணவர்கள் சீற்றம் கொண்டிருப்பதுடன் அதனைக் கலைக்குமாறு சுவரொட்டிகளை ஒட்டியிருக்கிறார்கள்; துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் ராஜேந்திரம் அவர்களை உப-வேந்தராக்க வேண்டும் என்று திரை மறைவில் முனைந்து செயற்பட்ட பீடாதிபதி ஒருவர் கவுன்சில் கூட்டத்தில் வழிமொழியாது விழி பிதுங்கி நின்றது குறித்தும் மாணவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய உப-வேந்தர் பேராசிரியர் சி.சந்தானம் அவர்களின் பதவிக்காலம் இம்மாதம் 31ம் திகதியுடன் முடிவடைகிறது. பல்கலைக்கழக சட்டவிதிகளின்படி பல்கலைக்கழக கவுன்சில் சிபாரிசு செய்பவர்களில் ஒருவரையே ஜனாதிபதி நியமனம் செய்வார். விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மனோ சபாரத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரவிந்திரநாத், முகாமைத்துவ பீடாதிபதி ரகுராகவன் ஆகியோரின் பெயர்களையே கவுன்சில் சிபாரிசு செய்துள்ளது.

இவர்களில் பேராசிரியை செல்வி மனோ சபாரத்தினம் அவர்களே கிழக்குப் பல்கலைக் கழக புதிய உப- வேந்தராக நியமிக்கப்பட இருப்பதாக தெரியவருகிறது. அவ்வாறு அவர் நியமிக்கப்பட்டால் இலங்கையின் முதலாவது பெண் உப-வேந்தராக விளங்குவார்.

# பகலுணவு முத்திரை ரத்து

## மட்டக்களப்பு மாணவர்கள் அவதி

(ஏறாவூர் நிருபர்)

**வ**றுமை நிவாரண ஆணையாளர் நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும், அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், கூட்டுறவு, சமூக சேவை, நிருவாகப் பகுதியினருக்கும் அனுப்பிவைத்துள்ள 1995.09.12ந் திகதிய 106ம் இலக்க வறுமை நிவாரண சுற்று நிருபத்தின்படி 'சமுர்த்தி' நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் 1995 ஆகஸ்ட் 01ம் திகதியிலிருந்து வறுமை நிவாரண உணவு முத்திரை நிகழ்ச்சித் திட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அந்தப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வறுமை நிவாரண உணவு முத்திரையும், மண்ணெண்ணெய் முத்திரையும் இதன்பின்னர் செல்லுபடியற்றதாகும். இத்துடன் மேலதிக உணவு முத்திரை நிகழ்ச்சித் திட்டமும் 1995 ஆகஸ்ட் மாதத்திற்கு மேல் நீடிப்புச் செய்யப்படமாட்டாது. இதன் பின்னால் நாடு முழுவதற்கும் நடைமுறைக்கு வரும்படி 1995 செப்டம்பர் மாதத்திற்குரியதும் அதன் பின்னர் உள்ளதுமான மேலதிக உணவு முத்திரை அட்டைகள் இரத்துச் செய்யப்பட்டதாகக் கவனத்திற் கொள்ளப் படும்' என்று சுற்று நிருபம் குறிப்பிடுகிறது.

இதேவேளை 'சமுர்த்தி' நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைக்கு வராத மட்டக்களப்பு மாவட்டத்திலும் கடந்த செப்டம்பர் மாதம் தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பகலுணவு முத்திரை (மேலதிக உணவு முத்திரை நிகழ்ச்சித் திட்டம்) இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனால் டிசம்பர் வரையுள்ள 4 மாதகால உணவு முத்திரைகளை கையில் வைத்துக் கொண்டு மாணவர்கள் அலைகிறார்கள்.

ரத்துச் செய்யப்பட்ட செப்டம்பர் மாத பாடசாலைப் பகலுணவு முத்திரைக்கு உணவுப் பொருட்களை வழங்கிய கூட்டுறவுக் கடைமுகாமையாளர் ஒருவர் ரூபா 25,000 செலுத்த வேண்டியேற்பட்டது. ரத்துச் செய்யப்பட்ட உணவு முத்திரையை ஏற்க ஏறாவூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கம் மறுத்ததாலேயே அவர் இங்ஙனம் தனது பணத்தைச் செலுத்த வேண்டியேற்பட்டது.

# கனடாவில் தற்கொலை!

## இலங்கைப் பெண்கள் முன்னணியில்

(ஏறாவூர் நிருபர்)

**க**னடாவிலுள்ள சர்வதேசப் பெண்கள் ஆடைத்தொழிலாளர் சங்கத்தின் வெளிக்களப் பணி அமைப்பாளரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருமான செல்வி.றெஜி டேவிட் ஒரு மாதகால இலங்கை விஜயத்தைமுடித்து கனடா திரும்பியுள்ளார்.

அவர் தனது இலங்கை விஜயத்தின் போது பல சமூகநல அமைப்புக்களுக்கும், மனித உரிமை அமைப்புக்களுக்கும், பெண்கள் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும், அகதி முகாம்களுக்கும், ஆடைத் தொழிற்சாலைகளுக்கும் சென்றிருந்தார்.

'கனடாவிலும் வாழும் இலங்கை மக்கள் தமது சொந்த சமூகத்தினரால் பல பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள். அதிலும் கூடுதலாகப் பெண்கள் தமது கணவன்மாரின் தொல்லை தாங்க முடியாது மாடிகளிலிருந்து குதித்தும், ஓடும் புகைவண்டிமுன் பாய்ந்தும் தற்கொலை செய்துகொள்கிறார்கள். சில பெண்கள் சித்திரவதைத் துன்புறுத்தலுக்கும் ஆளாகிறார்கள். தகவல்களின்படி கனடாவின் தற்கொலைப் பட்டியலில் இலங்கைச் சமூகத்தினரே முன்னணி வகிக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

எனினும் இதுவிடயமாக கனடாவிலுள்ள பல பெண்கள் அமைப்புக்கள் அயராது பணியாற்றி இத்தகைய பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொண்டு வருகின்றன.'

# பலியான கடற்புலிகள்

**2.10.95** அன்று முல்லைத்தீவுக் கடலில் நடைபெற்ற கடற்சமரில் தமது தரப்பில் பலியானவர்கள் குறித்து புலிகள் வெளியிட்டுள்ள பெயர் விபரங்கள் வருமாறு:

கடற் கரும்புலி மேஜர் அருமை (செல்லத்துரை விஜயானந்தம்) புத்துவெட்டுவான், கிளிநொச்சி. கடற் கரும்புலி மேஜர் தணிகை (கணபதிப்பிள்ளை வதனா) ரக்காவீதி, சுண்டுக்குளி. நளாயினிபடையணிப் பொறுப்பாளர் (கடற்புலி) லெப்ரினன்ற் கேணல் இளையநிலா (செல்வராசா றாகிணி) பூநகரி. கடற்புலி கப்டன் சுஜீவன் (இராசரத்தினம் இராசேந்திரன்) மட்டக்களப்பு. கடற்புலி லெப்ரினன்ட் அமுதன் (ஏகாம்பரம் குலசிங்கம்) வல்வெட்டித்துறை ஆகியோரது பெயர்கள் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளன.

# உணவு அனுப்பக் கோரிக்கை

**வ**டபகுதிக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பக் கோரி மன்னார், வவுனியாவைச் சேர்ந்த 10 ஆயிரம் தாய்மார்களிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. 75 கிராமங்களில் பெறப் பட்டுள்ள கையொப்பங்களோடு கூடிய மகஜரை றோமன் கத்தோலிக்க தேவாலயம் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது.

# ஒரு கோடி ரூபாயில் வைரக் கிரீடம்

## 60 இலட்சம் ரூபாயில் தோள் பட்டை

**இ**ந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு பக்தர்கள் பெருந்தொகையான பெறுமதியுள்ள காணிக்கைகளை செலுத்துவது வழக்கமாகும்.

இலங்கையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் திருப்பதி ஏழுமலையானுக்கு இந்திய பெறுமதியின்படி கிட்டத்தட்ட 55 இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள கிரீடத்தை வழங்கியுள்ளார். நமது பெறுமதிப்படி கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய். வைரம், நீலக்கல், சிவப்புக்கல் பதித்துள்ள 2 கிலோ எடையுள்ள கிரீடம் அதுவாகும்.

அதேபோல மற்றொரு பக்தர் சங்கு சக்கரம் பதித்த தோள் பட்டை ஒன்றை திருப்பதி ஏழுமலையானுக்கு வழங்கியுள்ளார். அதன் பெறுமதி நமது நாட்டு பணமதிப்பின்படி 60 இலட்சம் ரூபாய். அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படவில்லை.

ஒன்றரை கிலோ தங்கத்தில் 44.5 காரட் வைரம், 35 காரட் ரூபி, 18 காரட் சபையர் போன்ற வைரங்களால் அந்த தோள்பட்டை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தோள்பட்டையை பார்வையிட பக்தர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# ஜெயலலிதாவோடு புலிகளுக்குத் தொடர்பா?

"**த**மிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதாவுக்கும், புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே தொடர்பிருப்பதாக கூறப்படும் கருத்துக்கள் அபத்தமானவையாகும். தமிழ்நாட்டில் தமது சொந்த அரசியல் இலாபங்களுக்காக சில சக்திகள் அவ்வாறான பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. தமிழக முதல்வரோ அல்லது தமிழக மக்களோ இலங்கையில் வன்முறை வளர்வதை விரும்பவில்லை." இவ்வாறு இலங்கை வந்திருந்த தமிழக சட்டமன்ற சபாநாயர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

"இலங்கையில் அப்பாவி தமிழ் மக்களுக்கு போரில் ஏற்படும் இழப்புக்கள் குறித்து நாம் அனுதாபம் கொண்டிருக்கிறோம். அதே சமயம் புலிகளது தீவிரவாதத்தையும் நாம் ஆதரிக்க முடியாது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'இந்து' கண்டனம்

இலங்கையில் ஜனாதிபதி சந்திரிக்காவின் தலைமையிலான அரசாங்கம் குறித்து பாராட்டுக்களை தெரிவித்துவரும் இந்தியப் பத்திரிகைகளில் ஒன்று 'இந்து'. இந்தியாவின் பிரபல ஆங்கில தினசரியான 'இந்து' பத்திரிகைத் தணிக்கை முறையைக் கண்டித்துள்ளது.

# மூவரைக் காணவில்லை

**7.10.95** அன்று யாழ்-குடாநாட்டிலுள்ள குருநகர் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1. பாற்றிக் ஜெகன் (வயது 29) 2. கிறிஸ்தோபர் ஜெயசீலன்(வயது 30) சண்முகம் நடராஜா (வயது 29) ஆகியோரே காணாமல் போனதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

# பத்தாண்டுக்குப் பிறகு பஞ்சாயத்துத் தேர்தல்கள்!
## செல்வியின் செல்வாக்கைத் தீர்மானிக்கும் களம்!

தமிழ்நாட்டில் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதியும், மூன்றாம் திகதியும் பஞ்சாயத்து தேர்தல்கள் இரு கட்டமாக நடைபெற உள்ளன. பிரதமர் நரசிம்மராவின் உத்தரவுப்படியே பஞ்சாயத்து தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

1986ம் ஆண்டு ஜனவரிமாதம் பஞ்சாயத்து தேர்தல் தமிழ்நாட்டில் கடைசியாக நடந்தது.

12,583 கிராம பஞ்சாயத்துக்கள், 384 பஞ்சாயத்து யூனியன், 22 மாவட்ட பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல்மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் 3 கோடியே 62 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் பஞ்சாயத்து அமைப்புக்களில் மட்டும் 2 கோடியே 43 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் வாக்களிக்க தமிழ்நாடு முழுவதும் 55 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. ஒருவர் நான்கு வாக்குப் போடவேண்டும். வாக்குப் பதிவு பத்து மணிநேரம் நடைபெறும். பஞ்சாயத்து தேர்தலை நடத்தி முடிக்க 32 கோடி ரூபாய் (இந்திய பணமதிப்பில்) செலவாகும். வாக்காளர் பட்டியல் அச்சடிக்க மட்டும் இரண்டு கோடி ரூபாய் செலவாகும். வாக்குப் பெட்டிகளுக்கு 2 கோடி ரூபாய் செலவாகும்.

பஞ்சாயத்து தேர்தல் முடிவுகள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி குறித்து தமிழக மக்களின் கணிப்பை நாடி பிடித்தறிய ஒரு வாய்ப்பாக அமையும். அடுத்துவரும் பொதுத்தேர்தல், தமிழக சட்டமன்ற தேர்தல்களுக்கும், கட்சிகளது கூட்டணிகளை தீர்மானிக்கவும் பஞ்சாயத்து தேர்தல்கள் ஒரு வெள்ளோட்டமாக இருக்கப் போகின்றன.

நவம்பர் 3ம் திகதி பஞ்சாயத்து தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

## காட்டூண் மூலை




# ரஜினிகாந்த் மீது கண்ணப்பன் தாக்குதல்
## அரசியல் தெரியாத ரஜினி விமர்சனம் செய்வதா?

தற்போது அரசியலில் குதிக்கும் எண்ணமில்லை என்று ரஜினிகாந்த் அறிவித்தார். ஆனால், எப்போதுமே அரசியலுக்கு வரமாட்டேன் என்று அவர் கூறவில்லை. தருணம் பார்த்து ரஜினி அரசியலில் குதிக்கக்கூடும் என்று பேசப்படுகிறது. அரசியலில் தற்போது நாட்டமில்லை என்று கூறியபோதும், ஜெயலலிதா ஆட்சிமீது குறை கூறியிருந்தார் ரஜனிகாந்த். அதனையடுத்து தமிழக அமைச்சர் கண்ணப்பன் ரஜினியை வசைபாடி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

"தன்னை ஒரு உத்தம புத்திரன் போல வெளிக்காட்டி குழப்பத்தின் மொத்த உருவமான ரஜினிகாந்த் வெளியிட்ட அறிக்கை கேலிக்குரியதாகும். புரட்சித் தலைவி பற்றிப் பேசுவதற்கு இவருக்கு என்ன உரிமை இருக்கிறது. அரசியல் அடிச்சுவடியோ, அரச நிர்வாகம் பற்றியோ தெரியாத ரஜினிகாந்த் புரட்சித் தலைவிக்கு புத்திசொல்வதற்கு அருகதையற்றவர்.

ஊருக்குத்தான் உபதேசமா தனக்கில்லையா? ரிஷிகேசம் செல்பவர்கள் எல்லாம் முனிவர்களாக முடியாது. எதிரிகளைக் களத்தில் சந்திப்பது எப்படி என்பதும், அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவது எப்படி என்பதும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அறியாததல்ல. ரஜினிகாந்த் நடிப்பதை சினிமாவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். நாட்டுமக்கள் முன் கபட நாடகம் வேண்டாம். இவ்வாறு கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

### ரஜினி வக்கீல்கள் சங்கம்

ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவேண்டும். புதுக் கட்சி தொடங்க வேண்டும். என்று வலியுறுத்தி சென்னையில் சட்டத்தரணிகள் உண்ணாவிரதம் இருந்தனர். 'அகில இந்திய ரஜினி வக்கீல்கள் பேரவை' என்னும் அமைப்பையும் உருவாக்கியுள்ளனர்.

# தேர்தலில் போட்டி தெரிவில் விட்டுக் கொடுப்பு
## அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒரு குமுறல்

கடந்த தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க சந்தர்ப்பம் இருந்தது. இதற்காக சில தமிழ் பொதுநல அமைப்புகள், இயக்க அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இம்மாவட்ட தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் கட்டுக்கோப்புடன் வாக்களிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கின. அதற்காக எல்லோரும் சேர்ந்து ஒரு சுயேச்சைக்குழுவை நிறுவி தேர்தலில் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் நடந்தது ஒவ்வொரு இயக்கங்களும், கட்சிகளும், சுயேச்சைக் குழுவும் போட்டிபோட்டு தேர்தலில் குதித்தார்கள். வாக்குகளை சிதற வைத்து ஒரு தமிழ் பிரதிநிதியைக்கூட தேர்ந்தெடுக்க முடியாதபடி செய்தார்கள். இப்போது மக்களை எந்த உதவியும் பெறமுடியாமல் அரசியல் அனாதையான நிலைக்கு ஆளாக்கி இருக்கிறார்கள். சுயநல அரசியல் நாடகம் ஆடிய நடிகர்கள் தங்கள் துரோகச் செயலை எண்ணிப் பார்ப்பார்களா?

சுயேச்சைக்குழுவில் கேட்டு பிரதேச வேறுபாடு விதைகளை விதைத்து தனக்குத் தான் வெற்றி கிட்டும் என்று எண்ணி தோல்வியை தழுவிய கோபால கிருஷ்ணன் என்பவர், அரசியல்கட்சியில் கேட்ட முதல் வேட்பாளர் தோற்றதே போதும் என்று மகிழ்ந்தார். இவர்கள் திட்டம் போட்டு செய்த சதி அம்பாறை மாவட்டமக்களை நிர்க்கதியாக்கி விட்டது.

இப்போது அரசியல் தீர்வில் எங்கள் உரிமையைப் பேச யாருமில்லை. தேர்தல் தொகுதி பிரித்த சாலப்பகுதியிலும் யாரும் எங்களுக்காக சாதகமாக எதுவும் செய்ய முன்வரவில்லை. இப்போதும் அதேநிலை. நீண்டகால அரசியல் அனாதையாக போய்க் கொண்டிருக்கின்றோம். ஏன் இந்த பாரபட்சம். நாங்கள் தமிழர்கள் இல்லையா?

சந்தர்ப்பம் பார்த்து இங்கு வந்து குழப்பியடித்து விட்டு நழுவிப்போகும் அரசியல் வாதிகளுக்கும், இயக்கங்களுக்கும் இன உணர்வே கிடையாதா? தேர்தல் காலத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மனம் வரவில்லை. இப்போது அரசியல் தீர்வில் மட்டும் தமிழ் மக்களின் அபிலாசைகளை விட்டுக்கொடுக்க மனம் வந்ததையிட்டு என்னவென்று சொல்ல? சந்தர்ப்பவாத அரசியல் நடாத்தும் அரசியல் வாதிகளை நம்புவதைவிட சாவது மேல் என்ற உணர்வுடன் எக்கெதியும் இல்லாமல் வாழ்கின்ற மக்களுக்கு உங்கள் பத்திரிகை மூலம் தமிழ் அரசியல் வாதிகளின் சிந்தனையை எங்கள் பக்கம் திருப்பச் செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

எ.சண்முகராசா, திருக்கோயில்


## உடனடி வேலைவாய்ப்பு

ஜோர்தான், அபுதாபி நாடுகளுக்கு வீட்டுப்பணிப் பெண்களாக செல்வதற்கு மேற்குறிப்பிட்ட நாட்டு முகவர்களால் நேரடியாக தெரிவு செய்கிறார்கள்.

சம்பளம் ஜோர்தான் - 100 அமெரிக்க டாலர்
அபுதாபி - 450 தினாம்ஸ்

இலவச உணவு, தங்குமிட, மருந்துவ வசதிகள். இரண்டு வருட ஒப்பந்தம், ஒப்பந்த முடிவில் இலவச பயணசீட்டு, இரண்டு வாரங்களில் பயணம் அரசாங்கக் கட்டணம் மட்டும்

பாஸ்போட்,
கலர்படம் 1,
பாஸ்போட் அளவு படம் 3
உடன் நேரில் வரவும்.

**RAVI TRAVELS & TOURS**

245, Jampetah Street,
Colombo 13.

AL/1157/ADVT/01/95

## விளம்பரப் பகுதி

**DRESSMAKING**
தையல் வகுப்பு

Full Course 1 month
Blouse Jacket
Shalwar Frocks
also
Cake icing Flower making
hairstyling beauticulture

AMS - Wellawatte - Opp. Roxy
571/10 1/1, Galle Rd, T/508062

எமது புதிய கல்வி நிலையத்தில்
ஆண்டு 4–11 வரை
கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம்
ஆகிய பாடங்கள் சிறப்பாக கற்பிக்கப்படுகிறது.
தொடர்பிற்கு:
N. THANANJEYAN
NO, 10, P.T.DE SILWA MAWATHA,
OFF STATION ROAD,
DEHIWALA


# தெரு விளக்குகள் இறந்துவிட்டன

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகள் பலவற்றில் இரவில் தெரு விளக்குகள் எரிவதில்லை. இதனால் பொதுமக்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அதுமட்டுமன்றி அடிக்கடி மின்சாரம் நின்று போவதும் இங்கு சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. வாரத்துக்கு மூன்று அல்லது நான்கு தடவைகளாவது முறை வைத்துக் கொண்டு மின்சாரம் நின்றுபோய் விடுகிறது.

இக் குறைபாடுகள் சம்பந்தமாக பொதுமக்கள் நகரசபையிடம் முறையிட்டால் அவர்கள் மின்சாரம் தங்கள் கட்டுப்பாட்டில் இல்லையென்று கைவிரித்து விடுகிறார்கள். மின்சாரச் சபையிடம் முறையிட்டாலோ ஏனோ தானோ என்று இருந்து விடுகிறார்கள்.

அதுபோலவே உப்புவெளி வீதியில் இரவில் மின்சாரம் இல்லை. பாதையும் சீராக இல்லை பகலில் நடந்து செல்வதற்கே உதவாத இந்த வீதியில் இரவில் மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள அஞ்சுகிறார்கள். பாம்புகள் நடமாட்டமும் இப்பகுதியில் அதிகமாக உள்ளது.

இது பற்றி பலர் பலதடவை முறையிட்டும் அப்பகுதிப் பிரதேசசபை உகந்த நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

# தேசிய தமிழ்ப் பத்திரிகையாளர் சங்க புதிய நிர்வாகிகள்

தேசிய தமிழ்ப்பத்திரிகையாளர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கொள்ளுப்பிட்டி ரண்முத்து ஹோட்டலில் நடைபெற்றது. நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

**போஷகர்கள்:** தர்மசிறி சேனநாயக்கா எம்.பி.
(சுற்றுலா தகவல்துறை அமைச்சர்)
அலவி மௌலானா எம்.பி.
(தகவல்துறை பிரதிஅமைச்சர்)
தெ.ஈஸ்வரன் (மொறிஸியஸ் தூதுவர்)
சேர்.டபிள்யு.அமீர் (டொமினிக்கன் தூதுவர்)

**தலைவர்:** ஆ.சிவநேசச்செல்வன்
**செயலாளர்:** தே.செந்தில்வேலவர்
**பொருளாளர்:** ஆர்.சிவகுருநாதன்
**உபதலைவர்கள்:** பொன்.இராஜகோபால் கவிஞர் மருதூர்க்கனி
**உபசெயலாளர்:** து.பாஸ்கரன்

**நிர்வாகக்குழுவினர்:** இரா.பத்மநாதன், இரா.செல்வராஜா, அருள்சத்தியநாதன், வி.பொன்னுத்துரை, ஆர்.சத்தியபாலன், மொழிவாணன், த.செந்தூரன், ஏ.மதுரைவீரன், கே.கோபால்சங்கர்.


## ஆங்கிலம் மூலம் ஆங்கிலம்

இதுவரை இங்கு கற்ற அனைத்து மாணவர்களினதும் பாராட்டைப் பெற்ற ஒரு புதிய அணுகுமுறையில்

**ஆங்கிலக் கல்வி!**

உயர் கல்வியா? சுய தொழில் முயற்சியா? உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளா?

இவையனைத்துக்கும் ஆங்கிலக் கல்வி இன்றியமையாததொன்றாகும்.

ஆங்கிலத்தில் உரையாட கூச்சமுடையவர்களுக்கும், ஆங்கிலத்தில் உரையாட முடியவில்லையே என்ற தாழ்வு மனப்பான்மை உடையவர்களுக்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

6 மாத காலத்தில் அச்சமின்றி உரையாடுவதற்கும்
இலங்கை அரசினால் நடத்தப்படும்
SPOKEN ENGLISH பரீட்சைக்கு
தயார் படுத்துவதற்குமான
முறையான பயிற்சி நெறி

மேலதிக விபரங்களுக்கு
MIRAJ INFORMATION SYSTEMS
196, D. S. Senanayake Veediya,
KANDY.

NOBODY TEACHES YOU THE WAY WE DO!

## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலர்? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28


## அமரர் கணபதி சுப்பிரமணியம்
10வது ஆண்டு நினைவஞ்சலி
தி.தி: 12.10.1995



அன்புள்ள எம் தலைவா!
எங்கும் எம் இதயங்கள்
என்றும் நினைந்துருக
நீங்கள் பிரிந்து சென்று
ஆண்டு பத்தாய்
நீண்டு முடிந்த தின்று!
நிலையாக எமது நெஞ்ச
அலைபாயும் கடல் நடுவே
நீங்காத நினைவாக
நிறைந்த தெய்வம் நீரன்றோ!
மறைவாக இருந்தாலும்
இறைவா நல்வழி காட்டு!
சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி: எஸ். செல்வமணி
மகன்கள்: கலீ,கமல்,விமல்
மகள்கள்: கமலினி, சுதா
மல்லாகம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இடி மின்னல்
# புலிகளின் தந்திரத்தில் ஒரு சறுக்கல்

ஒக்டோபர் முதலாம் திகதி யாழ்-குடாநாட்டில் இடி-மின்னல் நடவடிக்கையைப் படையினர் ஆரம்பித்தனர்.

வான் மழையை முந்திவிடும் அவசரத்தில் மூன்று படைப்பிரிவுகள் களத்தில் இறக்கிவிடப்பட்டன.

இடி-மின்னல் நடவடிக்கையில் இரண்டு விடயங்களை படைத்தலைமை கவனமாகத் திட்டமிட்டிருந்தது.

ஒன்று, முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கையில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் புலிகளது தந்திரோபாயத்தை முறியடிப்பதற்கான மாற்று வழி.

இரண்டாவது, மணலாற்றில் (வெலிஓயா) படையினருக்கு ஏற்பட்ட வெற்றியை படையினரின் உளவியல் ஆற்றலுக்கு பயன்படுத்துவது. அதனால் தான் மணலாற்றில் இருந்து பிரிகேடியர் ஜானக பெரேரா யாழ்-குடாநாட்டு போர்முனைக்கு கொண்டுவரப்பட்டார்.

ஒக்டோபர் முதலாம் திகதி அதிகாலையில் படையினரின் நடவடிக்கை ஆரம்பமானது.

முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது, படையினர் முன்னேறிச் சென்ற பகுதிகள் மூலமாக இம்முறை படையினர் முன்னேறவில்லை.

முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது, பலாலியில் உள்ள இராணுவ கூட்டுப்படைத் தளத்திலிருந்து தென்மேற்கு திசையில் படையினர் முன்னேறிச் சென்றனர்.

இடி-மின்னல் நடவடிக்கையில் பலாலியில் இருந்து தென்கிழக்குத் திசையில் படையினர் முன்னேறினார்கள்.

முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கைக்குப் பின்னர் படையினர் மேற்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளும் பலாலியின் தென்மேற்கு திசையிலேயே மேற்கொள்ளப்பட்டன.

படையினரின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் அவர்கள் தென்மேற்கு திசை மூலமே தமது அடுத்த பாரிய நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடும் என்று நினைக்கவைத்தன.

இதனால், பலாலியில் இருந்து தென்மேற்கு திசையில் இருந்த மல்லாகம், பண்டத்தரிப்பு, சித்தங்கேணி பகுதிகளில் இருந்து பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

படையினரது நடவடிக்கையை எதிர்பார்த்து புலிகளும் சில ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

படையினரது நடவடிக்கை ஆரம்பித்தவுடன் அப்பகுதிகளில் உள்ள மக்கள் உடனடியாக வெளியேறிவிட வேண்டும். அவர்களுக்கான தென்மராட்சியில் உள்ள முகாம்களில் சென்று தங்கவேண்டும்.

படையினர் திரும்பிச் சென்றவுடன் மீண்டும் தமது வீடுகளுக்குச் செல்லலாம் என்று புலிகள் அறிவித்திருந்தனர்.

இதனால் பலாலி முகாமுக்கு தென்மேற்கு திசையில் பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, மூளாய், சங்கானை, சண்டிலிப்பாய், அராலி போன்ற பகுதிகளில் இருந்த மக்கள் எப்போதும் இடம்பெயரத் தயார்நிலையில் இருந்தனர்.

அப்பகுதிகளில் பங்கர்கள் வெட்டி பதிலடி நடவடிக்கைக்கான ஆயத்தங்களிலும் புலிகளும் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக சண்டிலிப்பாயில் புலிகளால் பாரிய பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன. படையினரை உள்ளே வரவிட்டு பலத்த தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கான தயாரிப்புக்கள் செய்யப்பட்டிருந்தன.

அது தவிர, படையினரது நடவடிக்கை ஆரம்பித்தவுடன் சண்டை நடக்கும் பகுதிகளில் இருந்து பொது மக்கள் உடனடியாக வெளியேறவேண்டும் என்று புலிகள் கூறியதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

படையினரது முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்த ஷெல் தாக்குதல்கள் நடத்துவதற்கு புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

ஷெல் தாக்குதல்கள் நடத்தவேண்டுமானால் பொதுமக்கள் அப்பகுதியில் இருக்கக் கூடாது.

இத்தனை ஏற்பாடுகளையும் புலிகள் செய்து கொண்டிருந்த போது, படையினர் புலிகள் அதிகம் எதிர்பார்க்காத தென்கிழக்குத் திசை நோக்கி தமது நகர்வுகளை மேற்கொண்டனர்.

பலாலி விமானத்தளப் பகுதியை நோக்கி புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களும் படையினர் தென்கிழக்கு திசை நோக்கி முன்னேறியமைக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

தென்கிழக்கு திசையில் இருந்தே பலாலி கூட்டுப்படைத்தளத்தை புலிகள் நெருங்கிச் செல்ல முடிகிறது. அங்கிருந்தே தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

மோட்டார் ஷெல், அல்லது மென்ரகப் பீரங்கித் தாக்குதலின் சுடு தூரத்தை தாண்டிச் சென்று படைகள் நிலைகொண்டுவிட்டால் புலிகளால் விமானத்தளப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த முடியாது.

எனவே அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதிகளை நோக்கி படையணிகள் முன்னேறின.

முதல் இரண்டு நாட்களும் பெயரளவுக்கான எதிர்ப்பையே புலிகள் காட்டினார்கள். ஆவரங்காலோடு படையினரை தடுத்து நிறுத்தி திருப்பித் தாக்குவதே




புலிகளது நோக்கமாக இருந்தது.

தேடிச் சென்று தாக்கிவிட்டு திரும்பிச் செல்லும் நடவடிக்கையா, அல்லது குறிப்பிட்ட பகுதிகளை விடுவித்து நிலை கொள்ளும் நடவடிக்கையா என்பதை தீர்மானிக்கவும் புலிகளுக்கு அவகாசம் தேவைப்பட்டது.

ஆனால், தமது கட்டுப்பாட்டில் வந்த பகுதிகளில் தமது நிலைகளை கெட்டிப் படுத்துவதில் படையினர் ஈடுபடத் தொடங்கினர். புல்டோசர்கள் மூலமாக தற்காலிக பாதைகள் அமைக்கப்பட்டன. முன்னரங்க பாதுகாப்பு அரண்கள் உருவாக்கப்பட்டன.

வாசவிளான், அச்சுவேலி, புத்தூர், நவக்கிரி, ஆவரங்கால் போன்ற பகுதிகள் உட்பட சுமார் 24 கிலோ மீற்றர் சுற்றளவான பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

அடுத்தது கோப்பாய் நோக்கி படையினர் முன்னேறக்கூடும் என்று கருதப்பட்டதால் கோப்பாய் சந்திவரை தமது வீடுகளை விட்டு மக்கள் வெளியேறத் தொடங்கினார்கள்.

ஆவரங்காலைத் தாண்டிப் படையினர் முன்னேறுவதை எப்படியாவது தடுக்க வேண்டிய நிலைக்கு புலிகள் தள்ளப் பட்டார்கள்.

கோப்பாயில்தான் புலிகளின் மாவீரர் கல்லறைகள் இருக்கின்றன. மாவீரர் துயிலும் இல்லம் என்ற பெயரில் பலியான தமது உறுப்பினர்களின் உடல்களைப் புலிகள் அங்குதான் அடக்கம் செய்திருக்கிறார்கள்.

புலிகளது பொருளாதாரத் திட்ட மையங்களும் படையினரின் கட்டுப்பாட்டில் செல்லும் நிலையும் ஏற்பட்டுவிடும்.

படையினரின் நடவடிக்கை தாக்கிவிட்டுத் திரும்பிச் செல்வதல்ல. நிலைகொண்டு தொடர்ந்து முன்னேறுவதே என்றும் தெரிந்து கொண்ட புலிகள் பாரிய பதிலடி நடவடிக்கைக்கு திட்டமிட்டனர்.

ஒக்டோபர் 2ம் திகதி வரை நடைபெற்ற மோதல்களில் புலிகளது தரப்பில் எட்டுப்பேர் மட்டுமே பலியானதாகப் புலிகளால் அறிவிக்கப்பட்டது.

இரண்டு நாட்களும் கண்ணாமூச்சி விளையாட்டு மாதிரியான மோதல்தான். மூன்றாவது நாள் தான் உண்மையான மோதலுக்கு புலிகளது அணிகள் தயார்படுத்தப்பட்டன.

பிரபாகரன் நேரடியாக கவனித்து தாக்குதல் அணிகளை களத்தில் இறக்கினார்.

முன்னர் நடந்த புலிப்பாய்ச்சலில் யாழ்-மாவட்ட அணி, வன்னி அணி, சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு ஆகியவை தரைப் போரிலும், சூசையின் வழிநடத்தலில் கடற்புலிகள் கடற்சமரிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இம்முறை சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவும், யாழ்-மாவட்ட அணியும் தரைத் தாக்குதலில் இறக்கப்பட்டன.

முல்லைத்தீவில் கடற்புலிகளது தளத்திலிருந்து கடற்போருக்கான ஒரு அணியும் கடலில் இறக்கப்பட்டது.

**நாரதர்**

புலிப்பாய்ச்சல் போலவே இம்முறையும் தரையிலும், கடலிலும் இரு முனைகளில் தாக்கும் திட்டம் வகுக்கப்பட்டது.

தரைத்தாக்குதலில் மட்டும் சென்றமுறை புலிப்பாய்ச்சலில் பயன்படுத்தாத புதிய தந்திரம் ஒன்றை புலிகள் மேற்கொண்டனர்.

முதலில் ஒரு அணி புத்தூரில் நிலை கொண்டுள்ள படையினர்மீது பலத்த தாக்குதலை தொடுக்க வேண்டும். ஒரு கட்டத்தோடு தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பிவிட வேண்டும்.

முடியாமல் புலிகள் திரும்பிச் சென்றுவிட்டார்கள் என்று படையினர் நினைத்துக் கொள்வர். அல்லது புத்தூரில் மற்றொரு தாக்குதலை எதிர்பார்த்து அங்கு தமது பிரதான பலத்தை திருப்புவார்கள்.

அதே நேரம் வேறு திசையில் பலத்த அடியை ஆரம்பிக்க வேண்டும். அதுதான் புலிகளின் தந்திரம்.

ஆக, 3ம் திகதி இரவு 11 மணிக்கு புத்தூரில் புலிகள் நடத்திய முதலாவது தாக்குதல் ஒரு ஒத்திகையாகவும் இருந்தது. திசை திருப்பும் தந்திரமாகவும் இருந்தது.

அதிலிருந்து கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் தள்ளி அதிகாலை 2 மணியளவில் புலிகளது பாரிய கெரில்லாத் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

ஆவரங்கால், நவக்கிரி பகுதிகளில் 600க்கு மேற்பட்ட புலிகளைக் கொண்ட தாக்குதல் அணிகள், முன்னைய புலிப் பாய்ச்சல் நடவடிக்கைப் பாணியில் படையினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்றன.

படையினர் தமது முதல் அனுபவத்திலிருந்து புலிகளது ஊடுருவல் பாய்ச்சலை எதிர்கொள்ளும் வகையில் வியூகங்களை அமைத்திருந்தனர்.

அதுதவிர, மணலாற்று மோதலில் புலிகளது அணிகளை உள்ளேவரவைத்து தமது வியூகத்திற்குள் சிக்கவைத்த அனுபவமும் படையினருக்கு இருந்தது.

அந்த வியூகத்தை வகுத்து தாக்குதல் நடத்திய பிரிகேடியர் ஜானக பெரேராவும் போர் முனையில் இருக்கிறார் என்பதையும் புலிகள் கணக்கில் எடுக்கத் தவறியிருந்தனர்.

தமது கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஊடுருவிய புலிகளது அணிகளை தமக்கு வசதியான தருணத்தில் படையினர் எதிர்கொண்டனர்.

பலத்த மோதல் ஏற்பட்டது. படையினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வீடுகளும், வீட்டைச் சுற்றிக் கட்டியிருக்கும் சுற்றுமதில்களும் புலிகளது அணிகள் நிலை எடுத்துத் தாக்குவதற்கு உதவின. சமவெளியாக இருந்திருந்தால் படையினரது வியூகத்திற்குள் புலிகளது இழப்பு மேலும் அதிகமாக இருந்திருக்கும்.

ஒக்டோபர் நான்காம் திகதி அதிகாலை ஆரம்பித்த மோதலில் ஏற்பட்ட பலத்த இழப்புக்களை அடுத்து புலிகளது அணிகள் திரும்பிச் சென்றன.

தமது தரப்பில் 150 பேர் பலியானதாக புலிகளின் குரல் வானொலியில் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்கள்.

படையினர் தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 52 இராணுவத்தினர் பலியானார்கள் என்று இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க கூறியிருந்தார்.

ஒக்டோபர் 2ம் திகதி காங்கேசன்துறையிலிருந்து திருக்கோணமலை கடற்படை தளத்திற்கு சென்று கொண்டிருந்த தரையிறக்க கப்பலையும் டோராப் படகையும் முல்லைக் கடலில் வழிமறித்து கடற்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். கிட்டத்தட்ட ஆறுமணி நேரம் கடற்சமர் நடைபெற்றது.

கடற்புலிகளது தாக்குதலில் தரையிறக்க கப்பலுக்கு சிறு சேதம் மட்டுமே ஏற்பட்டதாகவும், 15 இராணுவத்தினரும், கடற்படை உத்தியோகத்தர்கள் 4 பேரும் பலியானதாகவும் 40 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

கடற்புலிகளைச் சேர்ந்த 5 பேரின் பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டனர். அதில் இருவர் கடற்கரும்புலிகள். ஒருவர் பெண் கடற்கரும்புலி. பலியான ஏனைய மூன்று கடற்புலிகளில் ஒருவர் பெண் கடற்புலி. கடற்புலிகளின் மகளிர் பிரிவுத் தளபதிகளில் ஒருவரான லெப்ரினன்ட் கேணல் இளையநிலா என்பவரே அவராகும்.

எனினும்-தரைச்சமரில் ஏற்பட்ட பலத்த பின்னடைவை கடற்சமரில் சந்திக்காமையானது புலிகளுக்கு ஓரளவு ஆறுதலான விஷயம்.

அதேநேரம், புலிகளது பழைய தந்திரோபாயங்களுக்கு படைத்தரப்பு பழக்கப்பட்டுவிட்டதால், வேறு புதிய தந்திரோபாயங்களை புலிகள் வகுக்க வேண்டியவர்களாகிறார்கள்.

மூன்றாம் கட்ட ஈழப்போரைப் புலிகள் பிரகடனம் செய்த பின்னர் இரண்டு பெரிய தோல்விகளை அவர்கள் சந்தித்துள்ளனர்..

புலிகளை நோக்கி முன்னேறும் நடவடிக்கையில் படையினர் பெற்றுள்ள முதலாவது வெற்றியாக 'இடி.மின்னல்' தாக்குதலில் பெற்றுள்ள பெறுபேறுகள் அமைந்துள்ளன.

இதுவரைகால படையினரது மனோநிலையும், புலிகள் தொடர்பாக படையினரிடம் இருந்த தயக்கங்களும் 'இடி.மின்னல்' நடவடிக்கை மூலம் துடைத்தெறியப் பட்டுள்ளன.

அதனால் படையினரது உற்சாகம் மேலும் அதிகரித்துள்ளது.

காதலில் முதல் முத்தம் போல, மோதலிலும் முதல் அடிதான் முக்கியமானது. முடியும் என்று ருசி கண்ட தரப்புக்கு அந்த உற்சாகமே பாதிப்பலமாகிவிடும்.

இதுவரை படையினரது மனோபலத்தை உயர்த்தும் பணியை படைத்தலைமை செய்துவந்தது.

இப்போது, தமது அணிகளது மனோபலத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் புலிகளது தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

அதனால்தான் தரைப்போரில் 150 பேர் பலியான செய்தியை சாதாரண சம்பவம் போல அறிவித்துவிட்டு, கடற்சமர் செய்தியைப் புலிகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட வேண்டியதாகியது.

ஒருயுத்தம் (war) என்பது பல சமர்களைக் (battle) கொண்டது.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் இரு சமர்களில் புலிகள் தோல்வி கண்டுள்ளார்கள். அதேசமயம் வடக்கில் மண்டைதீவுச் சமர், புலிப்பாய்ச்சல், கிழக்கில் நடந்த பல சமர்களில் புலிகள் வெற்றியும் கண்டுள்ளார்கள். அதேசமயம் கிழக்கில் சில சமர்களில் படையினரும் வெற்றி பெற்றார்கள்.

ஆனால், இந்த வெற்றி தோல்விகள் முழுமையான யுத்தத்தின் வெற்றி தோல்வியைக் கணிக்கப் போதுமானவையல்ல.

இரு தரப்பும் இன்னும்பல சமர்களைக் கண்டாக வேண்டும். எனினும் வடபுலப் போர்முனையில் தற்போது படைத்தரப்பினரின் கைகளே மேலோங்கியிருக்கின்றன.

ஆனால், இது முடிவல்ல. யுத்தம் தொடரும். புலிகள் தமது தந்திரோபாயங்களை மாற்றிக்கொள்வார்கள். பின்னர் அந்த தந்திரோபாயங்களுக்கு ஏற்ப படையினர் தமது வியூகங்களை வகுக்க வேண்டியிருக்கும்.

இந்த சமர்கள் மத்தியில் இடம் பெயர்ந்த மக்களினதும், இடம் பெயரப் போகும் மக்களினதும் கதிதான் மிகச் சோக மானது.

இதேவேளை கடும்மழை ஆரம்பமாவதும் புலிகளுக்கு ஒருவகையில் சாதகம்.

மழைக்காலம் முடிவடைவதற்கிடையில் தமது பதில்தாக்குதல்களை புலிகள் ஆரம்பிக்கவே செய்வர்.

எனவே-மெல்லத் தொடங்கிவிட்ட மழைக்காலம் யாழ் குடாநாட்டில் தொடர் சமர்களுக்கு வழி திறந்திருக்கிறது. மழைக் காலம் முடிவதற்கிடையில் போர்முனையில் ஒரு முடிவு தெரியும்.

# அதிரடி ஐயாத்துரை



எரியிற வீட்டில் பிடுங்கும் ஆட்களுக்குத்தான் பாருங்கோ காலம். இடம் பெயர்ந்து சனம் ஓடுப்பட்டுத் திரியுதுகள். கடைக்காரர் சிலர் கிடு கிடு வென்று விலைகளை உயர்த்திப் போட்டினமாம். யாழ்ப்பாணத்திலை சண்டையாலை கந்தலாகிப்போன சனத்திட்டை கறந்தே கோடிஸ்வரரான வியாபாரிகளும் இல்லாமல் இல்லை. அவைக்கு எப்பவும் காட்டிலை மழைதான்.

எங்கடை சனத்திலையும் தங்களுக்கு நோகாமல் சண்டை நடந்தால் கை தட்டி ஆரவாரம் செய்யிற ஆட்கள் இருக்கினம்தானே. அவையிலை சிலர் என்ன சொல்லுகினவாம் தெரியுமோ, "கோடி கோடியாக வாங்கிப் போட்டு உள்ளே வர விட்டுப் போட்டினம்." எண்டு முகாம்களில் இருந்து முணுமுணுக்கினமாம்.

தலைநகரிலை லேட்டஸ்ட் வதந்தி ஒண்டு உலாவுது. நீங்களும் கேள்விப்பட்டியளோ தெரியாது. முன்னாள் ஜனாதிபதி உயிரோடு தப்பி தலைமறைவாக இருக்கிறாராம். பிரச்சனைகள் இறுகினதாலை குண்டுவெடிப்பை சாட்டாக வைச்சு தப்பிப் போட்டாராம். தெற்கின் அரசியல் அரங்கிலை 'சபாஷ் சரியான போட்டி' நிலவரம் இல்லையல்லோ. அதுதான் அற்புதம் ஏதாவது நடக்கவேண்டும் எண்டு எதிர்பார்க்கினம் போல கிடக்கு. பிள்ளையார் பால் குடிச்ச கதைக்குப் பிறகுதான், பிரேமா உயிரோடு இருக்கிறார் என்ற வதந்தியும் பரவியிருக்கு.

இடி-மின்னல் பற்றி இந்தமுறை கூட்டான கட்சி அறிக்கை எதுவும் விடவேயில்லையல்லோ. ஏன் எண்டு விசாரித்தால் தலைவர் நாட்டில் இல்லையாம். என்ன மாதிரியான ஒரு கட்டுப்பாடு பாத்தியளோ?!

திருவான மலையிலை தங்கடை பெயரிலை கூட்டம் வைச்சா சனம் வராது எண்டு பொதுப் பெயரில் கூட்டம் போட்டதாம் ஒரு தமிழ்க் கட்சி. மாகாண சபையிலை இருந்து போட்ட ஆட்டம் என்ன, இப்ப வேறு பெயர்களில் வந்து கூட்டம் போடும் மர்மம் என்ன... என்ன... எண்டு கூட்டத்திற்கு போன ஒரு முக்கியவர் முணுமுணுத்தவராம்.

மற்றொரு திருவானமலைச் செய்தி. 'செயல் வீரருக்கும்' தங்கமானவருக்கும் இடையில் செய்யப்பட்ட பதவி விலகல் ஒப்பந்தம் செல்லாதாம். நல்லாப் படிச்ச சட்டத்தரணிகள் ஒப்பந்தப் பத்திரத்தை படிச்சப்போட்டு அபிப்பிராயம் சொல்லிப்போட்டினமாம். 'சம்பந்த'ப்பட்ட செயல்வீரர் திகைச்சுப்போய் இருக்கிறார். தங்கமானவர் குஷியாக இருக்கிறார். என்ன சொன்னாலும் தங்கமானவர் ஞானப்பால் கொடுக்காமல் தண்ணி காட்டிப்போட்டார்தானே. மூளையும் தங்கமாக்கும்.

அடாது இடிஇடித்தாலும் ரெண்டு எழுத்தார் விடாது நிதி திரட்டிக் கொண்டிருக்கினமாம். இடம்பெயர்ந்து சாவகச்சேரி முகாமில இருந்த சிலரை ரவுண்டப் செய்து பட்டியல் பார்த்து நிதி வாங்கப்பட்டதாம். சிலர் முகம் சுளிக்க, அதைப் பார்த்துப் போட்டு நிதிப்பிரிவில் ஒருவர் சொன்னாராம், "என்ன செய்யிறது, இது எங்கள் கடமை. எல்லாம் உங்களுக்காகத்தானே!"

இந்த முறை யாழ்ப்பாணம் போனால் மகளை எப்படியாவது அங்கையிருந்து கழட்டிக் கொண்டுவந்து போட வேணும். இது என்ரை சிநேகிதர் சொன்ன உறுதிமொழி. தம்பிமார் விடமாட்டினமல்லோ. வயதுக்கட்டுப்பாடு இருக்குதல்லோ? எண்டு நான் கேட்டனான் அதுக்கு சிநேகிதர் சொன்ன பதில், "ஒரு ரூபா கொடுத்தால் கழட்டிப்போடலாம்." அவர் ஒரு ரூபாய் எண்டு சொன்னது சுளையாய் ஒரு இலட்சத்தை.

கடலுக்கு போகாவிட்டாலும் வயலுக்கு போக முடிஞ்சது. வயல் பகுதிகளில் பெரும் பகுதிகள் உள்ள இடமும் சண்டைப் பகுதிகளாகிப்போனதாலை மீனுக்கு மட்டுமில்லை பாருங்கோ மரவள்ளிக் கிழங்குக்கும் மவுசு வந்துட்டுது. எல்லாம் யாழ்ப்பாணத்திலைதான்.

வாழ்க்கை என்றால் என்ன? அப்துல் ரகுமான் இப்படிச் சொல்லுறார்.

"எந்த மதுவை அருந்தியதால்
வந்ததோ தெரியவில்லை.
இந்த வாழ்க்கை
ஒரு போதை."

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## 48

### மாணவர்கள் கண்டனம்

சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சி.ஈ.ஆனந்தராஜா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி யாழ்ப்பாண கல்விமான்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

யாழ்-பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

ஆனந்தராஜாவின் கொலைக்கு காரணமானவர்கள் உடனடியாக உரிமை கோரவேண்டும் என்று குரல் எழுப்பினார்கள் யாழ்-பல்கலைக்கழக மாணவர்கள்.

யாழ்-மாவட்ட அதிபர்கள் சங்கம், யாழ்-பிரஜைகள் குழு, சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியவை கொலைக்கு கண்டனம் தெரிவித்து 28.06.85 அன்று ஒருநாள் பாடசாலை அடைப்புக்கும், கடையடைப்புக்கும் அழைப்பு விடுத்தன.

யாழ் நகரின் பல பகுதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் கறுப்புப் பட்டிகளோடு காணப்பட்டனர்.

இயக்கம் ஒன்றுதான் கொலைக்கு காரணம் என்று மெல்லக் கசியத் தொடங்கியது. ஆனாலும் ஆனந்தராஜா கொலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் துணிச்சலான நடவடிக்கைகள் தொடரவே செய்தன.

இதற்கிடையே யாழ்ப்பாண பொலிஸ் தலைமைக் காரியாலயம் ஒருஅறிவித்தலை வெளியிட்டது. "ஆனந்தராஜா கொலை பற்றி தகவல் தருவோருக்கு 5 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும்" என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டது.

அதிபர் ஆனந்தராஜாவின் இறுதிச் சடங்கில் பெருமளவில் மாணவர்களும், பொதுமக்களும் திரண்டால் தமது நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாமல் போகும்; அதனால் அவரது சடலத்தை யாழ்-பொது மருத்துவமனையில் இருந்து கடத்திச் செல்ல அவரைச் சுட்ட இயக்கம் முயற்சி செய்தது.

ஆனால் குறிப்பிட்ட இயக்க உறுப்பினர்கள் மருத்துவமனைக்குச் சென்ற போது மாணவர்கள் கூடி நின்றமையால் கடத்தல் முயற்சி கைவிடப்பட்டது.

அதிபர் ஆனந்தராஜாவின் இறுதிச் சடங்கில் பல்லாயிரம் மாணவர்களும், பொதுமக்களும் கண்ணீர் மல்க திரண்டிருந்தனர். சென்-ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள சவச்சாலையில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அதன் பின்னர்தான் கொலைக்கு யார் காரணம் என்பது, சம்பந்தப்பட்ட இயக்கம் மூலமாகவே வெளியே வந்தது.

### புலிகளின் காரணம்

கொலைக்கு உரிமை கோரியவர்கள் புலிகள். யாழ் நகரமெங்கும் உரிமை கோரும் சுவரொட்டிகள் புலிகள் அமைப்பினரால் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனந்தராஜா படையினரோடு உறவுகளை வைத்திருந்தார்; எச்சரித்தும் கேட்கவில்லை என்று புலிகள் காரணம் சொல்லியிருந்தார்கள்.

புலிகளே ஆனந்தராஜாவைச் சுட்டார்கள் என்று ஏனைய இயக்கங்கள் மூலம் தகவல்கள் வெளியாகி, மாணவர்கள் மத்தியில் பரவலான அதிருப்திகள் ஏற்பட்ட நிலையில்- தவிர்க்க முடியாமல் புலிகள் உரிமைகோர வேண்டியேற்பட்டது.

ஆனந்தராஜாவை சுடுமாறு கட்டளையிட்டவர் கிட்டு. யாழ்ப்பாணம் றக்கா வீதியில் வைத்து ஆனந்தராஜாவைச் சுட்டவர் ரிச்சார்ட்.

ரிச்சார்ட் அரியாலையைச் சேர்ந்தவர். கிட்டுவின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தவர்.

இப்போது ரிச்சார்ட் இலண்டனில் குடும்பத்தோடு இருக்கிறார். யாழ்ப்பாண ஆசிரியர் ஒருவரது மகளை நல்ல சீதனத்தோடு மணமுடித்துக் கொண்டு இலண்டன் வாசியாகிவிட்டார்.

"ஆனந்தராஜாவை ஏன் சுட்டீர்கள்?" என்று கிட்டுவின் நண்பர் ஒருவர் அவரிடம் கேட்டார். அதற்கு கிட்டு சொன்னார்; "அப்படி ஒருவரைப் போட்டால்தான் மற்றவர்கள் பயப்படுவார்கள். புளிப் படங்கும்."

## ஆனந்தராஜாவை சுட்டது யார்?

இத்தனைக்கும் ஆனந்தராஜா ஈழமாணவர் பொதுமன்றத்தோடு (G.U.E.S) தொடர்பாக இருந்தவர்.

"பாடசாலை நேரம் தவிர ஏனைய நேரங்களில் மாணவர்களை அழைத்து போராட்ட பிரசார வகுப்பு நடத்தலாம். தனது ஒத்துழைப்பு இருக்கும்" என்று G.U.E.S அமைப்பிடம் கூறியிருந்தவர்.

## கூட்டணியின் நாடகமும் கூட்டமைப்பின் கண்டனமும்

யாழ்-பிரஜைகள் குழுவில் ஒருவராக இருந்தமையால், யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படும் இளைஞர்களது பெற்றோர்கள் ஆனந்தராஜாவிடம் ஓடுவார்கள். படை அதிகாரிகளைச் சந்தித்து கைதானவர்களின் விடுதலை தொடர்பாகப் பேசுவார் ஆனந்தராஜா.

ஆனால், ஆனந்தராஜாவுக்கு புலிகளைப் பிடிக்காது. இராணுவத்தினருடன் சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்திற்கு ஒழுங்குகள் நடந்து கொண்டிருந்தன. 'கிரிக்கெட் போட்டி நடத்தவேண்டாம்' என்று ஆனந்தராஜாவிடம் புலிகள் சொன்னார்கள்.

"நீங்கள் படைகளோடு போர்நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். நாங்கள் கிரிக்கெட் போட்டி நடத்துவது மட்டும் எப்படி தவறாகும்?" என்று சொல்லிவிட்டார் ஆனந்தராஜா.

அதுதான் கிட்டுவுக்குக் கோபம். 'மண்டையில் போடு' என்று சொல்லிவிட்டார்.

### மண்ணும் மரணமும்

அதிபர் ஆனந்தராஜாவைச் சுட்ட ரிச்சார்ட் இயக்கத்தைவிட்டு விலகும் முன்னர் மேற்கொண்ட மற்றொரு நடவடிக்கையையும் இந்த நேரத்தில் சொல்லிவிடுகிறேன்.

இயக்கத் தேவைகளுக்காக புளொட் அமைப்பின் யாழ் மாவட்ட உறுப்பினர்கள் மண் வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். புலிகளும் மண் வியாபாரம் செய்தனர்.

புளொட் அமைப்பின் யாழ் மாவட்ட முக்கியஸ்தர் ரவிமூர்த்தியும், இன்னொரு உறுப்பினரும் அரியாலைக்கு மண் அள்ளச் சென்றனர்.

அப்போது அங்கு வந்தார் ரிச்சார்ட். "நாம் மட்டுமே இதனை எடுக்க முடியும். நீங்கள் வேறெங்காவது சென்று பாருங்கள்!" என்றார் ரிச்சார்ட்.

ரவிமூர்த்தி கேட்கவில்லை. பிரச்சனைப் பட்டார். ரிச்சார்ட்டுக்கு பொறுக்கவில்லை. பிஸ்டலை எடுத்து ரவிமூர்த்தியை சுட்டு விட்டார். மற்றொரு புளொட் உறுப்பினரையும் சுட்டார். இருவரும் பலியானார்கள். இதுவும் 1985ல்தான் நடந்தது.

### பேச்சு முயற்சிகள்

இலங்கை அரசு ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்தமையானது இந்தியாவோடு காதோடு காதாகப் பேசி செய்த நடவடிக்கை என்றே நம்பப்பட்டது.

போர் நிறுத்தத்தையடுத்து பேச்சு

## பேச்சுக்குச் செல்ல விரும்பாத தலைவர்கள்

வார்த்தையை ஆரம்பிக்க முயற்சி செய்தது இந்தியா.

தீவிரவாத இயக்கங்களை உடன்பட வைக்காமல் கூட்டணியோடு பேச்சு நடத்துவதால் பயனில்லை என்று இலங்கை அரசு சொல்லிவிட்டது.

எவ்வாறென்றாலும் தீவிரவாத இயக்கங்களை பேச்சு மேசைக்கு கொண்டு வருவதாக இந்தியாவும் உறுதியளித்துவிட்டது.

இதே காலகட்டத்தில் கூட்டணி நடத்திய நாடகம்தான் அருமையானது.

பேச்சு வார்த்தையில் கூட்டணிதான் முக்கிய பாத்திரம் வகிப்பதுபோல கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றின் மூலமாக செய்திகளை வெளியாக்கிக் கொண்டிருந்தது.

அப்பத்திரிகையும் இயக்கங்களை தீவிரவாதக் குழுக்கள் என்றே குறிப்பிட்டு செய்திகளை வெளியிட்டு வந்தது. சுற்றி வளைப்பானேன், 'வீரகேசரி'தான் அவ்வாறு செய்திகளை வெளியிட்டு வந்தது.



அதிபர் ஆனந்தராஜா

இத்தனைக்கும் இயக்கங்கள் பேச்சு வார்த்தைக்கு தயாராக இல்லையென்றால் பேச்சு முயற்சியே கிடையாது என்ற நிலைதான் நிலவியது.

'சென்னையில் இருந்து அமிர்தலிங்கம் பேட்டி- பேச்சு வார்த்தைக்கு ஆதரவு திரட்ட கொழும்புக்கு தலைவர்களை அனுப்பி வைக்கிறார்' என்றெல்லாம் செய்திகள் வரும்.

உண்மையில் என்ன நடக்கிறது என்று தெரியாமலேயே பத்திரிகைகள் சில தாமும் குழம்பி, வாசகர்களையும் குழப்பிக் கொண்டிருந்தன.

கூட்டணியின் கையைவிட்டு பேச்சு வார்த்தை அரங்கம் போராளி இயக்கங்களிடம் சென்று கொண்டிருந்தது. சில பத்திரிகைகள் மூலமாக எல்லாமே தமது கையில் இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயன்றார்கள் கூட்டணித் தலைவர்கள்.

சென்னையில் இருந்த இயக்கத் தலைவர்கள், கூட்டணிக்கு பேச்சுவார்த்தையில் இடமளிக்கப்படுவதையே விரும்பவில்லை. "கொஞ்சம் இடம் கொடுத்தால் எங்களையும் தள்ளிப்போட்டு குறுக்காலே ஓடுவார்கள்" என்று அடிக்கடி சொல்லுவார் ரெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம்.

இந்திய 'றோ' அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்கு உடன்படச் சொல்லிக் கேட்கப் போகிறார்கள் என்று தெரிந்தவுடன் தலைமறைவாகி விட்டார் பிரபாகரன்.

நான்கு இயக்க கூட்டமைப்புக் கூட்டம் சென்னையில் நடந்தது. 'பேச்சுக்கு உடன்படுமாறு கேட்கப் போகிறார்கள். என்ன செய்யலாம்' என்று கேள்வி எழுந்தது.

புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அதற்கு பதில் சொன்னார்: "தலைவர்கள் கொஞ்ச நாட்களுக்கு வெளியே தலைகாட்டாதீர்கள். தலைவர்கள் வரட்டும். கேட்டுவிட்டு முடிவு சொல்கிறோம் என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம்."

ஆனால், அந்தத் தந்திரம் பலிக்கவில்லை. இந்திய அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் பிடிவாதமாக இருந்தது.

இயக்கங்களைக் கேட்காமலேயே இலங்கை அரசுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்து விட்டு, தலைவர்களின் கழுத்தைப் பிடித்தது இந்தியா.

"இன்னமும் ஏழே ஏழு நாட்களில் தீவிரவாத இயக்கங்கள் பேச்சுவார்த்தைக்கு வரப்போகின்றன" என்று நம்பிக்கையோடு அறிவித்தார் அத்துலத் முதலி.



திம்புப் பேச்சுக்கெதிரான ஆர்ப்பாட்டம்

### உடன்பாடு

இறுதியில் நான்கு இயக்கங்களின் கூட்டமைப்பான ஈ.என்.எல்.எஃப். பேச்சு வார்த்தைக்கு உடன்பட்டது. உடன்பாடு கண்ட கூட்டத்தில் பிரபாகரனும் கலந்து கொண்டார்.

"பேச்சுவார்த்தையில் தலைவர்கள் கலந்து கொள்ளத் தேவையில்லை. எமது பிரதிநிதிகளை அனுப்பினால் போதும்!" என்றார் பிரபாகரன்.

ஏனைய மூன்று இயக்கத் தலைவர்களும் அதனை ஆமோதித்தனர்.

தலைவர்கள் கலந்து கொண்டால் உறுப்பினர்கள் சோர்வடைந்து விடுவார்கள். தமிழீழப் போராட்டத்தை கைவிட்டு பேச்சு மேசைக்கு சென்றுவிட்டார்கள் என்று நினைத்துவிடுவார்கள்.

தலைவர்கள் கலந்து கொள்ளாமல் இருந்தால், "இது ஒரு நாடகம் மட்டுமே. பேச்சுக்கு எதிரானவர்கள் அல்ல என்று உலகுக்கு காட்டும் நடவடிக்கை" என்று தெளிவுபடுத்த முடியும்.

இயக்கங்களின் முதலாம் கட்டத் தலைவர்கள் மட்டுமல்ல, இரண்டாம் கட்டத் தலைவர்களைக்கூட பேச்சுவார்த்தைக்கு அனுப்பிவைக்க இயக்கங்கள் முன்வரவில்லை.

கூட்டணி மட்டும் விதிவிலக்கு. அமிர்தலிங்கமே நேரில் செல்ல ஆயத்தமானார். கூட்டமைப்பில் இல்லாவிட்டாலும் புளொட் அமைப்பினரும் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர்.


தமிழர் தரப்பிலிருந்து 5 அமைப்புக்களது (கூட்டணி உட்பட) பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை இந்தியா உறுதிப்படுத்தியது.

பேச்சுவார்த்தையை மூன்றாவது நாடொன்றில் நடத்தத் திட்டமிட்டது இந்தியா.

பூட்டானின் தலைநகரான திம்புவில்தான் பேச்சுவார்த்தையை நடத்த தீர்மானித்தது இந்திய அரசு.

### நேரடித் தொடர்பு

பேச்சுவார்த்தையில் இயக்கத் தலைவர்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று தெரிந்தவுடன் இந்திய அரசு ஒரு காரியம் செய்தது.



திம்புவில் இருந்து பிரதிநிதிகள் உடனுக்குடன் சென்னையிலுள்ள தமது தலைவர்களோடு தொடர்பு கொள்ள நேரடி தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தியது.

'தலைவர்களை கேட்டுச் சொல்கிறோம்' என்று பிரதிநிதிகள் நழுவிக் கொள்ளாமல் தடுக்க இந்தியா செய்த தந்திரம் அது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை இயக்கங்கள் பின்னால் நின்று நடத்தத் தொடங்கி விட்டன.

**"ஈழமே ஒரே தீர்வு"**

**"ஈழப் போராட்டமா-பந்தாட்டமா?"**

**"வேண்டாம்-வேண்டாம், பேச்சு வார்த்தை வேண்டாம்!"**

02.07.85 அன்று யாழ்நகரில் அந்த ஊர்வலம் நடைபெற்றது. "தமிழ் ஈழத்திற்கு குறைந்த எதற்கும் சரணடையோம்" என்ற தலைப்பிட்டு ஒரு துண்டுப்பிரசுரமும் வெளியிட்டிருந்தனர். பிரசுரத்தை அச்சிட்டு வெளியிட்டவர்கள் புலிகள்; ஆனால், பிரசுரத்தின் இறுதியில் 'தமிழ் மக்கள்' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் நெல்லியடியில் அமிர்தலிங்கத்தின் கொடும்பாவி வீதியால் இழுத்துச் செல்லப்பட்டு கொளுத்தப்பட்டது.

### கூட்டணிக்கு கண்டனம்

இலங்கையில் ஒரிரு பத்திரிகைகள் மூலம் பேச்சுவார்த்தையில் தாம் முக்கிய பங்கு வகிப்பதாக கூட்டணி காட்டிக் கொண்டதாக கூறியிருந்தேன் அல்லவா?

அதனால் இயக்கங்களுக்கு கோபம் வந்துவிட்டது. சென்னையில் கூடிய நான்கு இயக்க கூட்டமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டது.

"உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சு வார்த்தைகளில் 'தீவிரவாதிகளுக்கு' தலைமை தாங்கவும், வழிகாட்டவும் தம்மைத்தாமே அரசியல் தலைமையாக நியமித்துக் கொண்டிருக்கும் த.வி. கூட்டணியின் நிலையை ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயாராக இல்லை. ஈழ மக்களின் சகல நம்பிக்கையையும், நாணயத்தையும் இழந்துவிட்ட கூட்டணியினர் இனியும் தம்மை ஈழமக்களின் சட்ட ரீதியான பிரதிநிதிகள் என்று கூறுவதற்கு அருகதையற்றவர்கள்.

பகைமை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் ஈழத்தில் எமது மக்களுக்கு ஆயுதப் படைகள் இழைத்துவரும் கொடுமைகளையிட்டு கூட்டணி வாய்மூடி மௌனியாக இருப்பதும் எமது முடிவை உறுதிப்படுத்துகிறது."

தமிழ்நாட்டு பத்திரிகைகளில் அந்த அறிக்கை சுடச்சுட வெளியாகியது. அமிர்தலிங்கம் திகைத்துப் போனார்.

கூட்டணியின் பிரபலம் தேடும் முயற்சிக்கு மற்றொரு அடி கொடுக்கும் வகையில் ஒரு நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டணிப் பிரமுகர்களை 'மண்டையில் போடு'மாறு ஒரு இயக்கத் தலைவர் சென்னையிலிருந்து உத்தரவிட்டார்.

'யாரைப் போடலாம்?' என்று யோசித்தார்கள்.

(தொடர்ந்து வரும்)

### பூட்டான்

தென்மத்திய ஆசியாவில் இமயமலைச் சாரலில் இந்தியாவுக்கும், திபேத்துக்கும் இடையில் உள்ள நாடு பூட்டான். மன்னர் ஆட்சி. சனத்தொகை 15 இலட்சம்.

1949ம் ஆண்டு இந்தியாவுக்கும் பூட்டானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பூட்டானின் வெளிவிவகாரங்கள் இந்தியாவின் ஆலோசனைப்படியே மேற்கொள்ளப்படும் என்று உடன்பாடு காணப்பட்டது.

பூட்டானை தனது பிடியில் கொண்டுவர சீனா முயன்றது. பலிக்கவில்லை.

1981-87 காலத்துக்கான பூட்டானின் அபிவிருத்திக்கு 134 கோடி ரூபாய் இந்தியாவால் ஒதுக்கப்பட்டது.

சுருக்கமாகச் சொன்னால் இந்தியாவின் ஒரு மாநிலம் போலவே பூட்டான் இருக்கிறது. அந்த பூட்டானின் தலைநகரான



திம்புவில்தான் பேச்சுவார்த்தைக்கு இந்தியா ஒழுங்கு செய்தது.

பேச்சுவார்த்தை மூலமாக பூட்டானின் பெயரும் பிரபலமானது.

# அலசுவது – இராஜதந்திரி

# அரசியல் பலத்தை எல்.ரி.ரி.ஈ. கட்டி எழுப்பவேண்டும்! ஆயுதபலம் ஒரு பக்கபலமாகவே இருக்க முடியும்!!

# வடபுலத்தில் புதிய 'இராணுவஹீரோ' ஜானக பெரேரா!

# அரசியல் தீர்வை வலியுறுத்தும் நீதியரசர் கிருஷ்ண ஐயர்



'ஒப்பரேஷன் இடிமின்னல் தாக்குதல்' என்ற இராணுவ நடவடிக்கை கடந்தவாரம் வடக்கே யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இரு மாதங்களுக்கு முன்னர் 'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல்' என்ற இராணுவ நடவடிக்கை யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

இதுவே இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் எல்.ரி.ரி.ஈயினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது இராணுவ நடவடிக்கையாகும்.

இத்தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடியாக 'ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சல்' என்று பெயரிட்டு எல்.ரி.ரி.ஈயினரும் தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து மீண்டும் கடந்தவாரம் 'ஒப்பரேஷன் இடிமின்னல் தாக்குதல்' என்று பெயரிட்டு படையணிகள் வடக்கே நகர்த்தப்பட்டிருந்தன.

ஒப்பரேஷன் இடிமின்னல் தாக்குதலில் சுமார் 8 ஆயிரம் படையினர் கனரக வாகனங்கள் சகிதம் ஈடுபட்டிருந்தனர்.

இத்தாக்குதல் நடவடிக்கை நூற்றுக்கணக்கான எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களைப் பலியெடுத்திருக்கக் காணப்படுகின்றது. அத்துடன் யாழ் குடா நாட்டில் எல்.ரி.ரி.ஈயினருக்கு ஏற்பட்ட ஒரு பாரிய இழப்பாகவும் இது விளங்குகின்றது.

ஒப்பரேஷன் முன்னேற்றப் பாய்ச்சலின் போது படையினர் நகர்ந்து வந்தவேளை எல்.ரி.ரி.ஈயினர் தமது இழப்புக்களை தவிர்க்கும் வகையில் பின்வாங்கியிருந்தனர். பின்னர் தாம் கைப்பற்றிய பகுதிகளில் படையினர் நிலை கொள்ள ஆரம்பித்ததும், 'ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சல்' என்ற பதில் தாக்குதல் நடவடிக்கையை எல்.ரி.ரி.ஈயினர் மேற்கொண்டிருந்தனர்.

புலிப்பாய்ச்சலின் வேகம் சற்று கனமாக இருந்ததால் படையினர், தாம் முன்னேறியிருந்த பகுதிகள் பலவற்றிலிருந்தும் பின்வாங்கியிருந்தனர்.

ஆனால் கடந்த வாரம் இடம்பெற்ற இடிமின்னல் தாக்குதல் நடவடிக்கையின் காரணமாக படையினர் மேற்கொண்ட நகர்வுகளின் போது பெருந்தொகையான எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர்.

தம்மால் தாக்குப்பிடிக்க முடியாத பகுதிகளிலிருந்தும், பின்வாங்கிப் பின்னர் தமக்கு வாய்ப்பாக இருக்கும் போது பெரும் பலத்துடன் மீண்டும் தாக்குவதையே எல்.ரி.ரி.ஈயினர் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இருந்தபோதிலும் இடி மின்னல் தாக்குதலின் ஆரம்பம் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களை நிலைதடுமாறச் செய்திருக்கின்றது.

'இடிமின்னல் தாக்குதலை' முறியடிக்க புலிகள் மேற்கொண்ட கெரில்லாத் தாக்குதல் தோல்வியில் முடிந்துள்ளமையை அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மூலம் அறிய முடிகின்றது. முன்னைய புலிப் பாய்ச்சல் நடவடிக்கையைப்போல இம் முறை வெற்றியளிக்கவில்லை என்பதனை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் ஆயுதப்படையினர் எல்.ரி.ரி.ஈயினரின் வியூகங்களை அறிந்தவர்களாகவும், அதற்கேற்றால் போல தம்மைத் தயார் படுத்தியவர்களாகவுமே இடி மின்னல் தாக்குதலை மேற்கொண்டிருப்பதனை அறியமுடிகின்றது.

வடக்கே யாழ் குடாநாட்டின் யுத்தப் பிரதேசத்தை எடுத்து நோக்குகையில் இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் ரொகான் தலுவத்த வடக்கின் இராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகின்றார்.

இவருக்கு உதவியாக மேஜர் ஜெனரல் லால் வீரசூரிய என்ற மற்றுமொரு சிரேஷ்ட அதிகாரி பணிபுரிகின்றார்.

இவர்கள் தவிர பிரிகேடியர் ஜானக பெரேராவே தற்போது வடபுலப் போர்முனையின் 'ஹீரோ'வாக இருக்கக் காணப்படுகின்றார்.

பிரிகேடியர் ஜானக பெரேரா, யாழ் குடாநாட்டில் பலாலித் தளத்தைச் சேர்ந்த ஒரு படை அதிகாரியல்ல; இவர் வடகிழக்குப் பிரதேசமான வெலி ஓயாப் பகுதியின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்.

இரு மாதங்களுக்கு முன்னர் எல்.ரி.ரி.ஈயினர் ஒரே தரத்தில் வெலி ஓயாப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் சிலவற்றைத் தாக்க முயற்சி செய்திருந்தனர். அப்போது வெலி ஓயாப் பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த பிரிகேடியர் ஜானக பெரேரா தலைமையிலான படையினரே அத்தாக்குதலை முறியடித்திருந்தனர்.

இம்முறியடிப்பில் 180 எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களில் அநேகமானவர்கள் பெண் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 12 வருடகால யுத்தத்தில் எல்.ரி.ரி.ஈயினருக்கு ஏற்பட்ட இழப்புக்களில் ஒன்றாகவே இது காணப்பட்டது.
வெலி ஓயாவில் எல்.ரி.ரி.ஈயினரின் தாக்குதலை எதிர்பார்த்த நிலையில் நன்கு ஆயத்தமாக இருந்து, தமது தரப்பில் இழப்புக்களையும் பெரிதும் தவிர்த்து படையினர் செயல்பட்டிருந்தனர்.

எனவே வெலி ஓயா பிரதேச தளபதியான பிரிகேடியர் ஜானக பெரேராவே தற்போது வடக்கே இடம்பெறும் தாக்குதல் நடவடிக்கைகளிலும் முக்கிய பங்கு வகித்தவராக இருக்கின்றார்.

பிரிகேடியர் ஜானக பெரேரா இராணுவத்தின் விசேட படையணியைச் சேர்ந்தவர் (Special Forces) இப்படை அணி ஓர் அதிரடிப்படை ரகத்தைச் சேர்ந்ததாகும்.

ஓரிருவருடங்களுக்கு முன்னர் இராணுவத்தின் கமாண்டோ பிரிவினர் 'பாரசூட்' பாய்ச்சலில் தேர்ச்சி பெற்று வெளியேறிய போது, பிரிகேடியர் ஜானக பெரேராவும் பாரசூட்டில் குதித்துத் தேர்ச்சி பெற்றிருந்தார்.

அத்துடன் இலங்கை இராணுவத்தில் பாரசூட் பாய்ச்சலில் ஈடுபட்ட முதலாவது சிரேஷ்ட அதிகாரியாகவும் பிரிகேடியர் ஜானக பெரேரா சிறப்பிடம் பெற்றிருந்தார். இவர் ஒரு பொறியியலாளருமாவார்.

இதுதவிர ஜே.வி.பி. நடவடிக்கைகள் காணப்பட்ட காலத்தில் பிரிகேடியர் ஜானக பெரேரா தலைமையிலான விசேட படையணியினர் தென்னிலங்கையின் பல்வேறு



ஜானக பெரேரா

பகுதிகளிலும் தீவிரமாக இயங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கின் இன்றைய யுத்த நிலவரத்தை அலசி ஆராயும் போது காங்கேசன்துறை முதல் அம்பாறைவரை வடக்கு-கிழக்கு பிரதேசம் ஓர் இராணுவ வலயமாகவே இருப்பதை அவதானிக்க முடியும்.

வடக்கே பலாலித் தளத்தில் இருந்து தமது கட்டுப்பாட்டை விஸ்தரிப்பதில் படையினர் முனைப்பாக இருக்கின்றனர்.

இதன் காரணமாகவே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பரவலாகப் படையினரின் பிரசன்னம் காணப்படுகின்றபோதிலும், யாழ் குடா நாட்டிலேயே பெரியளவிலான இராணுவ நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யாழ் குடாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரசாக இருக்கின்றது. அத்துடன் எல்.ரி.ரி.ஈயினர் தமது ஆதிக்கத்தை அங்கு பல்வேறு வடிவத்திலும் நிலைப்படுத்தியிருக்கக் காணப்படுகின்றனர்.

சுருங்கக் கூறின், ஒரு 'குட்டித் தமிழீழம்' வடக்கே இயங்குவதையே உணரமுடிகின்றது. இந்நிலையில் எல்.ரி.ரி.ஈயினரின் இந்த ஆதிக்க வலயத்தினுள் ஊடுருவி அங்கு அவர்களை வலுவிழக்கச் செய்யும் பட்சத்தில் வடக்கு-கிழக்கின் ஏனைய பிரதேசங்களில் எல்.ரி.ரி.ஈயினரின் பலம் குன்றி விடும் என்பதே படையினரின் கணிப்பாக இருக்கின்றது.

ஆனால் எல்.ரி.ரி.ஈயினர் தமது ஆளுமை வடக்கு-கிழக்கில் நன்கு பரந்திருப்பதைப் பறைசாற்றுவதைப் போலவே வடக்கில் தாக்குதல்கள் மும்முரமடையும் போது கிழக்கில் தமது கைவரிசையைக் காட்டுவதையும் கிழக்கே படையினரின் கவனம் திரும்பும்போது வடக்கே தாக்குதல்களை மேற்கொள்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கடந்தவார இடிமின்னல் தாக்குதலில் வடக்கே யாழ் குடாநாட்டில் எல்.ரி.ரி.ஈயினர் 150க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இரு மாதங்களுக்கு முன்னர் வெலி ஓயாப் பகுதியில் எல்.ரி.ரி.ஈயினருக்கு ஏற்பட்ட இழப்புக்கு அடுத்தபடியாக இடிமின்னல் தாக்குதலில் எல்.ரி.ரி.ஈயினருக்கு ஏற்பட்ட இழப்பு பாரதூரமானதாக இருக்கின்றது.

இருந்தபோதிலும் படையினர் இந்த இழப்புகள் குறித்து பெரும் புளகாங்கிதம் அடையமுடியாது. ஏனெனில் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, வடக்கே யாழ் குடாவில் படையினரின் இடிமின்னல் முழங்கிக் கொண்டிருந்த வேளை வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளில் எல்.ரி.ரி.ஈயினரின் தாக்குதல்களும் மும்முரமடைந்து இருந்தன.

'இடிமின்னல்' தாக்குதலில் படையினர் தரப்பிலும் சுமார் 50 பேர் வரை பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 'இடிமின்னல்' வடக்கே நடந்த தருணம் எல்.ரி.ரி.ஈயினர் கிழக்கே நடத்திய தாக்குதல்களிலும் ஆங்காங்கே சுமார் 60 பேர் வரை கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே படையினரும் குறிப்பிடத்தக்களவு இழப்புக்களுடனேயே தமது நடவடிக்கைகளை தொடர்ந்திருக்கக் காணப்படுகின்றனர்.

'இடிமின்னல்' தாக்குதல் ஆரம்பிக்கப்படு முன்னர் 'ஒப்பரேஷன் ஹான்ட் ஷேக்'- அதாவது ஒப்பரேஷன் கைகுலுக்கல்' என்ற பெயரில் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் ஒன்றை படையினர் மேற்கொண்டிருந்தனர்.
அச்சமயத்திலேயே விமானப்படையின் அன்டநோவ் விமானம் ஒன்று கடலுக்குள் வீழ்ந்து மூழ்கியதுடன் அதில் இராணுவ நடவடிக்கைகளுக்காக வடக்கே சென்ற 75 படையினரும் கொல்லப்பட்டனர்.

எனவே, கடந்த ஏப்ரல் மாதம் ஆயுதப்படையினருக்கும், எல்.ரி.ரி.ஈயினருக்கும் இடையே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் முதற்தடவையாக மோதல்கள் ஆரம்பித்ததில் இருந்து கடந்த ஆறு மாத காலத்தில் படையினருக்கும் பாரிய இழப்புக்களுடனேயே அவர்கள் புளகாங்கிதம் கொள்ளும் வெற்றிகளும் கிடைத்திருக்கக் காணப்படுகின்றன.

அரச தரப்பினரைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு யோசனைகள் என்ற விடயத்தை முன்வைத்துள்ள போதிலும் அதனை தகுந்த வகையில் முன்னெடுக்காதவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் அரசியல் தீர்வு என்ற விடயம் வெறுமனே யோசனைகளாக மட்டும் இருக்கிறதே தவிர எவ்வகையிலும் தகுந்த செயல் வடிவத்தைப் பெறாதிருக்கின்றது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அடுத்த வருடத்துக்கான பாதுகாப்புச் செலவாக 3398 கோடி 67 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை செலவிடவிருக்கின்றது.

இத்தொகை ஏனைய அமைச்சுக்களுக்கும், நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் செலவிடப்படவுள்ள பணத்தொகையை விட பன்மடங்கு கூடுதலானதாக இருக்கின்றது.

இத்தகைய பெருந்தொகைப் பணத்தை செலவிடவிருப்பதன் மூலம் அடுத்த ஆண்டிலும் இராணுவ நடவடிக்கைகளை அரசு முடுக்கிவிடவிருப்பதனையே உணரமுடிகின்றது. அத்துடன் அரசியல் தீர்வுமீதான ஆர்வமும் பெரிதளவில் காணப்படாதிருப்பதையே அறியமுடிகின்றது.

இந்தியாவின் முன்னாள் நீதியரசரும் அந்நாட்டின் அடிப்படை மனித உரிமைகள் சார்ந்த நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிப்பவருமான நீதியரசர் வீ.ஆர்.கிருஷ்ண ஐயர் சென்னை இந்து பத்திரிகையில் (Madras Hindu) இலங்கைப் பிரச்னை தொடர்பாக கட்டுரை ஒன்றை அண்மையில் எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில், "அரசியல் தீர்வுதான் இலங்கைப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவர ஒரே வழி. எல்.ரி.ரி.ஈயினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தாதவரை எந்தவொரு தீர்வும் சாத்தியமில்லை. ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வு யோசனைகள் முன்னேற்றகரமானவைதான்; ஆனால் அது பற்றிக் கலந்தாலோசிக்கு முன்னர் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும். இதனையடுத்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து தீர்வொன்றைக் காணமுனைய வேண்டும்" என்று நீதியரசர் வீ.ஆர்.கிருஷ்ண ஐயர் தெரிவித்திருந்தார்.

எனவே யுத்தம் நீடித்து உயிரழிவும் பணவிரயமும் தொடருவதா? அல்லது ஒரு காத்திரமான தீர்வை ஏற்படுத்தி நாடு பிளவுபடுவதைத்தடுத்து- நச்சுத்தனமான இனவாதத்தைக் களைந்தெறிவதா? என்பதனை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈயினரும் போரில் தொடர்ந்து ஈடுபடுவதா? அல்லது ஒரு கௌரவமான தீர்வை நோக்கி தமது அரசியல் நிலைப்பாட்டைக் கட்டி எழுப்புவதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாகின்றனர்.

எல்.ரி.ரி.ஈயினர் அரசியல் ரீதியான நிலைப்பாட்டை பலம்மிக்கதாகக் கட்டி எழுப்பி அத்தகைய நிலைப்பாட்டுக்கு ஒரு பக்கபலமாகவே ஆயுதபலத்தை வைத்திருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இல்லையேல் வெறுமனே ஆயுதபலமென்பது அர்த்தமற்றதாகவும் அழிவையே நிரந்தரமாக்குவதாகவும் அமையும்.

பாரிஸ் நகரம் இரவு விடுதிகளுக்கு பெயர் பெற்றது. மதுவும் உண்டு: மங்கையும் உண்டு. இரண்டுக்கும் விலையும் உண்டு.

இரவு விடுதிகளுக்கு இரை தேடி வருபவர்களில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் உண்டு. அவர்கள் கோடிஸ்வர வீட்டுப் பெண்கள்.

"இனிய இளைஞனே, இன்று இரவுக்கு நீ எனக்கு கம்பனி கொடுப்பாயா?"

ஏதோ குளிருக்கு கம்பளி கேட்பதைப் போல வெகு அலட்சியமாக விசாரிப்பார்கள். பாரிஸ் நாகரீகம் அப்படி.

பிடித்திருந்தால் மட்டும் கம்பனி கொடுப்பான் கார்லோஸ்.

"வாவ்! என்ன பெயர் சொன்னாய்?"

"மார்ட்டின்ஸ்."

பாரிஸில் கார்லோஸ் தனக்கு வைத்துக் கொண்ட பெயர் அது தான். பெரு நாட்டைச் சேர்ந்த செல்வந்தன். பொழுதை ஜாலியாகக் கழிக்க பாரிசுக்கு வந்திருப்பவன். கார்லோஸ் சொன்ன பொய் நம்பப் பட்டது.

பாரிசில் பல பெண்கள் கார்லோஸுக்கு நட்பாகக் கிடைத்தார்கள்.

அவ்வாறு கிடைத்தவர்களில் ஒருத்தி ஆம்பறோ சில்வா மாஸ்மெலா.

மாஸ்மெலா அழகானவள். ஆடம்பரமானவள். மாஸ்மெலா அடிக்கடி மாற்றிக் கொள்வது இரண்டு சமாச்சாரங்கள்.

ஒன்று அவளது தலையலங்காரம். இரண்டு, காதலர்கள்.

கார்லோஸின் நட்புக் கிடைத்ததும் காதலர்கள் பலரைக் கத்தரித்து விட்டு தனது வழக்கமான நடைமுறைகளை மாற்றத் தொடங்கினாள்.

கார்லோஸ்மீது வெறித்தனமான பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. அவள் தனது பழைய அறையைக் காலி செய்யப் போவதையும், புதிய இடம் ஒன்று தேடுவதையும் கார்லோஸ் அறிந்து கொண்டான். உடனே கார்லோஸுக்கு ஒரு யோசனை தோன்றியது.

பாரிசில் கேந்திர முக்கியத்துவமுள்ள இடமொன்றின் அருகில் வீடு கிடைத்தால் மாஸ்மெலாவுக்கு எடுத்துக் கொடுக்கலாம். மாஸ்மெலாவோடு தங்கியிருந்து கண்காணிக்கலாம். யாருக்கும் சந்தேகமும் வராது.

வீடு கிடைத்தது. ரூ அமேலி தெருவில் 11ம் இலக்க வீடு. அதன் அருகேதான் பொலிஸ் நிலையம் இருந்தது. சற்றுத் தள்ளி எயார் ஃபிரான்ஸ் விமானங்களின் தரிப்பிடமான இன்வலீட்சும் இருந்தது.

அதற்கிடையே ஜப்பான் செம்படை தனது பணியில் ஒரு பாதியை நிறைவேற்றியது. பாரிஸ் நகரின் பாதுகாப்பெல்லாவற்றையும் மீறி வெடிமருந்துகளும், சில துப்பாக்கிகளும் பாரிஸ் நகருக்குள் கொண்டுவரப்பட்டன.

"நன்றி தோழர்களே!" என்றார் கார்லோஸ். நன்றி சொல்லப்பட்டவர்கள் இருவரும் தமது சின்னக் கண்களை இடுக்கிக் கொண்டு உதடுபிரியாமல் புன்னகைத்தபடி, "நன்றி இருக்கட்டும் தோழரே. நாம் ஒப்படைத்தவற்றை பாதுகாப்பதுதான் முக்கியம். உள்ளே கொண்டுவருவதும் கடினம்தான். அதைவிடக் கடினம் பாரிஸ் நகரில் இந்த பூதங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது."

"புரிகிறது. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். 'ஒப்பரேசன் பௌடியர்' நெருங்கி விட்டது"

என்ற கார்லோஸ் நாங்கள் என்று கூறியது தன்னையும் மௌகார்பெல்லையும். மௌகார்பெல் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் (PFLP) முக்கிய புள்ளி. அவரும் பாரிசில் இருந்தார். கார்லோசோடு தங்கவில்லை. இரண்டு முக்கிய புள்ளிகள் ஒரே இடத்தில் தங்குவது இரகசிய இயக்க விதிப்படி தவறானது.

"எங்கே மறைத்து வைக்கலாம்?"

ஜீன் சாள்ஸ் லிக்நெல் பாரிசில் ஒரு கலைக்கூடம் நடத்திவந்தார்.

"வன்முறையும் மோதல்களும் உலகின் கலையழகை மூர்க்கமாக மோதி சிதறவைக்கின்றன. கலை வாழ வேண்டும். கலையழகுக்கு எதிரானவை ஒழிய வேண்டும்."

என்று சொன்ன ஜீன் சாள்ஸை கலைக்கூடத்தை பார்வையிட வந்தவர்கள் மரியாதையோடு கவனித்தார்கள்.

கலைக்கூட வாயிலில் கார்லோஸ் தோன்றினான். ஜீன் சாள்ஸ் தனது விழிகளை உயர்த்தி கார்லோஸை கவனித்தார்.

கார்லோஸ் ஒரு பெரிய சூட்கேஸ் வைத்திருந்தார்.

"மன்னியுங்கள். கலைக்கூடத்திற்கு புதிய கலை வடிவங்கள் கொண்டுவந்திருக்கிறார் நண்பர். நீங்கள் பார்வையிட்டுக் கொண்டிருங்கள் வந்துவிடுகிறேன்."

என்று விட்டு கார்லோஸை நோக்கிப் போனார் ஜீன் சாள்ஸ்

"என்ன- கிடைத்துவிட்டனவா?" என்றார் விழிகளை அகல விரித்தபடி.

"ஆம். அத்தனையும் உபயோகமானவை."

"நல்லது. உள்ளே வாருங்கள்."

தனது அறைக்கு அழைத்துச் சென்றார். அறைக்குள் சென்றவுடன் கதவை மெல்லச் சாத்திவிட்டு, கார்லோஸை கட்டித் தழுவிக் கொண்டார் ஜீன் சாள்ஸ்.

"இது வெற்றியின் முதல்படி. கவலையே வேண்டாம்- நான் பாதுகாத்துக் கொள்வேன்."

என்றார் ஜீன் சாள்ஸ். அவரும் ஒப்பரேசன் பௌடியாவுக்காக தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர். அல்ஜீரியாவில் பிறந்த ஃபிரெஞ்சுக்காரர். பாலஸ்தீன விடுதலைக்குப் போராடுவதும் ஒருகடமை என்று உறுதியாக இருப்பவர்.

—கார்லோஸ்—

உலகைக் கலக்கியவன். தனி ஒரு ஆளாக சாகசங்கள் படைத்தவன்.

நம்பவே முடியாத அதிசய மனிதனாகக் கருதப்பட்டவன்.

பாலஸ்தீன விடுதலைக்காக போராடிய வெனிசுலா நாட்டுக்காரன்.

அவனது சாகசங்களின் தொகுப்பு இது! இத் தொடர் முடியும் போது நீங்களே தீர்மானிக்கலாம்.

கார்லோஸ் நல்லவனா? கெட்ட வல்லவனா?



# மனித வெடிகுண்டு

## 5 ரசிகன்





கலைக்கூடத்தில் ஆயுதக் கிடங்கு. யார்தான் சந்தேகப்படப்போகிறார்கள்?

இன்னொரு தொகுதி வெடிமருந்தையும், துப்பாக்கிகளையும் கார்லோஸ் தனது நேரடிக் கவனிப்பில் வைத்துக் கொண்டார்.

மாஸ்மெலாவுக்கு புதிய வீடு பிடித்திருந்தது. அதைவிட கார்லோஸ் தனது செலவில் வாங்கிப்போட்டிருந்த பெரிய இரட்டைக் கட்டில் வியப்பாக இருந்தது.

"பயமாக இருக்கிறது" என்றாள்.

"ஏன்?"

"கட்டில் இவ்வளவு பெரிதாக வாங்கிப் போட்டிருக்கிறாயே...... என்ன பண்ணப் போறாயோ என்றுதான்." கண் சிமிட்டினாள். கார்லோஸ் கட்டிலில் தள்ளப்பட்டான்.

கட்டிலின் கீழே வெடி மருந்துகளும், ஆயுதங்களும் இருப்பது தெரியாமல் கார்லோஸை தன்னை ஆக்கிர மிக்க அனுமதித்தாள்.

பாரிஸ் விமான நிலையம்-1974 ஜூலை 26ம் திகதி. பெய்ரூட்டிலிருந்து வந்த விமானத்தில் இருந்து இறங்கிய குள்ளமான பயணியை சுங்க அதிகாரிகள் சந்தேகத்தோடு பார்த்தனர்.

அவரது பயணப் பொதிகள் மிக விழிப்பாக துருவப்பட்டன.

துருவியதற்கு பலன் இருந்தது. அவரது பையொன்றிலிருந்து [illegible] கடவுச் சீட்டுக்கள் கிடைத்தன. இன்னொரு பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களும் மாட்டிக் கொண்டன.

டொலர் நோட்டுக்களை கூர்ந்து கவனித்தனர் சுங்க அதிகாரிகள். அத்தனையும் போலியான டொலர் நோட்டுக்கள்.

குள்ளமான பயணி மாட்டிக்கொண்டார். அவரது டயறியில் இருந்த சில கடிதங்களும் சிக்கின. அனைத்தும் சங்கேத மொழியில் இருந்தன. ஜப்பான் மொழி போலவும் தெரிந்தன.

பாரிஸ் சுங்க அதிகாரிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஜப்பான் தூதரக அதிகாரியொருவர் அழைக்கப்பட்டார்.

ஜப்பான் மொழியை வைத்து உருவாக்கப்பட்ட சங்கேத வார்த்தைகள் என்பதால் ஓரளவு கடிதத்தில் இருந்த விபரங்கள் அறியப்பட்டன.

பயணி பாரிஸ் பொலிஸின் விருந்தாளியானார்.

செய்தி கார்லோஸுக்கு எட்டியது.

ஜப்பான் செம்படையின் முக்கிய பிரமுகர் சுஸுக்சி ஃபுறுயா கைது செய்யப்பட்டார்.

"யார் இந்த சுஷிக்கு புசுக்கு?"

தினசரியைப் படித்துவிட்டு மாஸ்மெலா கேலி கலந்து கேட்டாள்.

"யாருக்குத் தெரியும்." என்றான் கார்லோஸ். சுஸுக்கி மூலம் பாரிசிலுள்ள இரகசிய தளங்கள் பொலிசுக்கு தெரியவரக்கூடும். இனி விழிப்பாயிருக்க வேண்டும் என்று மனதுக்குள் குறித்தான்.

'சுஸுக்கிக்கு தெரிந்த இடங்களில் இருந்து நமது ஆட்களை விலக்கிக் கொள்ள வேண்டும்.' கார்லோஸ் திட்டமிட்டு காரியத்தில் இறங்க முன்னர் பாரிஸ் பொலிஸ் களத்தில் குதித்திருந்தது.

கார்லோஸிடம் ஆயுதங்களை ஒப்படைத்த ஜப்பான் செம்படை உறுப்பினர்கள் பாரிஸ் நகரில் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் தங்கியிருந்தனர்.

தனது மோட்டார் சைக்கிளில் அங்கு விரைந்தார் கார்லோஸ். அவர்கள் தங்கியிருந்த இல்லத்தின் முன்னர் மோட்டார் சைக்கிளை வேகம் குறைத்த கார்லோஸ் மறுபடியும் வேகமாக்கி, அந்த இடத்தைத் தாண்டிச் சென்றார்.

அங்கு பொலிஸ் நின்றுகொண்டிருந்தது. பொலிஸ் கார்கள் இரண்டும் தரித்து நின்றிருந்தன.

'இருவரும் மாட்டிக் கொண்டார்கள்' என்று சந்தேகமில்லாமல் தெரிந்துவிட்டது.

பாரிஸ் நகரிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றை நோக்கி மோட்டார் சைக்கிளை விரட்டினார் கார்லோஸ்.

கார்லோஸ் சென்றுகொண்டிருந்த ஜப்பான் வர்த்தக நிறுவனத்திற்குள், கார்லோஸ் செல்ல முன்னரே பாரிஸ் பொலிஸ் புகுந்து விட்டது.

"யார் இங்கே மிஸ் மரிகோ யமாமேட்டோ?"

ஒரு இளம் பெண் எழுந்து, "யெஸ்" என்றாள். "மிஸ் மரிகோ ய..." "யெஸ் நான்தான்"

பொலிஸ் அதிகாரி ஒருவர் முன்னே நகர்ந்து, "மன்னிக்க வேண்டும், உங்களை நாங்கள் கைதுசெய்கிறோம்!"

அந்த நேரம் வர்த்தக நிலையத்திற்கு வெளியே தனது மோட்டார் சைக்கிளில் வந்திறங்கினான் கார்லோஸ்.

(தொடர்ந்து வரும்)

# ஹலோ டாக்டர்



வணக்கம் டாக்டர்.

"வணக்கம், என்ன சோர்வாக இருக்கிறீர்கள்?"

"காலையில் வாந்தி எடுத்தேன் டாக்டர். அதுதான் ஒரு மாதிரியாக இருக்கிறது. வாந்தி எடுப்பது நல்லதா டாக்டர்?"

"சில சமயங்களில் நல்லதுதான்."

"எப்படியான சமயங்களில்?"

"உடலில் ஏதாவது கோளாறு வரும் போது அதிக மருந்துகளை சாப்பிடுகிறோம். இதனால் மருந்துகளில் உள்ள இரசாயன கலவை விஷத்தன்மையை ஏற்படுத்தலாம். சில வகையான உணவுகள் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் விஷத்தன்மை பெறுகின்றன. அப்போது அவற்றை உடனடியாக வெளியேற்ற வேண்டி உள்ளது. இதற்காகத்தான் வாந்தி மருந்து பயன்படுத்தப் படுகிறது."

"நான் வாயில் கைவிட்டு வாந்தி எடுத்துவிட்டேன் டாக்டர்."

"பெரியவர்கள் அவ்வாறு செய்யலாம். சிறுவர்களால் அது முடியாது. அவர்களுக்கு வாந்தி மருந்து கொடுக்கலாம். அதிலும் பலன் இல்லாவிட்டால் டாக்டரிடம் கொண்டு செல்லலாம். மருத்துவரீதியாக வாயில் குழாய்வைத்து பம்ப் செய்து விஷத்தை வெளியேற்றுவார்."

"சகல விஷத்தன்மையையும் வாந்தி மருந்துமூலம் வெளியேற்ற முடியுமா டாக்டர்?"

"பிளீச்சிங் பவுடர் கலந்த திரவம் போன்ற அமிலத்தன்மை கொண்டதாக இருந்தால் அதனை வாந்தி மூலம் வெளியேற்றுவது அபாயமானது. அவ்வாறான திரவங்கள் அரிக்கும் தன்மை கொண்டவை. வயிற்றிலிருந்து எல்லாத் தசைச் சுவர்களையும் பாதித்துவிடும். வாந்தி மருந்தால் பயனில்லை. டாக்டரை உடனடியாக நாடுவதே நல்லது."

"வாந்தி மருந்து, மருந்துக் கடைகளில் கிடைக்குமா டாக்டர்?"

"கிடைக்கும். பல வகைகளில் இருக்கின்றன. மாத்திரை வடிவிலும் இருக்கிறது. இயற்கை முறையில் சிலர் வாந்தி எடுப்பார்கள். கையை வாய்க்குள் நாக்கின் உள்பக்கம் வரை விட்டு தொண்டைக் குழியை லேசாகத் தொட்டால் வயிற்றில் உள்ளது அப்படியே வெளியே வந்துவிடும்."

"களைப்பாக இருக்குமோ?"

"இருக்கும். வயிறு காலியாகிவிடுகிறதல்லவா? பல கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும்."

# 16 இல் என்ன கோளாறு

"டாக்டர், இது வேறு கேள்வி: சில நோய்களுக்கு சோர்வும் ஒரு அறிகுறியல்லவா?"

"ஆம்! நீரிழிவுநோய் உள்ளவர்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாகும்போது சோர்வு இருக்கும். இரத்த சோகை உள்ளவர்களுக்கும் சோர்வுதான் அறிகுறி. நரம்பு மண்டலம், தசைகள் பாதிக்கப்பட்டாலும் சோர்வுதான் அறிகுறி. கவலை, வேதனை போன்ற நிலைகளால் ஏற்படும் சோர்வு மனநோய்க்கு வழி வகுப்பதும் உண்டு."

"சரி, டாக்டர் இப்போது வேறு கோணத்தில் ஒரு கேள்வி. ஆண்களைவிட பெண்கள் உயரம் குறைவாக இருப்பது ஏன்?"

"பெண்களைப் பொறுத்தவரை 14 வயதிலேயே வளர்ச்சி அதிகரித்துவிடுகிறது. அதேபோல ஆண்களைவிட இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே வளர்ச்சி நின்றுவிடுகிறது. இதனால்தான் அதிகமான பெண்கள் ஆண்களைவிட உயரம் குறைவாக வளருகின்றனர்."

"எனது நண்பர் ஒருவரின் மகனுக்கு 13 வயது. அவனது உயரம் குறைவாக இருக்கிறது. ஏதாவது கோளாறாக இருக்குமா டாக்டர்?"

"16 வயது அடையும் வரை வளர்ச்சி சீராக இருக்கும். அதன் பின்னர் வளர்ச்சி திடீரென்று அதிகரிக்கும். 16 வயதில் வளர்ச்சி ஏதாவது காரணத்தால் பாதிக்கப்பட்டால்கூட உயரம் மற்றவர்களைவிடக் குறையும். 16 வயதில் கோளாறு இல்லாமல் இருக்க குழந்தைப் பருவத்திலேயே எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் நண்பரது மகன் கடந்த ஒரு வருடமாக உயராமல் அப்படியே இருந்தால் டாக்டரைப் பார்க்கச் சொல்லுங்கள்."

"ஒ.கே. நன்றி டாக்டர்."

# முத்த வழக்கு



அந்த அதிரடி முத்தக் காட்சி 1950 இல் எடுக்கப்பட்டது. புகைப்படப் பிடிப்பாளர் ஒருவருக்கு கில்லாடியான ஐடியா ஒன்று தோன்றியது. வீதியில் போய்க் கொண்டிருக்கும் தம்பதிகளுக்கு திடீரென்று முத்தமிட வேண்டும் போலத் தோன்றியது. உடனடியாக இச்... இச். மொடலிங் செய்யும் இருவரை வைத்து தத்ரூபமாக படம் எடுத்து, பல பிரதிகள் போட்டு விற்பனை செய்தார். அப்போது சுமாராகத்தான் விற்பனையாகியது. ஆனால், தற்போது திடீரென்று மவுசு வந்து கிடு கிடு விற்பனை. 50 இல் எடுத்த புகைப்படத்திற்கு 90 களில் கிராக்கி. மகிழ்ந்து போனார் புகைப்படப் பிடிப்பாளர். அப்போது வந்தது வம்பு. வயதான தம்பதியர் இருவர் வழக்குத் தொடுத்தனர். "படத்தில் முத்தமிட்டுக் கொண்டிருப்பது நாங்கள்தான். விற்பனையில் எங்களுக்கும் பங்குதர வேண்டும்" என்று வாதிட்டனர்.

"அவர்கள் இருவரும் முன்னர் மொடலிங் செய்பவர்கள். பணம் கொடுத்து முத்தமிட வைத்தே படம் எடுத்தேன்" என்று நிரூபிக்க படாதபாடுபட்டாராம் புகைப்படப் பிடிப்பாளர்.

# அரங்கில் ஒரு அதிர்ச்சி



கிரிக்கெட் ஆட்டம் மீது பெண்களுக்கும் மகா ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. அதெல்லாம் இருக்கட்டும், இலண்டனில் மேற்கிந்திய தீவு அணியும், இங்கிலாந்து அணியும், ஆடிக்கொண்டிருந்த போது, அரங்கில் குதித்தார் ஒரு பெண். துடுப்பாடிக்கொண்டிருந்த இங்கிலாந்து வீரர்களை நோக்கி ஓடத் தொடங்கினாள். மேற்கிந்திய தீவு வீரர்கள் பந்தை மறந்துவிட்டு அந்த அழகியைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். துடுப்போடு நின்றவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஓடி வந்துகொண்டிருந்த பெண்ணின் உடம்பில் பொட்டுத் துணிகூட இருக்கவில்லை. முதலில் அதிர்ந்தாலும் பின்னர் உஷாராகிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஒரு துணியோடு பாய்ந்து அந்தப் பெண்ணை ஒரே அமுக்காக அமுக்கி அள்ளிக் கொண்டு போனார்கள். "விட்டிருக்கலாம், இலண்டனில் இது சகஜம்" என்றார். ஒரு குறும்பர். விட்டிருக்கலாம் தான், வீரர்களின் கதி?



## ஆ.....

உலகிலேயே மிகப் பெரிய புகைப்படம் இது. அதிக முறை பிரிண்ட் செய்யப்பட்ட படமும் இதுதான்.

# உயிரணுவுக்கும் ஒரு வங்கி



ஆண் உயிரணுக்களைச் சேமித்து வைப்பதை 'ஸ்பேர்ம் பாங்க்' என்கின்றனர். உயிரணுக்களைக் குறைவாகக் கொண்டவர்கள் இந்த வங்கி மூலம் உயிரணுக்களை வாங்கி குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்படியொரு வங்கியை முதன்முதலாக 1990ம் ஆண்டு பம்பாயில் தொடங்கினார்கள். இதுவரை சுமார் 300 பேர் இந்த வங்கியிடம் உயிரணுக்களை வாங்கி குழந்தைகளைக் கொஞ்சிக் கொண்டிருக்கின்றனர்.

இப்போது வேதனை என்னவென்றால் இந்த உயிரணுக்கள் வங்கியை மூடப் போகிறார்கள். அதற்குக் காரணம்- உயிரணுக்களை நிறைய ஆண்கள் தானம் செய்ய முன்வராததுதான்.

# கலக்குது பார் இவர்ஸ் ரைலு!



படத்தில் இருப்பது ஒரங்குட்டான் இனக் குரங்கு. 'எங்கே அசத்து பார்க்கலாம் என்று கமராக்காரர் கேட்டதுதான் தாமதம் சட்டென்று நாவைச் சுழற்றினார் ஒரு சுழற்று. உச்சக்கட்டப் 'போஸ்'! கமராக்காரருக்கு படு திருப்தி. இதுதான் (டா) ஸ்ரைலு





# எதையும் தாங்கும் உடல்

வேனில் முன்பக்கத்தின் ஒரு சக்கரம் வயிற்றில் ஏறிக் கடந்துவிட்டது. பின்சக்கரமும் ஏறிச் செல்லும் வரை எழமாட்டேன் என்று கிடப்பவர் ஒரு பெண். சாதாரண பெண்ணல்ல. கராத்தேயில் உயர்தரமான கறுப்புப் பட்டி பெற்றவர். கடும்பயிற்சியால் பலப்பிரயோகத்தை தாங்கும் வலிமையை உடல் பெற்றுவிட்டது. பலத்தை பொது அரங்கில் நிரூபித்துக் காட்ட வேண்டாமா? அதுதான் இது!

# தப்பாக நினைக்காதீர்கள்

படத்தைப் பார்த்தவுடன் என்ன நினைத்தீர்கள்? இரண்டு ஆடு தலை ஒன்று என்றுதானே. தப்பு! ஒரு ஆடு தலையைக் குனிந்து புல்மேய்ந்து கொண்டிருக்கிறது. கமராக் கோணம் எப்படி? புதுமைதானே!






## தகவல் பெட்டி

# நாற்காலியில் நற்காரிகை

படத்தில் இருப்பது மாபெரிய நாற்காலி. அதன் பிரமாண்டத்தை காட்டுவதற்காக மட்டுமே நற்காரிகை ஒருத்தியை அமரவைத்து கமராவால் சுட்டிருக்கிறார்கள். தவிர காரிகைக்கு நாற்காலி ஆசையெல்லாம் மருந்துக்கும் இல்லை. கெட்டியாகப் பிடித்திருப்பதைப் பார்த்தால் நாம் சொல்வதை நம்பமுடியாமல் இருக்கிறதோ?

ஜிக்கு புக்கு ரயிலு கலக்கல்தான். அதே கவிழ்ந்து போனால் கலக்கம்தான். பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்திற்கு 80 கிலோமீற்றர் தள்ளி இந்த விபத்து ஏற்பட்டது. மலையுச்சிப் பாலத்திலிருந்து தவறிவிழுந்த ரயில் பெட்டிகள் முழுவதும் விழுந்துவிடாமல் அதிசயமாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன. 13 பேரைப் பலியெடுத்த இந்த விபத்தில் 100 பேர் காயமடைந்தனர். பெட்டி கீழே விழுந்திருந்தால் பலியானவர்கள் எண்ணிக்கை பயங்கரமாக இருந்திருக்கும்.

# கவிழுது பாரு ரயிலு



'தேள்' கொட்டினால்தான் விஷம். 'தேள்' போல பாவனை காட்டினால் ரசிப்பதற்கு இதம். படத்தில் பாருங்கள் 'தேள்' போன்ற ஒப்பனை செய்து பொது இடத்தில் வித்தை காட்டுகிறார்கள். இந்த முயற்சிக்கு மூன்றுபேர் தோள் கொடுத்து தேளாயிருக்கிறார்கள். இலண்டனில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது.

# மூன்று தோள் ஒரு தேள்



## மனைவி அமைவதெல்லாம்

திரைப்படங்களுக்கு பெயர் வைப்பதில் சிக்கல் ஏற்பட்டால் பாடல் வரிகளை வைத்து பெயர் சூட்டிவிடுகிறார்கள்.

அந்த வரிசையில் மற்றொரு படம். 'மனைவி அமைவதெல்லாம்'. படத்தின் நாயகன் சிவகுமார். அவருக்கு ஜோடியாக நடிக்கப் போகும் நடிகைக்கான தேர்வு நடைபெற்று வருகிறது. நவம்பர் மாதம் படப்பிடிப்பு ஆரம்பம்.

## பாடகர்

தொட்டாச் சிணுங்கி படத்தில் கார்த்திக் பின்னணிப் பாடகராக நடிப்பது தெரிந்த செய்தி. திக்குவாய்க்காரர் பாடகராக மாறுகிறார் என்பது புதிய செய்தி.

## கமல் மீது ஐஸ் மழை

கமலுக்கு ஐஸ் மழை பொழிந்து கொண்டிருக்கிறார் கவுதமி. தெலுங்கு, இந்தி, என்றெல்லாம் ஓடியும் மார்க்கெட்டை உயர்த்த முடியாமல் நொந்து போயிருந்த போது கமல் கைகொடுத்திருக்கிறார். 'குருதிப்புனல்' படத்தில் தனது ஜோடியாக்கினார். குளிர்ந்துபோன கவுதமி கமலோடு இனியில்லையென்றளவுக்கு நெருக்கமாக நடித்திருக்கிறார். போதாக் குறைக்கு கமலின் கண்ணசைவு, காலசைவு பற்றியெல்லாம் ஓஹோ என்று புகழ்ந்து கொண்டிருக்கிறார். கமல் சிறந்த நடிகர்தான். ஆனால் கவுதமி கமலைப் புகழ்வதில் பொது நோக்கம் மட்டும் இருப்பதாகத் தெரியவில்லை.

## நக்மாவுக்கு அதிர்ச்சி

பிரபுதேவா-ரம்லத் காதல் விவகாரம் கல்யாணத்தில் முடிந்து விட்டதாக செய்தி வந்தபோது அதிர்ந்து போனவர்களில் நம்பர்1 இடத்தில் இருந்தவர் நக்மா. மொரீஷியல் நாட்டில் ரகசியப் பொலிஸ் படப்பிடிப்பில் இருந்த போதுதான் செய்தி கிடைத்ததாம். உடனடியாக சென்னைக்கு போன் போட்டு தனது மனேஜருடனும், தெரிந்த சினிமாப் புள்ளிகளுடனும் தகவல் உண்மைதானா என்று கேட்டறிந்தாராம். நக்மாவுக்கும் ஒரு கண் பிரபுதேவா மீது.

## முதுகில் செ…

பாண்டியராஜன் க… நடிக்கும் படம் 'காலம் … அதற்காக பாடல் … செய்யப்பட்டுள்ளது. … வரிகள் இவை:

"அச்சம் என்னடி
நாணம் என்னடி
ஆண்கள் முதுகில்
கும்மி கொட்டடி!
ஏய் கூட்டுப் புழுவே
கொஞ்சம் வெளியி…
பட்டாம் பூச்சியாய்
பறந்து வா!"

பாடலை எழுதியவ…

## ஆச்சரியம் ஆனால் உண்மை

சங்கவி என்றால் கவர்ச்சி சங்கதி இல்லாமல் போகாது என்பது தெரிந்த சங்கதி. ஆனால் பாரதி ராஜாவின் 'அந்தி மந்தாரை' படத்தில் கல்லூரிப் பேராசிரியரின் மனைவியாக 5 வயதுப் பெண் குழந்தைக்கு தாயாக அடக்க ஒடுக்கமாக நடிக்கிறார் சங்கவி. ஒரு காட்சியில் ஒரே ஒரு காட்சியில் கூட, ஒரு சம்பிரதாயத்துக்குக்கூட ஆடைக் குறைப்பே செய்யவில்லையாம்.

## எடை குறைந்த பிரபு

'சீதனம்' படத்திற்காக தனது எடையைக் குறைத்திருக்கிறார் பிரபு. 'சீதனம்' படத்தில் கதாநாயகி சங்கீதா. 'அவர் ஒல்லியாக இருக்கிறார். பிரபு புஸ் புஸ் என்று குண்டாக இருக்கிறார்' என்று ரசிகர்கள் அபிப்பிராயப்பட்டு விடக்கூடாதல்லவா? அதனால் கிட்டத்தட்ட என்றாலும் இருவருக்கும் ஜோடிப் பொருத்தம் ஓ.கேயாக இருக்க வேண்டாமா? அதுதான் எடையைக் குறைத்திருக்கிறார் பிரபு. அதற்காக எக்கச்சக்கமாக இளைத்துவிட்டார் என்று நினைத்துவிடாதீர்கள். இங்குள்ள படத்தைப் பார்த்தாலே தெரியுமே.

## ரஜினி

இசையமைப்பாளர் தேவா… கூட்டுச்சேர்ந்தால் வெற்றிதான்… படத்தில் தேவாவின் இசை சூ… 'பாட்ஷா' படத்திலும் சூப்ப… முன்னணிக் கதாநாயகர்க… படங்களுக்கு இசையமைத்துக் … தேவா. ஆனாலும் பந்தா இ…



பிரபு-சங்கீதா
படம் -சீதனம்

## காதோடு சொல்கிறோம்

**'கா'** நடிகரும் 'சுக' என்று பெயர் ஆரம்பிக்கும் நாலெழுத்து நடிகையும் நெருக்கமாகிவிட்டனராம். 'கா' நடிகர் தன்னிடம் வரும் தயாரிப்பாளர்களிடம் நடிகைக்காக பலமாக சிபாரிசு செய்கிறாராம்.

**மா**வீரன் ஒருவரின் பெயரில் உள்ள நடிகருக்கு பல படங்கள் அடுத்தடுத்து தோல்வி. புதிய படம் ஒன்றில் நடிக்க மலரின் பெயருள்ள நடிகையைசிபாரிசு செய்தாராம் நடிகர். அவரா நாயகன்? நடிக்க மாட்டேன் என்று விட்டாராம் நடிகை.

**க**விஞரின் மகளான நடிகையும், எழுத்தாளருமான 'கவிஞி' ஒரு அரசியல் பிரமுகரின் அன்புப்பிடியில் சிக்கியிருக்கிறாராம். 'கவிஞி'யின் தாய்க்குலம் பச்சைக்கொடி காட்டியிருக்கிறாராம்.

**வெ**ளியான படமும் ஹிட்டாகிவிட்டதால் 'சங்' நடிகையும் இளம் நாயகனும் முன்னைவிட ராசியாகிவிட்டனராம். இயக்குநரான தந்தையார் தற்காலிக அனுமதி மாதிரி கண்டும் காணாமலும் இருந்துவருகிறாராம்.

**'பூ**ஜா' நடிகை தமிழ் படவுலகப் பக்கம் திரும்பியிருப்பதால் ஏற்கனவே நொந்துபோயிருக்கும் கவர்ச்சி நாயகிகள் மேலும் நொந்து போய்விட்டார்களாம்.

## மனோவின் முயற்சி

ஏ.ஆர். ரகுமான் புதிய பின்னணிப் பாடக, பாடகிகளை முன்னுக்கு கொண்டுவருகிறார். அதனால் முன்னாள் பாடக, பாடகிகள் சிலர் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் மனோ. இப்போது மேடைக் கச்சேரிகளில் குதித்துள்ள மனோ சொந்தமாக ஒரு இசைக்குழு உருவாக்கியிருக்கிறாராம். அரபு நாடுகள் உட்பட வெளி நாடுகளுக்கு பறந்து இசைக் கச்சேரி நடத்தப் போகிறாராம்.

## கறுப்பு ரோஜாவில் புதுமை


திரைப்பட கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் திரையுலகில் தனி இடம் பெற்றுக் கொடுத்தவர் ஆபாவாணன். விஜயகாந்த் நடிக்க திரைப்பட கல்லூரி மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாகிய படம் ஊமை விழிகள். அதன் பின்னர் பல படங்களை உருவாக்கினார் ஆபாவாணன்.

ஆபாவாணன் கூட்டணியின் கைவண்ணத்தில் முடிவடையும் நிலையிலுள்ள படம் 'கறுப்பு ரோஜா.'

பிரபல பெண் எழுத்தாளர் இந்துமதி வசனம் எழுதுகிறார். திரைப்பட கல்லூரி மாணவர் அமர் சித்திக் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியும் புதுமுகம். யோசிகா என்பது அவரது பெயர். பெயரை மாற்றலாமா என்று யோசிக்கிறார்கள்.

6 டிஜிட்டல் சவுண்ட் சிஸ்டம் இந்தியப் படங்களில் முதன் முதலில் இடம் பெறுவது கறுப்பு ரோஜாவில்தானாம். தனியார் தொலைக்காட்சிகளின் போட்டிகளை சந்திக்கவே இந்த ஏற்பாடாம். மேலும் பல புதுமைகள் உண்டு. தற்போதைக்கு அவையெல்லாம் 'சஸ்பென்ஸ்' என்கிறார் ஆபாவாணன்.

கதை, திரைக்கதை, பாடல்கள், இணை இசை, ஆபாவாணன். இயக்கம், ஜெபன்வீர். ஒளிப்பதிவு, பி.செல்வக்குமார்



ரஜினிகாந்த்
படம்-முத்து

## மம்முட்டி…

கலைஞர் கரு… சிவாஜி-பத்மினி … 'புதையல்' மம்முட்டி… நடித்துவரும் பட… ஆம்னி, ஷாக்ஷி … ஷாக்ஷி பம்பாய் …

கவுண்டமணி, … நிர்மலாம்மா ஆகி…

நகைச்சுவையு… நிறைந்த படமாக … திரைக்கதை வச… அமராவதி, கர்ண… இசை; வித்யாசா…

## அமைச்சரு…

'ரகசியப் பொ… நடிக்கிறார் ரா… அதிகாரியாக ந… நாடு செல்லும் … ராணுவவீரர்கள் … வரவேற்பது போ… பட்டன. உண்மை… களையும், உண்… யும் பயன்படுத்… யுள்ளனர்.

சரத்குமார்-… டைக்காட்சிகளு…

## சுரேஸ் மீனா…

இளம் கதாந… இடையிலே கா… சுரேஸ். பாடகி… அனிதாவை தி… ஒரு குழந்தையு… போது இருவ… விட்டனர். சுரே… நடிப்பில் பிஸி. … களில் கதாந… ஒப்பந்தமாகியிரு…

## முகப்பில்

பாலகிருஷ்ணா-ரோஜா
படம்-வீராதிவீரன்.

விஜய்-வனிதா
படம்-சந்திரலேகா

## மினி சினி

* பிரபு-சத்யராஜ் இணைந்து நடிக்கும் 'சிவசக்தி' படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்குகிறார் என்பது தெரிந்தசெய்தி. இந்தியில் அமிதாப்பச்சன்-மிதுன் சக்கரவர்த்தி நடித்த 'அக்னிபாத்' படத்தின் தமிழ்ப்பதிப்புத்தான் 'சிவசக்தி'!
* தனது தந்தை இளையராஜாவின் இசையமைப்பில் 'ராசய்யா'வில் 'மஸ்தானா மஸ்தானா...' பாடலையும், 'சந்திரலேகா'வில் ஒரு பாடலையும் பாடியுள்ள பவதாரிணி, தற்போது அவரது சகோதரன் கார்த்திக்ராஜா இசையமைக்கும் 'அலெக்ஸாண்டர் தி கிரேட்' என்ற படத்தில் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.
* 'அசுரன்' படத்திற்குப் பின்னர் ஆர்.கே.செல்வமணி தயாரிக்க வேலுபிரபாகர் இயக்கும் 'ராஜாளி' படத்தில் முதலில் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமானவர் அருண்பாண்டியன். இப்போது நெப்போலியன் 'ராஜாளி'யில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.
* 'என் ஆசை மச்சான்', 'காந்தி பிறந்த மண்' ஆகிய படங்களில் விஜயகாந்துடன் இணைந்து நடித்துள்ள ரேவதி, விரைவில் விஜயகாந்த் நடிக்கும் புதிய படமொன்றைத் தயாரிக்க இருக்கிறார்.
* தமிழில் வெற்றிபெற்ற 'ராசுக்குட்டி', 'வால்டர் வெற்றிவேல்' ஆகிய இரு படங்களும் இந்தியில் கோவிந்தா-கரிஷ்மா கபூர் ஜோடியாக நடித்து 'ராஜாபாபு', 'குத்தார்' ஆகிய பெயர்களில் வெளியாகி வெற்றிபெற்றது. தற்போது இந்த ஜோடி நடித்து வெளிவர இருக்கும் 'கூலி நம்பர் வன்' பிரபு-சுகன்யா நடித்துள்ள 'சின்ன மாப்ளே'யின் ரீமேக்.
* 'தேடிவந்த ராசா' படத்திற்குப்பின் சங்கீதாவை தனக்கு ஜோடியாக்கி 'அம்மன் கோவில் வாசலிலே' என்ற படத்தை இயக்கித் தயாரித்து வரும் ராமராஜன், அடுத்ததாகத் தயாரிக்கும் படத்தில் கனகாவைக் கதாநாயகியாக்கியுள்ளார்.
* கே.ஆர். விஜயா கதாநாயகியாக நடிக்கும் 'மாங்காடு காமாட்சி' படத்தில் அறிமுகமாகும் புது முகத்தின் பெயர் 'மல்லிகை'. இயக்குநரும் புதியவர். எம். வி. இராமநாதன்.
* பாக்யராஜிடம் உதவி இயக்குநராக இருந்த ரத்னகுமார் என்பவர் சரத்குமார் நடிக்கும் புதிய படமொன்றின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இப்படத்தின் கதை, வசனத்தை பாக்யராஜே எழுதுகிறார்.
* ரஜினி நடித்து பெரும் வெற்றி பெற்ற 'பாட்ஷா' தமிழில் மாத்திரமன்றி தெலுங்கிலும் மொழிமாற்றப்பட்டு வெற்றி பெற்றது. தற்போது 'பாட்ஷா' இந்தி பேசப்போகிறது. ஆம், 'பாட்ஷா'வை இந்தியில் மொழிமாற்றி வெளியிடவுள்ளார் அமிதாப்பச்சன்.
* கமல் தெலுங்கில் தயாரித்து நடித்து வரும் 'குருதிப்புனல்' படத்தை ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் இயக்கி வருகிறார். பி.சி.ஸ்ரீராமிடம் கமலின் மனைவி சரிகா கமலஹாசன் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார்.



# 'சூப்பர் கலக்கல் ரங்கீலா'

ஏ.ஆர். ரகுமானின் 'முக்காபுலா' பாடலால் அசந்துபோன பம்பாய் படவுலகம் இப்போது 'ரங்கீலா' படப்பாடல்களால் உறைந்துபோய் நிற்கிறது.

திரையிடப்பட்ட இடமெல்லாம் செமத்தியான வசூல். படத்தில் கதையென்று பார்த்தால் எதுவுமில்லை. முழுக்க முழுக்க இசையை நம்பி அதாவது ஏ.ஆர்.ரகுமானை நம்பி எடுக்கப்பட்ட படம். இசைக்கு ஏற்ப நெளிந்து, வளைந்து, உடை விஷயத்தில் ரொம்ப அலட்சியமாக நடித்துள்ளார் ஊர்மிளா மண்டேக்கர். அவர்தான் கதாநாயகி. இசை ஆட்டுவிக்கிறது. ஊர்மிளா ஆடுகிறார். ஆடாமல் அசையாமல், கட்டிப்போட்டது போல் ரசிக்கிறார்கள் ரசிகர்கள். ஜாக்கி ஷெராப், அமீர்கான் ஆகியோரும் தமது பங்குக்கு புகுந்து விளையாடுகிறார்கள். பம்பாயில் மட்டுமல்ல, சென்னையிலும் சக்கைபோடு போடுகிறது 'ரங்கீலா'. ரங்கீலாவால் இந்திப்பட தயாரிப்பாளர்கள் ரகுமான் வீட்டு வாசலில் காத்துக் கிடக்கிறார்கள். தமிழ்பட தயாரிப்பாளர்கள் ஊர்மிளாவை வட்டமடிக்கிறார்கள். 'இந்தியன்' படத்தில் கமலோடு டூயட் பாடிக்கொண்டிருக்கிறார் ஊர்மிளா. ரங்கீலா என்றால் கலர்ஃபுல் என்று அர்த்தம். அர்த்ததிற்கு ஏற்ப படம் இருப்பதால் வசூலுக்கு பஞ்சமில்லை. 50 நாளைத் தொடப்போகிறது நிரம்பிய வசூலோடு. நூறுநாளைத் தாண்டியும் செல்லப்போவது நிச்சயம்.

# சினிவிசிட்

## ரம்பாவுக்கு 16

செங்கோட்டை படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடிக்கும் ரம்பாவுக்கு 16 வயது. தெலுங்குப் படங்களில் ரம்பா கவர்ச்சிக் குண்டு. இந்தியில் மிதுன் சக்கரவர்த்தியோடு 'ராவண்ராஜ்' படத்தில் நடிக்கிறார் ரம்பா. மிதுனுக்கு ரம்பாவைவிட மூன்று மடங்கு அதிகமான வயது. 'ஐஸ்' என்னும் படத்தில் அஜய்தேவுகனுடன் இணைகிறார் ரம்பா. முதலில் ஷில்பா ஷெட்டியை போட நினைத்தார்களாம். ரம்பா என்ன மந்திரம் போட்டாரோ ஷில்பாவை ஓரம்கட்டி ரம்பாவுக்கு சான்ஸ் கொடுத்துவிட்டார்கள்.

## 4 ஜோடிகள்

காலம் மாறிப் போச்சு படத்தில் நான்கு ஜோடிகள். பாண்டியராஜன்-சங்கீதா, வடிவேலு-கோவைசரளா, பெரியார்தாசன்-ரேகா, வினுச் சக்கரவர்த்தி-வடிவுக்கரசி. திரைக்கதை, வசனம், இயக்கம், வி. சேகர்.

## ஆசை நாயகன்

வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படம் ஆசை. கதாநாயகனாக நடித்துள்ள அஜித்குமாருக்கு ஆசை இரண்டாவது படம். 'அமராவதி' முதல் படம்.

அஜித்குமார் சினிமாவுக்கு வரமுன்னர் மோட்டார் சைக்கிள் பந்தய வீரர். பல விருதுகளையும் பெற்றவர்.

தான் வெள்ளையாகப் பிறந்து விட்டதற்காக வருந்துகிறார் அஜித்குமார். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? வெள்ளையாக இருப்பதால் தன்னை வடநாட்டவர் என்று கருதுகிறார்களாம். "நான் சென்னையைச் சேர்ந்த தமிழன்" என்று சொல்கிறார் அஜித்குமார். இந்தக் கதாநாயகனுக்கு வயது 24. 'வான்மதி' 'முத்துப்பேச்சி' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

## மழையோடு மழையாக

செயற்கை மழை. அதனால் உடலோடு ஒட்டிய உடை. கவர்ச்சி என்றால் என்ன என்பதற்கு அதுதான் தமிழ் படவுலகின் சுலபமான விடை.

'மாப்பிள்ளை மனசு பூப்போல' படத்தில் யுவராணியையும், பாண்டியராஜனையும் செயற்கை மழை தொப்பலாக்கிவிட்டது. யுவராணி மீண்டும் மார்க்கெட்டை பிடிப்பதற்காக முடிந்தவரை நனைந்திருக்கிறார்.

'புதுநிலவு' படத்தில் சங்கவியை நனைத்தெடுக்கிறார்கள். அடிக்கடி நனைந்து பழக்கப்பட்டதால் படு அலட்சியமாக நடித்தாராம் சங்கவி. 'நைட்டுக்கு இவள் நைட்டிங் கேள்' என்ற பாடலுக்கு ஏற்ற விதத்தில் நடன அமைப்பு. ரமேஷ் அரவிந்தோடு சேர்ந்து நனைந்து நடித்திருக்கிறார் சங்கவி. மழையில் நனையும் காட்சி என்றால் கவர்ச்சி தூக்கலாக இருந்தாலும் அது இயற்கை என்று தணிக்கை குழுவோடு வாதிடலாமாம். கில்லாடிகள்!



பாண்டியராஜன்-யுவராணி
படம்-மாப்பிள்ளை மனசு பூப்போல




## அதிஷ்டக் கட்டை

நடிகர் விஜயகுமாரின் மகன் அருண்குமார் முறைமாப்பிளை படத்தில் நடித்துவருகிறார். 'லவ்ஸ்டோரி' படத்திலும் நடிக்கப் போகிறார். இரண்டிலும் கதாநாயகன். இப்போது மூன்றாவது படத்திலும் ஒப்பந்தமாகியிருக்கிறார். படத்தின் பெயர் 'பிரியம்' பம்பாய் அழகி மந்த்ரா கதாநாயகியாக நடிக்கிறார். ரகுவரன், வடிவேலு, சித்ரா, காந்திமதி, ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை; வித்யாசாகர். இயக்குபவர் புதுமுகம். பெயர் என்.பாண்டியன். அருண்குமார் அதிஷ்டக்கட்டை. நடித்து ஒரு படம் வெளியாக முன்னரே மூன்று பட நாயகன் என்று பெயரெடுத்துவிட்டார்.



கோவிந்தா-சோனாலி

## விருது தான் குறி

தேசிய விருதை இன்னொரு தடவை பெறுவதற்கு பாரதிராஜாவுக்கு ஆசை. அவரோடு சேர்ந்து தனக்கும் ஒரு விருது வாங்கிவிட விஜயகுமாருக்கு ஆசை. அதனால் வெய்யிலில் காய்ந்து கருவாடாகிக் கொண்டிருக்கிறார் பாரதிராஜா. இரவு பகலாக நடக்கிறது 'அந்திமந்தாரை' படப்பிடிப்பு. உடம்பை குறைத்து, நிஜமாகவே தாடி வளர்த்து நடிக்கிறார் விஜயகுமார். இவர்களோடு இன்னொருவரும் இரவு பகலாக கஷ்டப்படுகிறார். அவர் ஜெயசுதா. கமல், ரஜினியோடெல்லாம் இளமைத் துடிப்போடு ஒரு காலத்தில் நடித்த ஜெயசுதாவுக்கு இதில் கிழவி வேடம். இளைஞியாக மட்டுமல்ல கிழவி வேடத்திலும் அசத்தலாங்க என்கிறாராம் ஜெயசுதா. சரி, இவர்களில் யாருக்கு விருது.

## மற்றொரு வீரப்பன்

சந்தனக்கடத்தல் வீரப்பனை இந்தியப் பொலிசார் பிடிக்கிறார்களோ இல்லையோ, திரைப்பட உலகத்தினர் வீரப்பன் கதையை தினுசு தினுசாக படமெடுத்துத் தள்ளுகிறார்கள். கன்னடத்தில் 'வீரப்பன்.' என்னும் பெயரிலும், தெலுங்கில் 'கில்லர் வீரப்பன்' என்ற பெயரிலும் வெற்றி பெற்ற படம் தமிழில் மொழி மாற்றப்படுகிறது. 'வாண்டட் வீரப்பன்' என்று பெயர் வைத்துள்ளனர். கன்னட நடிகர் தேவராஜ், வனிதாவாசு, ஜோடியாக நடித்துள்ள படம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## என்ன கவலை உங்களுக்கு?

கவலை பல காரணங்களால் ஏற்படலாம். கவலைக்கு, சிலசமயம் நாமும், சில நேரங்களில் மற்றவர்களும் காரணமாக இருக்கலாம். கவலையில் இருந்து நிவாரணம் பெற என்ன செய்ய வேண்டும்?

உணர்ச்சி வசப்படுதல், வெறுப்பு, பகைமை, நிம்மதி அற்ற தன்மை, தன் நம்பிக்கை இழத்தல், வேலைப்பளு, தூக்கமின்மை, வறுமை, தண்டனை, வழக்கு முதலியவையே கவலைக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

சிலர் சின்ன விஷயங்களை பெரிது படுத்துவார்கள். சிலர் பெரிய கவலை வந்தாலும் பொருட்படுத்தாமல் மனதை அலட்டிக்கொள்ளாமல் இருப்பர்.

நீங்கள் எந்த வகையைச் சார்ந்தவர்கள் என்பதை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகள் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

* சின்ன விஷயத்திற்கோ அல்லது ஏமாற்றத்திற்கோ கவலைப்படுபவரா?
* மற்றவர்களுடன் பழகுவதால் பிரச்சனைவரும் என்று நினைப்பவரா?
* நடந்ததை நினைத்து திரும்பத் திரும்பக் கவலைப்படும் நபரா?
* புதிய இடத்திற்கோ, புதிய நபரையோ சந்திக்கச் செல்லும் பொழுது உங்களை அறியாமலேயே பயப்படுபவரா?
* மற்றவர்களையும், நண்பர்களையும் சந்தேகப்படும் குணம் உண்டா?
* தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைப்பவரா?



மேலே குறிப்பிட்டிருக்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் 'ஆம்' என்றால் உங்களை விட்டு வாழ்க்கை முழுவதும் கவலை மாறாது. கவலையை மறப்பதற்கு இதோ சில வழிகள்:

* எந்தக் கவலையையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் மூடி மறைக்காமல் நம்பிக்கையான நபரிடம் கூறி கவலையிலிருந்து விடுபட்டு கவலைக்கான காரணிகளை ஆராய்ந்து செயல்படுங்கள்.
* கோபம் வரும் பொழுது இருக்கும் இடத்தைவிட்டு எழுந்து சென்று விடுங்கள். புத்தகம், விளையாட்டு, திரைப்படம், உங்கள் கோபத்தை குறைப்பதோடு, சூழ்நிலையை சமாளிக்கும் தைரியத்தையும் கொடுக்கும்.
* கோபமாக இருக்கும் பொழுது செய்யும் செயல்கள், எழுத்துக்கள், முடிவுகள் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். சில நிமிட ஓய்வுக்குப்பின் உங்கள் கோபத்திற்கு காரணமாக இருந்த சொல்லோ, செயலோ மிகவும் சாதாரணம் என்பது புரியும்.
* மற்றவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் மதிப்புக் கொடுங்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் உங்கள் மனதில் நிம்மதி ஏற்படும்.
* வேலைப்பளு அதிகமாக இருந்தால், முக்கியமான அவசரமான வேலையை முதலில் திறம்படச் செய்துவிட்டால் மற்ற வேலைகள் எளிதாக முடிந்துவிடும்.
* தான் நினைத்தது தான் சரி என்று ஒற்றைக்காலில் நிற்காமல், மற்றவர்கள் சொல்வதிலும் மற்றவர்கள் கருத்திற்கும் மதிப்புக் கொடுங்கள். மற்றவர்கள் குறை கூறினாலோ அல்லது நீங்கள் எதிர்பார்த்த அளவு உங்களுக்கு ஆதரவு தரவில்லையென்றாலோ உடனே வாழ்க்கையை வெறுத்துவிடாதீர்கள். கவலையில் மூழ்கி விடாதீர்கள். சிலர் உங்களை பாராட்டாமல் இருக்கலாம். நீங்கள் செய்யும் செயல் ஒருவேளை உங்கள் மனைவிக்கோ அல்லது கணவனுக்கோஅல்லது குழந்தைகளுக்கோ பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக அவர்களை அடிமையைப்போன்று நடத்தாமல் ஆதரவு கொடுங்கள். அவர்களுக்கும் தன்னிச்சையாக தங்களைப்பற்றி முடிவெடுக்கக்கூடிய உரிமை உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது.
* சமுதாயத்திலோ அல்லது பொது நிறுவனங்களிலோ உங்களுக்கு போதிய வாய்ப்பும், மரியாதையும் கிடைக்கவில்லை என்பதற்காக ஓடி ஒளிந்து கொள்ளாதீர்கள். எப்போதும் உங்கள் சேவை மற்றவர்களுக்கு கிடைக்கும் வண்ணம் நடந்து கொள்ளுங்கள்.
* ஓய்வு என்பது எல்லோருக்கும் தேவையானது. அதை சரியான முறையில் திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ளுங்கள். திரும்பத் திரும்பக் காரணம் இல்லாமல் கவலை ஏற்பட்டால் மனோதத்துவ நிபுணரின் உதவியை நாடுங்கள்.

## நிலா முகம்

* உடல் பருமனாக உள்ள பெண்கள் சற்று கருமையான வண்ணம் கொண்ட சேலைகளை அணிந்தால் உடல் குண்டாகத் தெரியாது.
* கறுப்பான பெண்கள் ரோஸ் வண்ணம், செம்மஞ்சள் வண்ணம் உள்ள மெல்லிய வண்ண சேலைகளை அணியுங்கள் உங்கள் தோற்றத்தில் அழகு கிடைக்கும்.
* மாநிறமுள்ள பெண்கள் மிகமிக மெல்லிய வண்ணப் புடைவைகளும், வெள்ளைநிறப் புடவைகளும் கட்டினால் அழகாக இருப்பீர்கள்.
* அகலமான கரையுள்ள புடவைகளை உயரமான பெண்கள் உடுத்தினால் பார்ப்பவருக்கு உயரம் குறைவாகக்காட்டும்.
* வல்லாரை இலைச்சாற்றில் தேங்காய் எண்ணெயைச் சமஅளவில் கலந்து, காய்ச்சி, வடிகட்டி தினமும் இரண்டு தேக்கரண்டி தலையில் அழுந்தத்தேய்த்து வந்தால் தலைமுடி செழிப்பாகவும், கறுப்பாகவும் வளரும்.
* இரவு படுக்கப் போகுமுன் ஒலிவ் எண்ணையை முகம் முழுவதும் பரவலாக மேல் நோக்கி மெதுவாகத் தேய்த்து இரவு முழுவதும் அது ஊறியபின் காலையில் முகம் கழுவினால் முகத்தில் சுருக்கங்கள் விழாமல் தடுப்பதுடன் சிறிய தழும்புகள், கரும்புள்ளிகளும் நீங்கும்.
* எண்ணெய்ப் பசை மிகுந்த முகத்தில் முட்டையின் வெள்ளைக்கருவுடன் சிலதுளி எலுமிச்சை சாறு கலந்து, தேய்த்து அரை மணிநேரம் ஊறிய பின் குளிர்ந்த நீரில் கழுவினால் கன்னம் மிளிரும்.
* கால்களில் சிலருக்கு பித்த வெடிப்புக்கள் காணப்படும். அப்படி



உள்ளவர்கள் இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் கால்களைச் சுத்தமாகக் கழுவி, 'மெதிலேட்டட் ஸ்பிரிட்' என்ற மருந்தை பஞ்சில் ஒற்றிப்போட்டால் குணமடையும்.
* நகங்கள் உடையாமல் இருக்க இரவில் படுக்கும் முன் வெதுவெதுப்பான ஒலிவ்எண்ணெயை நகத்தில் தடவி மசாஜ் செய்ய வேண்டும்.
* பற்களும், ஈறுகளும் உறுதியாக இருக்க உப்பை எலுமிச்சம்பழச்சாற்றில் கலந்து ஈறுகளின் மேல் தடவவும். இதனால் ஈறுகள் பலப்பட்டு இரத்தக்கசிவும் நிற்கும்.
* கண் எரிச்சல் ஏற்பட்டால் குளிர்ந்த நீரில் நனைத்த பஞ்சை உருண்டையாக்கி மூடிய கண்களில் பத்து நிமிடங்கள் வைத்துப் படுத்தால் கண்களில் உள்ள சோர்வும், எரிச்சலும் அடியோடு நீங்கும்.
* தினமும் காலையில் தேனை இளம் சூடான வெந்நீரில் கலந்து பருகினால் உடல் எடை கட்டுப்படும்.

## கண்டு பிடித்ததும் கோட்டை விட்டதும்

சதுரங்க ஆட்டத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிமுகப்படுத்தியது இந்தியா.

சதுரங்கத்தில் வெற்றிக்கொடி நாட்டி வருபவர் ஒரு ரஷியக்காரர். பெயர், காஸ்பரோவ். சதுரங்க விளையாட்டில் காஸ்பரோவ் மகா கில்லாடி.. 'கிங்காங்' என்று ஒரு பட்டப் பெயரும் சம்பாதித்து வைத்திருக்கிறார்.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற சதுரங்கப் போட்டியை உலகம் முழுவதும் கவனித்துக் கொண்டிருந்தது.

ஆறு வயதிலிருந்தே சதுரங்கம் ஆட ஆரம்பித்து கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை பதினேழு வயதில் பெற்றவர் ஆனந்த். இந்தியரான ஆனந்த்துக்கு இப்போது வயது 25.

அவர்தான் காஸ்பரோவோடு மோதினார். காஸ்பரோவுக்கு 31 வயது.

அமெரிக்காவின் நியூயோர்ஜ் வர்த்தக மையத்தின் 107வது மாடியில் ஒரு கண்ணாடி அறையில் போட்டிகள் நடந்தன.

சதுரங்கமும் சுவையான ஆட்டம்தான். ஆனால் காய் நகர்த்தலுக்கு ஆட்டக்காரர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ளும்போது பார்வையாளர்களுக்கு நிறையப்பொறுமை தேவைப்படும்.

ஆனந்த்தின் ஒரு காய் நகர்த்தலுக்கு பதிலடி கொடுக்க காஸ்பரோவ் ஒருதடவை



ஆனந்த்

45 நிமிடம் யோசித்தார். ஆனால் ஆனந்த் ஆறு நிமிடத்தில் அதற்கு பதிலடி கொடுத்தார். அதிரடிப்பாணியில் ஆனந்த் ஆடினார்.

இறுதியில் காஸ்பரோவ்தான் வெற்றி பெற்றார். ஆனாலும் நான்குமுறை சதுரங்க ஆட்டத்தில் உலக சாம்பியன் பட்டம் வென்ற காஸ்பரோவை ஆனந்த் பல கட்டங்களில் திணறடித்தார் என்பதுதான் சதுரங்க நிபுணர்களை மூக்கில் விரல்வைக்க வைத்துவிட்டது.

தோல்வி கண்டபோதும் ஆனந்த்துக்கு ஒன்ணேமுக்கால் கோடி ரூபாய் பணம் பரிசாகக் கிடைத்தது. காஸ்பரோவுக்கு மூன்றரைக் கோடி ரூபாய் கிடைத்தது.

ஆனால், சோகம் என்னவென்றால் சதுரங்கத்தை கண்டுபிடித்துக் கொடுத்த நாடு கோட்டை விட்டுக்கொண்டிருக்கிறது.

## கூந்தலுக்கும் பகை உண்டு தெரியுமா?

கூந்தலைப் பராமரிக்க முதலில் கவனிக்கப்பட வேண்டியது உணவு விஷயம் தான். கூந்தல் கெரட்டீன் என்னும் புரதச் சத்துக்களைக் கொண்டது. அதனால் புரதச் சத்துள்ள உணவு வகைகளை உண்பது அழகான கூந்தலுக்கு மிகவும் அவசியம்.

முட்டை புரதச்சத்து நிறைந்துள்ள முழுஉணவு. இதிலுள்ள அமினோஅமிலம், விற்றமின் ஏ, பி, டி, இ ஆகியவையும் மற்ற உப்புச்சத்துக்களும், தலைமுடி செழிப்பாக வளர மிக அவசியம்.

பால்பொருட்களிலுள்ள கந்தகம், துத்தநாகம், லாடிக் அமிலமும் தலைமுடிக்கு மிகச்சிறந்த வரப்பிரசாதமாகும்.

காய்கறிவகைகளில் கீரைவகைகள், பச்சைக் காய்கறிகள், பீட்ரூட், கரட், தக்காளி முதலியவைகளும் தலைமுடி வளர இன்றியமையாத சத்துக்களைக் கொண்டவை.

பாதாம் பருப்பு, தோடம்பழம், மாம்பழம், பப்பாளிப்பழம் முதலியன தலைமுடி செழிக்க உபயோகமானவை. மாமிச உணவுகளில் ஈரல் பகுதிகள் தலைமுடி வளர உதவுபவை.

நல்ல கூந்தலைப் பெற தவிர்க்க வேண்டிய சில உணவுவகைகளும் உள்ளன. சீனி, கொழுப்புச்சத்துள்ள உணவுவகைகள் நல்ல தலைமுடிக்குப் பகைவர்கள். இவற்றை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது.

சுத்தமான தேங்காய்எண்ணெய் தலைமுடிக்கு மிகவும் பாதுகாப்பானது. மேலும் தேங்காய்எண்ணெய் தலைமுடிக்குக் குளுமையை அளித்து, மிருதுவாக வைத்து ஈரப்பசையையும் அளிக்கிறது.

பளபளப்பான கூந்தலுக்கு மற்றொரு சிறந்த வழி முட்டையின் வெள்ளைக் கருவையும், மஞ்சட்கருவையும் ஒன்றாகச் சேர்த்து அடித்துக்கலந்து தலையில், மயிர்க்கால்களில் நன்றாக ஊறும்படி மசாஜ் செய்த பின் குளிப்பது. இது தலைமுடிக்கு வேண்டிய புரதத்தை அளிக்கிறது.

கூந்தல் பராமரிப்பில் இன்னொரு முக்கியமான விஷயம், அதைச் சுத்தமாக வைத்திருப்பதுதான்.



தகுந்த பாதுகாப்பு முறைகளைக் கையாண்டால் எல்லோருமே பொறாமைப் படக்கூடிய அளவு பொலிவான கூந்தலை அடைய யாராலும் முடியும்.

### சமைப்போம் சுவைப்போம் — தொகுத்துத் தருவது சுகந்தினி

## சீஸ் நூடில்ஸ் சாலட்


**தேவையான பொருட்கள்**

நூடில்ஸ் - ஒரு பக்கட்
சீஸ் - 200 கிராம்
பச்சைப்பட்டாணி- 1/2கப்
எலுமிச்சம் பழச்சாறு - ஒரு மேசைக்கரண்டி
கொத்தமல்லி இலை - ஒரு மேசைக்கரண்டி
வினிகர்- ஒரு மேசைக்கரண்டி
பச்சை மிளகாய் - 3
வறுத்த கச்சான்- ஒரு மேசைக்கரண்டி
தக்காளி - 5
மிளகு - ஒரு தேக்கரண்டி
கரட் - 1
உப்பு - அளவாக
எண்ணெய்- தேவையான அளவு.

**செய்முறை:**

நூடில்ஸை வேகவைத்து தண்ணீர் வடிகட்டி தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும். எலுமிச்சம்பழச்சாறு, வினிகர், உப்பு, ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ளவும். இதில் வேகவைத்த நூடில்ஸ், வேகவைத்த பட்டாணி, தக்காளி, சீஸ், ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ளவும். வாய் அகலமான பாத்திரத்தில் நூடில்ஸ் கலவையைப் போட்டு, அதன் மீது நறுக்கிய பச்சை மிளகாய், துருவிய கரட், தோல் நீக்கிய வறுத்த கச்சான், கொத்தமல்லி இலை ஆகியவற்றைத் தூவிவிட வேண்டும். மிளகை எண்ணெயில் வறுத்து தூள் செய்து இதன்மீது தூவவும். இப்போது சாப்பிட்டுப் பாருங்கள் சுவையாக இருக்கும்.

## இவர்கள் தான் அந்த அதிஷ்டசாலிகள்



மகளிர் மட்டும் பரிசுப் போட்டியில் அதிஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் இவர்கள்தான்.

① கே. ஜானகி, கன்னாரத் தெரு, கொழும்பு-13.
② சி. வீணாதேவி, ஆரியபுர, பொகவந்தலாவ.
③ திருமதி. தேவராஜா கேதீஸ்வரி, கொம்மாந்துறை, செங்கலடி.
④ றம்லா காசுதீன், 6ம் வட்டாரம், கிண்ணியா.
⑤ செல்வக்கோன் ரஞ்சி, பெரியகோமரசன் குளம், வவுனியா.
⑥ பாத்திமா பர்மிலா, ஏம்மல்துறை, கொச்சிக்கடை.
⑦ கே. நிர்மலாதேவி, நேர்லிங்ஹோம் வீதி, ஹட்டன்.
⑧ நளினா பீரிஸ், பாலக்குடா, தலவில்.
⑨ திருமதி.ராஜலட்சுமி,செ‌ன்.பெனடிக்ஸ் மாவத்தை, கொழும்பு-13.
⑩ செல்வி. தியாகராஜா ரஜினி, நற்பிட்டிமுனை-07, கல்முனை.

முதல் பரிசான தங்கநகையை பெறும் அதிஷ்டசாலியின் பெயரும், ஏனைய 15 அதிஷ்டசாலிகளின் பெயரும் அடுத்த வார முரசில் இடம்பெறும்.

## வீட்டுக்குறிப்புக்கள்

* குழந்தை விடாமல் அழுதால் கசகசாவை அரைத்து, குழந்தையின் தொப்புளைச் சுற்றித் தடவினால் போதும் குழந்தை அழுகையை நிறுத்திவிடும்.
* மிக்ஸியில் தோசைமாவு, இட்லி மாவு அரைக்கும்போது, மோட்டர் விரைவில் சூடாகி விடாமல் இருக்க உழுந்து அரைக்கும் போது தண்ணீருக்கு பதில் ஐஸ்கட்டிகளைப் போட்டு அரைக்கலாம்.

## மணீந்தர் சிங் ஓய்ந்தது ஏன்?

இந்திய கிரிக்கெட் அணியில் பிஷன்சிங் பேடிக்குப் பின்னர் சுழற்பந்துவீச்சில் சர்வதேச அளவில் பேசப்பட்டவர் யார்? சட்டென்று ஒரேபதில், மணீந்தர் சிங்.

பொதுவாக சுழற்பந்து வீச்சாளர்கள் உடனடியாகப் பிரகாசிப்பதில்லை. அனுபவம் பெறப்பெற தமது பிற்பகுதியில்தான் சுழற்பந்துவீச்சில் மெருகேற்றுவார்கள்.

ஆனால் மணீந்தர் சிங் அறிமுகமானதுமே அனைவரது கவனத்தையும் இழுத்துக் கொண்டார்.

1982ம் ஆண்டு தனது 17வது வயதில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டித் தொடரில் மணீந்தர் சிங் நுழைந்தார். அத்தொடரில் அவர் வீழ்த்திய விக்கெட்டுக்கள் 4. முதல் விக்கெட் இம்ரான்கானுடையது.

1993இல் ஜிம்பாப்வேவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மணீந்தர் சிங் வீழ்த்திய விக்கெட்டுக்களின் எண்ணிக்கை 7.

டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 88 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார்.

பெங்களூரில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 2வது இன்னிங்ஸில் 27 ரன்களை மட்டுமே கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுதான் மணீந்தர் சிங்கின் சாதனைகளில் சிறப்பானது.

தற்போது 30 வயதாகவுள்ள மணீந்தர் சிங் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துவிட்டார்.

இந்திய அணியிலிருந்து சமீபகாலமாக ஓரம்கட்டப்பட்டு வந்த நிலையில் தனது ஓய்வை அறிவித்துள்ளார் மணீந்தர் சிங்.

கடந்த இரண்டு வருடங்களாக தோள்பட்டை மற்றும் தொடைப்பகுதிகளில் ஏற்பட்ட காயங்களே அவரது ஓய்வுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

ஆனாலும், கிரிக்கெட்டைவிட்டு முற்றாக விலகிச்செல்லவில்லை. போட்டிகளில் நடுவராக கடமையாற்ற முடிவு செய்திருக்கிறார். நடுவர் தேர்விலும் வெற்றி பெற்றுள்ளார்.

"சுழற்பந்து வீச்சாளர்கள் எப்போதுமே பந்தை பிளாட்டாக வீச வேண்டியதில்லை.



ஆனால் நான் பந்தை பிளாட்டாக வீசுமாறு சிலரும், நான் பந்தை அதிகமாகச் சுழல விடவேண்டும் என்று வேறு சிலரும் ஆலோசனை கூறினார்கள். பலரது ஆலோசனைகளைப் பெற்றதால் எனக்கு ஏகப்பட்ட நெருக்கடி ஏற்பட்டது. என் பாணியிலேயே பந்தை வீசியிருந்தால் டெஸ்ட் போட்டிகளில் இன்னும் நன்றாக சாதனை படைத்திருக்கலாம்" என்று கூறியிருக்கிறார் மணீந்தர் சிங்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 08

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# தேன் கிண்ணம்






## நிலா வழுக்கி கடலில் விழுமா...?

நம்
திருட்டுச்சந்திப்பு
ஒவ்வொன்றுக்கும்
மறைப்புத்தந்த...
தென்னை நேற்றுத்தான்
குருத்தழுகி பழுத்து
செத்துப்போனது...
▫▫▫
என் வருகையின்
தாமதங்களால்
நீ காத்து நின்று கால்வலித்து
நிலத்தில் குத்தி
விரல்நடவியும்
கிள்ளியும் நோண்டியும்
விடுவாயே கள்ளிச்செடி...
அதுவும் நேற்றுத்தான்
வேரோடு கருகி
செத்துப்போனது...
▫▫▫
எல்லா இரவுகளுக்கும்
சாட்சியாகவிருந்த
முருங்கை மரம்–
அதுதான் விட்டுவாசலில்
பூவோடும் காயோடும்
அசைந்து அசைந்து
சிரிக்குமே, முருங்கைமரம்
நேற்றுத்தான்
கிளைஉடைந்து
சரிந்து போனது...
▫▫▫
இவைகளை காணும்போது
நெஞ்சில் ஒருமுள்
தைத்துக் கொள்கிறது...
▫▫▫
நிலவாய்
தரிசித்திருக்கிறேன்,
தென்றலாய்
சுவாசித்திருக்கிறேன்,
மடியாய்
மணற்பரப்பெங்கும்
ஆறுதலடைந்திருக்கிறேன்!
▫▫▫
மூட்டை மூட்டையாய்
நீ தந்த அபிநயங்களும்
கொத்துக் கொத்தாய்
நீ தந்த கடிதங்களும்
நட்சத்திரங்களைவிடவும்
அழகானவைதான்
▫▫▫
நேற்றைய சந்தோஷத்தில்
என் உயிரின் ஆணிவேரில்கூட
ஒருதுளி நீரில்லை....!
கண்ணீர் முடிந்தால்
இனி என்னதான் மிஞ்சும்....?
▫▫▫
யாரும் பாவத்தையும்
பழியையும்
சுமந்து வாழ்வது
கொஞ்சக் காலத்திற்குத்தான்...
▫▫▫
இனியாச்சும் உனக்கு
சுபமான செய்திகளை
நாளைய காற்று
கொண்டு வரலாம்...
எப்போதும்
சந்தோசித்தவனாய்
இறைவனை பிரார்த்தித்து....!
▫▫▫
எப்போதோ...
நீ கேட்ட கேள்விக்கு
விடையோடு முடிக்கிறேன்....!
"நிலாவழுக்கி
கடலில் விழுமா?"
▫▫▫
ஆம்...
நீ தான் விடை....!

**பொத்துவில் ஏ.மஜீத்.**




நன்றி-விகடன்

## நாளை

தேசத்து வானில்
மீண்டுமொரு
"செந்நீர் மழை"
கருக்கூட்டும்!
* *
சமாதான வீதிகளில்
புயல்நேர மௌனம்
ஆட்சியமைக்கும்!
* *
குறுங்கால ஓய்வில்
தூங்கிய துப்பாக்கிகள்
சோம்பல் தட்டி
அவல அம்புகளை
பிரசவிக்கும்...
உயிர்கள் மண்டியிட
மனிதம் மாண்டுபோகும்!
* *
காகங்களின் அவசரகால
மாநாடு எவ்வித
உடன்பாடுமில்லாமல்
நிறைவேறும்!
* *
பிஞ்சுகளின் நெஞ்சுகளில்
"அந்தப்" பயங்கரம்
பலமுறை பதிவாகும்!
எதிர்காலம்
வினாக்குறியுடன்
விடைபெறும்!
* *
இறுதிக்காலம்
நெருங்கி நின்று
என்னைப்பார்த்து
எச்சரிக்கும்!
* *
மாலைப் பொழுது
மரண பயத்துடன்
ஊர்ந்து செல்ல,
விடியல்
மரண விசாரணைகளுடன்
ஆரம்பிக்கும்...?
* *
-ஏ.மனோ-

## ஆசைகளின் அணிவகுப்பு...

தடைகள் இல்லா
நடைபாதையில்
நடந்து செல்ல
ஆசை.
▾ ▾ ▾
பரிசோதனை கூடம் இல்லா
பாதையில்
பயணம் செய்ய
ஆசை.
▾ ▾ ▾
உயிரட்டை இல்லாமல்
ஊர்முழுக்க
சுற்றிவர
ஆசை.
▾ ▾ ▾
நள்ளிரவில்
நாங்கள்
நடந்து திரிய
ஆசை.
▾ ▾ ▾
மோதல்கள் இல்லா
செய்திகள் கேட்டிட
ஆசை.
▾ ▾ ▾
சகோதர...
மொழிக்காரரோடு
சகஜமாய் பேசிட
ஆசை.
▾ ▾ ▾
தணிக்கையில்லாமல்
தகவல்களை கேட்க
ஆசை.
▾ ▾ ▾
வாய்க்குள்
முணுமுணுப்பதை
வெளியில் சொல்லிட
ஆசை.
▾ ▾ ▾
கட்டுப்பாடான–சில
வார்த்தைகளை
தெளிவாய்ச் சொல்லிட
ஆசை.
▾ ▾ ▾
மொத்தத்தில்...
சுதந்திரநாட்டில்
சுதந்திரமாயத் திரிந்திட
ஆசை.



**ஆர்.சாந்தசீலன்–பொத்துவில்.**

## மனிதக் காதல் அல்ல.....

அன்புள்ள
உள்ளத்திற்கு....!
\+\+\+\+\+
உன் இதழ்களினூடாக
இதயத்தை
முத்தமிடவரும்
இக்கடிதத்தை படி
படித்துவிட்டு
பதில் அனுப்பு....!
\+\+\+\+\+
நீ இங்கு
நலமே!
நான் அங்கு
நலமா...?
\+\+\+\+\+
மன்னவனே!
மறுமடலை
தபாலில் அனுப்பாதே!
\+\+\+\+\+
உன் இதயம்
தாங்கிவரும்
கடிதம்,
கண்டவர்
கைபட்டு கசங்கி
போகிறபோது...
என் இதயம்
வலிக்கிறது....
\+\+\+\+\+
அந்த வலி
என்னை தாக்கினாலும்
பறவாயில்லை...
என் இதயத்திலிருக்கும்
உன்னையுமல்லவா...
தாக்குகிறது....?
\+\+\+\+\+
தென்றலிடம்
சேதி சொல்!
இல்லையேல்
மேகத்தையாவது
தூதனுப்பு!
\+\+\+\+\+
மடல் வரைந்து
நம் காதலை...
மனித காதலாக்கி
விடாதே...!

**ஆர்.ரமேஷ்குமாரி–நானுஓயா.**

## திருட்டு ஞானி!

கண்களுக்குள்
காம வெப்பம்
அவளின் படுக்கையை
ஞாபகப்படுத்த...!

கடிகாரமுள்ளை விட
கிலோமீற்றர் வேகத்தில்
இதயம் துடிக்க..!

நாய்கள்
உரசி ஊளையிடுவதும்
கிழவனின் இருமலும்
ஒன்றுசேர...!

அவள் நினைவால்
சுவாசிப்பது கஷ்டமாகி
தொண்டை வரண்டு
உதடு காய்கிறது..!

எச்சில்–
விழுங்கி விழுங்கி
நரம்புகள் வலித்தன..!

அவள் முத்தமிட்டு
இதழ் கடித்ததும்,
தலை கோதிவிட்டதும்
ஞாபகங்களாக..!

பக்கத்தில் படுக்கும்
கிழவன்
தூங்குகிறானோ?
உயிருடன் இருக்கிறான்..!

கதவு உரசி கை
நடுங்கும்
ஒலித்துண்டு
செவி செல்லுமுன்–
என் மடியில் அவள்.

கடிகாரமுள் அடிப்பது
கேட்கவில்லை
இதயம் உதறுகிறது.!

அவள் உரசி–
முத்தமிட்டு அணைப்பது
என்னவோ தெரியவில்லை;
ஹிருதயம் வெடிக்கும்
என்பது தெரிகிறது..!

கிழவன் எழும்பி
உட்கார்ந்து–
மூச்சுவிட்டு;
நெழும்படித்து;
நெட்டி முறிக்கிறான்..!

ஹிருதயம் வயிற்றில்
இறங்கி–
தொண்டையால் வரும்படி
துடிக்கிறது...!



போய்விட்டாள்....!
கதவை தாழிட்டாள்
நெஞ்சை தடவினேன்
இதயம் இருக்கிறது..!

இப்போது என்–
ஞானமடத்திற்கு
போக வேண்டும்..!

**-அக்கரைப்பற்று, தஸ்கிப்-**



## வெள்ளை வேன்

காடும் காட்சியுறும்
கரும் பச்சையாலே
கனியும் செழிப்புறும்
கார்மேக கருமையாலே
• •• •
மங்கையும் எழிலானாள்
மஞ்சள் நிறத்தாலே
மாலைப் பொழுதும்
மயங்கியது செஞ்சிவப்பாலே
• •• •
நீர்கடலும் நிறமானது
நீலவானால்
பாழ்உடலும் பிணங்களானது
வெள்ளை வேனால்.

**-கவியூரன்-**

## இரவின் கிழியல்

அமைதியான ராப்பொழுது
அவப்பொழுதாகியது...!
▫▫
நாய்களின் நாதங்களோடு
மனித ஓலங்களும்
ஒடுங்கலாயிற்று...!
இடையிடையே
இடியொத்த வெடிகள்
தரையழும் "பூட்ஸ்"களின்
பூபாளங்கள்...!
▫▫
இடையிடையே
விளங்காப்
புதுக்கவிதையாய்
புது மொழிகள்!
▫▫
கறுப்பு ஆடை
கலைந்த போது
பூமியுடனான முத்தங்களோடு
மனித உடல்கள்!
▫▫
அடுத்த தெரு
தாண்டும் போது
பாதம்
மனித சதையொட்டி
நடையைக் குறைத்தது...!
▫▫
கடைசியில் மயக்கமாய்...
நான்...!

**கரம்பை–எம்.எச்.எம்.ஹாரிஸ்.**

## நாலு!

1.ஆலும் வேலும் பல் என்றார்!
ஆமாம் பார்த்தோம் பல் உறுதி!
நாலும் இரண்டும் சொல் என்றார்!
நாலைக் காணோம், சொல் ஏது?

2.சொல்லுக்குறுதி தருவாரா?
சுளையாய் நாலைத் தருவாரா?
வெல்லும் நிலைமை வந்திடுமா?
வேதனையாக்கிப் போய்விடுமா?

3.நாலால் சிலர்க்கு நயமுண்டோ?
நட்டந்தானோ பலருக்கோ?
பாலோ–தேனோ பலருக்கும்
பங்கீடாவாய்ச் சேராதோ?

4.நால்வாய் முகனே–கணபதியே
நால்வாய் வேண்டாம், நாலைத்தா!
மேல்வாய் ஏதும் மென்றால்தான்
மெதுவாய்க் கீழ்வாய் வாய்திறக்கும்!

**'அகதிக் கவிராயர்,திருமலை.**

## இந்த வாரம் உங்கள் பலன்

(15.10.95 முதல் 21.10.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| துலாம் | - வெள்ளி, இராகு |
| விருட்சிகம் | - வியாழன், செவ்வாய் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

சந்திரன்–மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்-வீண் முயற்சி, பொருள் விரயம். | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி இலாபம், தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-பயனுள்ள செயல், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், செல்வாக்கு மேன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | காலை 6 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பணவிரயம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | மு.ப. 9 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், மனத்தைரியம். | காலை 8 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மனக்கவலை குறையும். | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் பகை, இனசன நன்மை. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனப்பூரிப்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- பொருள் நட்டம், மனப்பயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணச்செலவு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்-அந்நியர் உதவி, கௌரவம். | மு.ப. 9 மணி |
| புதன்- பணச் செலவு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்-வெளியிட பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- புதிய நட்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- துன்பம் நீங்கும், இனசன நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக்கவலை. | காலை 6 மணி |
| புதன்- கௌரவக் குறைவு, பணச்செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் அதிகம், மனத்தைரியம். | காலை 6 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- புதிய நட்பு, பணச் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன் - தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| சனி- பணக்கஷ்டம், மனக்கவலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணவரவு தடை. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பணவரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பணவரவு தடை. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணச்செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| சனி- முயற்சி வெற்றி, உறவினர் பகை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், வரவு குன்றும். | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- தெய்வானுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| வெள்ளி- பணச் செலவு, கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| சனி- மனக்கலக்கம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், பணவரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| புதன்- வெளியிட பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனக்குறை. | காலை 6 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் பகை, பணச்செலவு. | பி.ப 2 மணி |
| சனி- துன்பம் விலகும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2





## தினமும் குளித்திடு

பொழியும் காலைப் பனியிலே
பூவும் கூடக் குளிக்குது!
மழையில் ஆடி மகிழ்ந்துமே
மயிலும் கூடக் குளிக்குது!

குருவி கூடச் சிறுசிறு
குட்டை நீரில் குளிக்குது!
எருமை கூட குளத்திலே
இறங்கி நீந்திக் குளிக்குது!

கரையில் மோதும் அலையிலே
களித்து நண்டும் குளிக்குது!
தரையில் வாழும் உயிரெல்லாம்
தானாய் நாடிக் குளிக்குது!

உணவைப் போலக் குளிப்பதும்
ஊக்கம் வலிமை அளிப்பது!
தினமும் நீயும் குளித்திடு
தேக நலத்தை வளர்த்திடு!

-இளங்குமரன்-

"யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்.
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்."
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# மந்திரச் சொல்

தனது வீட்டின் வெளித்திண்ணையில் அமர்ந்து அன்றைய நாழிதழைப் படித்துக் கொண்டிருந்தார் தணிகாசலம்.

அவர் ஓய்வுபெற்ற ஆசிரியர். அன்பே உருவானவர். கருணைவடிவம் கொண்டவர். இறைபக்தி நிறைந்தவர்.

அவர் நாழிதழின் ஒரு பக்கத்தைப் புரட்டும்போது பத்து வயதுச் சிறுவன் ஒருவன் சிவந்த கண்களோடும், அழுது வீங்கிய முகத்தோடும் அவர் முன்னே வந்து நின்றான்.

தணிகாசலம் அவனைப் பார்த்தார். அவன் யாருடனோ சண்டை போட்டு தோற்றுப்போய் அழுதிருக்கிறான் என்பதை அவனைப் பார்த்தவுடனேயே தெரிந்து கொண்டார்.

நாழிதழைத் திண்ணையின் மேல் வைத்துவிட்டு எழுந்து வந்து அவனை அன்பாகத் தொட்டார்.

"தம்பி ஏன் அழுதாய்? கண் எல்லாம் சிவந்திருக்கு. சட்டையெல்லாம் கசங்கியிருக்கு. என்ன விஷயம்?" என்று கேட்டார்.

"தாத்தா நான் வீட்டைவிட்டு எங்கே யாவது ஓடிப்போகப் போகிறேன்!" என்றான் அந்தச் சிறுவன்.

"அப்படியா! உன் பெயர் என்ன? நீ எத்தனையாம் வகுப்பில் படிக்கிறாய்?" என்று கேட்டார் தணிகாசலம்.

"என் பெயர் பாலு. ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன்" என்றான் சிறுவன்.

"நல்லது. நீ எதுக்கு வீட்டைவிட்டு ஓட நினைக்கிறாய்? உன்னை யார் என்ன செய்தார்கள்?" என்று வாஞ்சையுடன் கேட்டார் தணிகாசலம்.

"என் அண்ணா எனக்கு சைக்கிள் ஓட்டப்பழக்கி விடமாட்டேன் என்கிறான். என் அக்கா எனக்குத் தின்பண்டம் எதுவும் தரமாட்டேன் என்கிறா. நான் இவர்களிடம் சண்டை போட வேண்டியிருக்கிறது. எனக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அதனால்தான் வீட்டை விட்டு எங்கேயாவது ஓடிப்போகிறேன்!" என்றான் பாலு.

"பாலு! இந்தச் சின்ன வயசில நீ இப்படியெல்லாம் நினைக்கக்கூடாது. இந்தச்சின்ன விஷயங்களுக்காகச் சண்டை போடுவதோ, முரட்டுத்தனமாக நடந்து கொள்வதோ, வீட்டைவிட்டு ஓடிப்போக நினைப்பதோ கூடாது. உனக்கு எல்லாம் சரியாக நடக்க வேண்டுமென்றால் நான் சொல்கிறபடி செய்," என்று அவனை திண்ணைக்கு அழைத்து வந்து அமர வைத்தார்.

"பாலு! நான் ஒரு மந்திரச்சொல் கற்றுத்தருகிறேன். அதன்படி நீ நடந்தால் நீ நினைத்ததெல்லாம் கிடைக்கும்!" என்றார் தணிகாசலம்.

பாலு உடனே கண்களை அகல விரித்தான்.

"மந்திரச் சொல்லா? அது என்ன தாத்தா? அதன்படி நடந்தால் நான் நினைத்ததெல்லாம் நடக்குமா?" என்று கேட்டான் பாலு.

"நிச்சயம் நடக்கும்!" என்று சொல்லி அவர், குனிந்து அவன் காதில் ஏதோ சொன்னார்.

அதைக் கேட்டுவிட்டு மிகவும் மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்துக் கொண்டு தன் வீட்டிற்கு ஓடினான் பாலு.

அப்பொழுது அவனுடைய அக்கா வசந்தி லட்டு சாப்பிட்டுக் கொடிருந்தாள். அவள் அருகே போய் நின்ற பாலு,

"அக்கா! லட்டு தின்ன எனக்கும் ஆசையாக இருக்கு. கொஞ்சம் எனக்குத்தா," என்று கையை நீட்டி அமைதியான குரலில் கேட்டான்.

வசந்தி ஆச்சரியமாக அவனைப் பார்த்துவிட்டு ஒரு லட்டை அவனுக்குக் கொடுத்தாள். பாலுவும் மகிழ்ச்சியுடன் லட்டைச் சுவைத்துச் சாப்பிட்டான்.

அன்று மாலை பாலுவின் அண்ணன் குமார் தனது சிறு சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

உடனே அவனருகே ஓடிச்சென்று பாலு,

"அண்ணா! அண்ணா! எனக்கும் சைக்கிள் ஓட்டப்பழக ஆசையாக இருக்கு. பழக்கி விடுங்கள் அண்ணா," என்றான்.

பாலுவை ஆச்சரியத்தோடு பார்த்த குமார்,

"சரி வா பழக்கி விடுகிறேன்," என்றான்.

பாலு மிகவும் மகிழ்ச்சியுடன் குமாரின் பின்னே சைக்கிளைப் பிடித்துக்கொண்டு சென்றான்.

அவன் வாழ்க்கையில் திடீரென்று எப்படி அவன் நினைத்ததெல்லாம் நடக்கின்றன? இதற்குக் காரணம் தணிகாசலம் சொல்லிக்கொடுத்த "மந்திரச் சொல்" தான்.

தணிகாசலம் பாலுவுக்குச் சொல்லிக் கொடுத்த அந்த மந்திரச் சொல் என்ன தெரியுமா?

"எதையும், யாரிடமும் மிரட்டி, அதிகாரம் செய்து கேட்காதே. பணிவுடன் அன்பாகக் கேள். கேட்டது கிடைக்கும்" என்பதுதான் அது.



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.10.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 112
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 109

பரிசுக்குரியவர்:
எம். நவ்சாத்
ப/பாரதி வித்தியாலயம், பதுளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஏ.அன்ரன் சுரேஸ், பு/இந்து தமிழ் மகாவித்தியாலயம், புத்தளம். | செல்வி. பாத்திமா சிப்னாஸ், பாத்திமா மு.ம. மகாவித்தியாலயம், கொழும்பு-12. |
| ரகுராஜா பவானந்த், கொழும்பு-13. | கு.சர்மிலா, றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு. |
| அ.சு.முகம்மட் றயீஸ் சுக்கூர், மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி, கல்முனை. | க.யோகேஸ்வரன், பது/தமிழ் மத்திய கல்லூரி, ஹப்புத்தளை. |
| நோனா அஸ்வியா, முஸ்லி.பாலிகா மகாவித்தியாலயம், களுத்துறை. | ஐய்.அஸ்மி அஹமட், மென்கத் மகாவித்தியாலய. |
| ஜெயராமன் இராஜாராம், அஸ்க்வெலி த.வி., பதுரளிய. | கே.எம்.சிபானா, திருகோணமலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. பிறர் பார்க்கக்கூடிய ஒன்று, ஆனால் கண்ணாடியல்ல. கண்கள் உண்டு தேங்காயுமல்ல. இருவாசல்கள் உண்டு, இல்லமுமல்ல. இதழ்களுண்டு அது மலருமல்ல. அது என்ன?
2. பாரதத்தில் உள்ள ஊர் ஒன்றின் பெயரையும், பிதாவின் தம்பி பெயரையும் இணைத்தால் ஒரு படத்தின் பெயர் வரும். அந்தப் படம் எது?
3. கல்லுக்கும் இப்பெயர் உண்டு. மானிடர்களுக்கும் இப்பெயர் உண்டு. ஆனால் திரைப்படம் ஒன்றும் உண்டு. அந்தப் பெயர் என்ன?
4. பேசக்கூடிய ஒன்று. உறுப்புகளிலும் அது உண்டு. ஆனால் அது வாயல்ல. அது என்ன?
5. ஐவர் சேர்ந்துகொண்டால் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவார்கள். யார் இவர்கள்?
6. தலை கறுப்பு, தண்டனை கொடுத்தால் அது சிவப்பு. அது என்ன?
7. வெள்ளையன் அழுதால் கறுப்பனும் அழுவான். யார் அவன்?
8. மாதாவின் அண்ணன் பெயரையும் மகனுக்கு எதிர்ச்சொல் ஒன்றையும் இணைத்தால் திரைப்படம் ஒன்றின் பெயர் வரும். அந்தப்படம் என்ன?
9. இரவிலே பார்த்தால் ஆயிரம் கண்கள் உண்டு. பகலிலே பார்த்தால் ஒரு கண் உண்டு. அது என்ன?
10. தாகம் வந்தால் தம்பியைத் தேடுவார்கள். ஆலயம் செல்ல நினைத்தால் அண்ணனைத் தேடுவார்கள். இவர்கள் யார்?
11. கொடியிலும் மலராத பூ, மரத்திலும் மலராத பூ. ஆனால் மண்ணிலே மலரும் பூ. அது என்ன பூ?
12. இருநிறம் உள்ள ஒன்று. இணைபிரியாத ஒன்று. அது என்ன?
13. மூன்றெழுத்தில் வரும் ஒரு நாட்டின் பெயர். முதல் எழுத்தை எடுத்தால் அது ஒரு மிருகத்தின் பெயர். அந்த ஊர் எது?
14. நினைத்தவுடன் மலரக்கூடிய பூ. அது என்ன பூ?
15. மண்ணிலே பிறக்கும், காற்றிலே பறக்கும், கண்ணிலே விழுந்தால் கடிக்கும். அது என்ன?

### விடைகள்

1. முகம் 2. பட்டுக்கோட்டை சித்தப்பா 3. நவரத்தினம் 4. மொழி 5. கைவிரல்கள் 6. தீக்குச்சி 7. கண் 8. மாமன் மகள் 9. நட்சத்திரம், சூரியன் 10. குரும்பை, தேங்காய் 11. இரும்பு 12. கண் 13. ஓமான் 14. நெருப்பு 15. தூசி

எம்.என்.றிஜுசா- போனகபுர, திக்வெல்ல.

### பின்னோக்கி ஓட்டம்

ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொள்வோர் முன்னோக்கி ஓடுவதைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், பின்னோக்கி ஓடும் புதுமையான பந்தயம் ஒன்று சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கில் நடந்தது. நியூஜேர்சி மாநிலத்தைச் சேர்ந்த அலைஸ் வில்லிங் என்பவர் இந்தப் போட்டியில் வெற்றிவாகை சூடினார்.

## வாரம் ஒரு நாடு

# ஹங்கேரி



**தலைநகர்**- புடாபெஸ்ட்
**பரப்பளவு**- 93,033 சதுர கிலோமீற்றர்
**மக்கள் தொகை** - 1.05 கோடி
**மொழி** - ஹங்கேரியன்
**எழுத்தறிவு** - 98%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்** - ஃபோரின்ட்
**தனிநபர் வருமானம்** - 2780 டொலர்


**அமைவிடம்:** கிழக்கு ஐரோப்பிய நாடு. இதன் வடக்கே செக்கோஸ்லேவியாவும்; மேற்கில் ஒஸ்ரியாவும்; தென்மேற்கில் யூகோஸ்லேவியாவும்; தென்கிழக்கில் ரூமேனியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. முழுமையான நிலப்பரப்பால் சூழப்பட்டிருந்தாலும், டன்யூப் நதிமூலம் கடலுடன் தொடர்பு கொள்ளும் வசதியைப் பெற்றுள்ளது.

**வரலாறு:** ஒஸ்ரியாவிடமிருந்து 1867 இல் சுரந்திரம் பெற்றது. ஒஸ்ரிய மன்னரே ஹங்கேரி மன்னராகவும் ஆட்சி நடத்தினார். 1920ல் பல பகுதிகளையும், ரூமேனியா, யூகோஸ்லேவியா போன்ற நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குட்பட்டது. 1946இல் குடியரசானது. 1947இல் கம்யூனிஸ்ட்டுக்கள் பிடித்தெடுத்தனர். கம்யூனிஸ்ட் அரசுக்கெதிராகக் கலவரங்கள் வெடித்தபோது 1953இல் ரஷ்ய இராணுவம் அரங்கத்தில் நுழைந்தது. 1956இல் கம்யூனிசத்திற் கெதிராகப் பிரகடனங்கள் நடந்தன. சுமார் இரண்டு இலட்சம் சோவியத் இராணுவ வீரர்களும், 2000 டாங்கிகளும் சேர்ந்து கலவரத்தை அடித்தமர்த்தின. 1989ல் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டது. சோவியத் படைகள் முழுவதும் 1991 ஜூனில் நாட்டைவிட்டு வெளியேறின.

**பொருளாதாரம்:** வாகனங்கள், இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வாணிபம் பெரும்பாலும் கம்யூனிஸ்ட் நாடுகளுடனேயே செய்யப்படுகின்றது. விவசாயம், பண்ணைமுறையில் செய்யப்படுகின்றது. இங்கு திராட்சைத் தோட்டங்கள் அதிகம்.

## விடை காணுங்கள்

1. உதயசூரியன் நாடு எது?
2. ஆங்கில நாட்டை ஆட்சிபுரிந்தும், ஆங்கிலம் பேச, எழுதத் தெரியாத அரசன் யார்?
3. கொலை நகரம் என்றழைக்கப்படும் நகரம் எது?
4. உலகிலேயே நீளமான தேசிய கீதம் எது? எத்தனை வரிகள்?
5. முதன் முதலில் தென்துருவத்தை அடைந்தவர் யார்? எந்த ஆண்டில்?
6. நாய்க்கு எத்தனை பற்கள்?
7. கலிபோர்னியாவிலுள்ள ஸெஃகொயா தேசிய பூங்காவில் உள்ள ஷெர்மன் மரத்தின் சிறப்பு என்ன?
8. 1924ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் 



ஹொலிவுட் நடிகர் ஒருவர் நீச்சலில் 3 தங்கப்பதக்கம் வென்றார். அவர் யார்?
9. சதுரங்கம் எந்த ஆண்டில், எந்த நாட்டில் தோன்றியது?

### விடைகள்

1. ஜப்பான் 2. முதலாம் ஜோர்ஜ். 3. சிக்காகோ 4. கிரேக்க தேசியகீதம்-128 வரிகள்.
5. ஆமுண்ட்ஸென்- 14.12.1911.
6. 42 பற்கள்.
7. உலகிலேயே மிகப்பெரிய மரம்.
8. டார்ஸான் படத்தில் நடித்த ஜொனி வீஸ்முல்லர்.
9. கி.பி.570 இல் - இந்தியாவில்.

**அ**வர்கள் ஓர்டர் செய்த அயிட்டங்கள் ஒரு தள்ளு வண்டியில் கொண்டு வரப்பட்டது.

"வேறு ஏதாவது வேண்டுமா?" என்றான் அறைப் பையன்.

"அந்த டெலிவிஷனைப் போட்டு விட்டுப் போ."

"இந்த நேரத்தில் நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை சார்"

"சரி. நீ போ."

அவன் போனதும்....

"என்ன பேசிக் கொண்டிருந்தோம்?"

"உங்கள் நண்பர் உதவப் போவதாகச் சொன்னீர்கள்."

"ஏற்கனவே உதவ ஆரம்பித்து விட்டார். சென்னையில் நமக்காக ஹோட்டல் அறை ஏற்பாடு செய்து விட்டார். நான் விமானத்தில் விளக்கமாகச் சொன்னேனே, அந்த சரவணகுமாரின் நிகழ்ச்சி நாளைக்கு மாலை ராணி சீதை ஹால் என்னும் அரங்கத்தில் ஒரு சமுதாய அமைப்பின் மாநில மாநாட்டின் கலை நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. அதற்கு நமக்கு இரண்டு டிக்கெட்டுகள் எடுக்கச் சொல்லியிருக்கிறேன். நாம் செய்தித் தாளில் படித்த, திரட்டிய உண்மைகளை கண் எதிரில் கண்டு உறுதிப்படுத்திக் கொள்ளப் போகிறோம். அதன் பிறகு செயல் திட்டம்."

"அது என்ன?"

"அவசரமில்லை. நமக்கு பத்து நாட்கள் நேரம் இருக்கிறது. சென்னையில் அரவிந்தா அனாதை இல்லம் என்று ஒன்று உண்டு. அங்கே போகிறோம் நாம்."

"போய்?"

"எனக்கும் ரெய்ஸாவுக்கும் குழந்தையே இல்லை அல்லவா, அதனால் ஒரு பையனை, பனிரெண்டு வயதுப் பையனை தத்துஎடுத்துக் கொள்கிறோம், புரிகிறதா? என்று கண்ணடித்தார் பார்க்கர் ஸ்மித்."

வழக்கம் போல, "பாதி புரிகிறது" என்றாள் ஆனி.

**இ**து இவ்வாறிருக்க....

கர்நாடக மாநிலத்தின் தலைநகரில் மல்லேஸ்வரம் என்று ஒரு பிரதேசம். (இந்தப் பிரதேசத்து பெண்களின் முக்கிய பிரதேசங்களை வர்ணித்து எழுதித்தான் ஒரு காலத்தில் ஒரு எழுத்தாளர் செமத்தியாய் மாட்டிக் கொண்டார்) அங்கே ஒரு வீட்டின் மாடிப் போர்ஷனில் சட்டையை பேண்டுக்குள் செலுத்திக் கொண்டிருந்தான் சுபா. முழுப்பெயர் சுபாகர்.

சுபா காட்டு மரமாட்டம் ஸ்ட்ராங்காய் இருந்தான். சுபா முகத்தில் மென்மையையும், சிரிப்பையும் தொலைத்திருந்தான். பாலுமகேந்திரா போல பீக் வைத்த ஒரு தொப்பி அணிந்திருந்தான். தொப்பியில் (BORN TO WIN) என்று சின்ன எழுத்துக்களில் எழுதி இருந்தது. ஷூ அணிந்து கொண்டான். கத்திக் கொண்டிருந்த பானாசோனிக்கை நிறுத்த, நடன மாடிக் கொண்டிருந்த சிவப்புச் செவ்வகங்கள் காணாமல் போயின.

அறையைப் பூட்டிக் கொள்வதற்கு முன் மேஜை மேலிருந்த ஹெல்மெட்டை எடுத்துக் கொண்டான். ஹெல்மெட் மேல் சகட்டு மேனிக்கு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தன. பிச்சைக்காரனின் துணியாய் தெரிந்தது. அறையைப் பூட்டினான்.

கீழே இறங்கி வந்தான். பாவமே என்று நின்று கொண்டிருந்த புல்லட்டில் அமர்ந்து ஹெல்மெட் அணிந்தான். புறப்பட்டான்.

ஹெல்மெட்டின் பின் மண்டையில் ('IF YOU CAN READ THIS, YOU ARE DAMN CLOSE PAL!') என்று பொடி எழுத்துக்கள் உள்ள ஒரு ஸ்டிக்கர்.

சுபாவைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கம் விரும்பாதவர்கள் ஒரு லாங் ஜம்ப்பில் இரண்டு பாராக்களைளத் தாண்டி விடுங்கள்.

சுபா பிறந்த போதே திருட்டுத் தனம் கூட பிறந்ததால் குனிந்து முத்தமிட்ட லேடி டாக்டரின் கழுத்துச் செயினை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு... பின்னர் அதை விடுவிக்க பெரிய போராட்டமே நடத்த வேண்டியிருந்தது. அப்புறம் வீட்டில் சாமி உண்டியலில் காசு திருடி சினிமா போய்.... ஊரிலிருந்து வந்த மாமாவின் ரிஸ்ட்வாட்சை திருடி மார்வாடி கடையில் ஐநூறு மதிப்புள்ள அதை ஜஸ்ட் ஐம்பது ரூபாய்க்கு விற்று.... சித்தி தன் குழந்தையோடு வந்திருந்தபோது .... அந்தப் பாப்பாவை திருவிழாவுக்கு அழைத்துப் போகிறேன் என்று தூக்கிச் சென்று ஒரு பவுன் வளையலைக் கழற்றி பாக்கெட்டில் போட்டுக் கொண்டு வீடு திரும்பி, சத்தியமாக அழுகை வரவழைத்துக் கொண்டு எங்கேயோ கழன்று விழுந்து விட்டதாக சாதித்து....

# 5 விலை உயர்ந்த குற்றம்

சுபாவின் ஜெகதலப்பிரதாபங்கள் அதிகரிக்க, சீர்திருத்தப்பள்ளியில் சேர்க்கப் பட்டான். அங்கே ஜான்சி, ஜான்சி என்று ஒரு டீச்சர். டீச்சர் ஒரு மொஃபெட்டில் வருவாள். நம் சுபா நேராய் ஒரு ஆட்டோ வொர்க்ஷாப் போய் அந்த மொஃபெட்டைத் திருடித் தந்தால் என்ன தருகிறாய் என்று பேரம் பேசி.... சொன்னபடி திருடிக் கொடுத்து, பள்ளியில் இருந்து அனுப்பப் பட்டான். திருட்டு ரயிலில் பெங்களூர் வந்து தன் லைனில் படிப்படியாக வளர்ந்து சகலமும் பழகினான். சட்ட விரோதமான எந்தக் காரியம் செய்ய வேண்டுமானாலும் இருபத்தி நாலூ மணி நேரமும் சுபாவை அணுகலாம்.

இப்போது சுபா ரேஸ் கோர்ஸ் ரோட்டில் வெஸ்ட் எண்ட் ஹோட்டல் வாசலில் தன் ஓல்டஸ்ட் மாடல் வண்டியை நிறுத்தி இறங்கினான்.

ஹெல்மெட்டை தண்ணீர் குடம் போல இடுப்பில் அணைத்துக் கொண்டு உள்ளே வந்தான். ரிஸப்ஷன் கவுண்டருக்கு எதிரே சோபாக்கள் மற்றும் சோபாக்கள் மேலும் சோபாக்கள்.

அவற்றில் ஒன்றில் அமர்ந்து சுவாரசியமாக ஹால் மூலையில் பொருத்தப்பட்டிருந்த டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் பார்த்துக் கொண்டிருந்த நீல கோட், நீல சூட், நீல கர்ச்சீப் மனிதர் திரும்பி அவனுக்குக் கையசைக்க....

அவரை நோக்கி நடந்தான்.

அருகில் அமர்ந்தவன் நீட்டிய சிகரெட்டை வாங்கிக் கொண்டான். நீட்டிய நெருப்பை உபயோகித்துக் கொண்டான்.

"அப்புறம்? சொல்லுங்க ராஜன்" என்றான்.

"ஃப்ரீயா இருக்கியா? ஒரு சின்ன வேலை செய்றியா?"

"உங்களுக்குன்னா எல்லா வேலையையும் தள்ளி வச்சிட்டு செஞ்சுடலாம்."

"வாசல்ல கார் நிக்கிது. அம்பாசிடர். போன வாரம்தான் சர்வீஸ் பண்ணது. டிக்கில மூணு கேஸ்ல நூறு லிட்டர் பெட்ரோல் இருக்கு. எடுத்துக்க. இந்தா சாவி."

ராஜன் நீட்டிய கார் சாவியை வாங்கிக் கொண்டு,

"எடுத்துக்கிட்டாச்சி."

"நேரா மெட்ராஸ் போ. ஹோட்டல் உத்சவ்ல ரூம் போட்ருக்கு உனக்கு. தங்கிக்க. இந்த கவரை போற வழில படிச்சிப் பார்த்துக்க. பார்ட்டியைப் பத்தின முழு விவரம், போட்டோ எல்லாம் இருக்கு. பம்பாய்ல உள்ள ஒரு அட்ரஸ் உள்ளே இருக்கு"

"சரி."

"ஆளை வளைச்சிப்போட்டு, கார்லயே பம்பாய் கொண்டு போய் அந்த அட்ரஸ்ல ஒப்படைச்சிட்டு வந்துடு. அவ்வளவுதான்."

"குட்டிக்கு என்ன வயசு?"



"குட்டி இல்லை பையன். பன்னெண்டு வயசு பையன்."

"என்னது? பொடியனா? எதுக்கு?"

"அந்தக் கேள்விக்குப் பதில் உனக்கும் தேவையில்லாதது. எனக்கும் தேவையில்லாதது. பையனைக் கடத்து. ஒப்படை. தட்ஸ் ஆல். நான் பம்பாய் பார்ட்டிகிட்டே பேசியிருக்கிற தொகை ரெண்டு லட்சம். உனக்குப்பாதி. எனக்குப் பாதி."

"ரைட்டோ."

"சுபா. நீ நினைக்கிற மாதிரி இது சுலபமான வேலை இல்லை. பையன் ஒரு வி.ஐ.பி! பம்பாய்க்காரன் அவனை ஏதோ வெளிநாட்டுக்கு விக்கப் போறான்ங்கிறது என் யூகம்."

"அவன் கட் பண்ணி மிளகுப் பொடி தூவி சாப்பிட்டுக்கட்டும். நமக்கென்ன? ரெண்டு கேரண்டியா ராஜன்?"

"ஒரு இலட்சம் அட்வான்ஸா வாங்கிட்டேன். இந்த சூட்கேஸ்ல உனக்கு அம்பதாயிரம் அட்வான்ஸா வச்சிருக்கேன்."

ராஜன் சின்ன சூட்கேஸ் எடுத்துத்தர.... கிளிக் கிளிக் என்று அதைத்திறந்து உள்ளே பார்த்துக் கொண்டு மறுபடி மூடினான் சுபா.

"போலீஸை எப்படி சமாளிக்கப் போறே சுபா?"

"விஷயத்தைச் சொல்லிடடிங்கள்ல? விடுங்க. இனி அதெல்லாம் என் கவலை."

சுபா அவர் தந்த கவரைத்திறந்து உள்ளிருந்த காகிதங்களை எடுத்தான். புகைப் படத்தைப் பார்த்தான்.

"சரவணகுமார் வயது-பனிரெண்டு, அப்பா பெயர் ஜீவானந்தம், விலாசம்.... என்று வாய்விட்டு மெதுவாகப் படிக்க ஆரம்பித்து.... மற்ற விபரங்களை வேகமாகப் படித்தான். "நாளை மாலை ராணி ஹாலில் நிகழ்ச்சி!"

"சரியான சந்தர்ப்பம் சுபா."

"பம்பாய் பார்ட்டி அட்ரஸ் எங்கே காணோம்?"

ராஜன் கவரை வாங்கித் தேடிவிட்டு, பிறகு தன் கோட் பாக்கெட்டில் தேடி, "ஸாரி, இதோ இருக்கு" என்று நான்காய் மடக்கின காகிதம் கொடுத்தார்.

"கிஷன்சந்த்! ஓ! ஷேட்டா? நாலு போன் நம்பர்ஸ் இருக்கு. வெரிகுட். காரியம் முடிஞ்சதும் நான் கிஷன்சந்துக்கு ஒரு போன் அடிச்சி எங்கே ஒப்படைக்கணும்னு கேட்டுக்கிட்டு புறப்பட்டு அங்கே ஒப்படைச் சிடறேன். ஒப்படைச்சதும் பம்பாய்லேர்ந்து உங்களுக்கு போன் அடிக்கிறேன்."

"மிச்ச பணத்தை வாங்கிக்கறே."

"யெஸ். வாங்கிக்கறேன். கார்லயே புறப்பட்டு வந்துடறேன்."

"வேணாம். வந்த விலைக்கு அங்கேயே வித்துட்டு ஃப்ளைட்ல வா. இல்லை ரயில்ல வா."

"நல்ல ஐடியா"

"எப்ப புறப்படறே?"

"இதோ இப்பவே. பைக்கைக் கொண்டு போய் வீட்ல போட்டுட்டு ரெண்டு செட் டிரெஸ் எடுத்து வச்சிக்கிட்டு, ஆட்டோல இங்கே வந்து காரை எடுத்துக்கறேன்." என்று சுபா எழ... ராஜனும் எழுந்தார்,

ராஜன் உடனே விருட்டென்று வெளியேறி ஆட்டோவில் ஏறிக் கொண்டு போனதும்... சுபா ரிஸப்ஷன் கவுண்டரில் பணம் டெபாசிட் செய்து சென்னைக்கு எஸ்.டி.டி.கால் சுழற்றி....

"ஹலோ, செல்வம். சௌக்யமா? வீடு காலியா இருக்கா?"

"இல்லை. பெண்டாட்டி இருக்கா."

"போனை வச்ச உடனே வீட்டுக்குப் போயி மூட்டை கட்டி அம்மா வீட்டுக்கு அனுப்பிடு. ஒரு வாரம் கழிச்சி வரச் சொல்லு. இடம் வேணும் எனக்கு."

"மெட்ராஸ்ல இல்லாத ஹோட்டலா?"

"எனக்கு தெரியாதா அது? முட்டாள். சொன்னதை செய்டா. ராத்திரி வர்றேன். ஒன்பது மணிக்கு ஹோட்டல் உத்சவ் வந்து வெய்ட் பண்ணு. புரியுதா?"

"சரி."

போனை வைத்தான். மிச்சம் வாங்கிக் கொண்டு பைக்கில் புறப்பட்டபோது மனதில் திட்டம் உருவாக ஆரம்பித்தது.

அறைக்கு வந்து தேவையானவற்றை எடுத்துக் கொண்டு, பத்தாயிரம் பணம் எடுத்துக்கொண்டு மிச்சத்தை பத்திரப் படுத்திவிட்டு, ஆட்டோவில் வெஸ்ட் எண்ட் வந்து காரில் புறப்பட்டு நேஷனல் ஹைவேய்ஸ் நான்கில் விரைந்தபோது திட்டம் முழு உருவம் பெற்றது.

•••

**இ**ந்தியன் ஏர்லைன்சின் ஃப்ளைட் நம்பர் 171 கொண்ட ஏர்பஸ் பம்பாயில் இருந்து புறப்பட்டு சென்னை மீனம்பாக்கத்தின் நேஷனல் டெர்மினலில் ஊர்ந்து வந்து தம் பயணிகளுக்கு பனிமுத்து ஏந்திய பூப் போல புன்னகை ஏந்திய ஹோட்டஸ் மூலம் நன்றி சொல்லி வழியனுப்ப...

பார்க்கர் ஸ்மித்தும், ஆனியும் படிகளில் இறங்கினார்கள்.

நேரம், ராகு காலம் இல்லாத மதியம் 3.25.

கட்டிடத்தை அடைந்தபோது...



வெளிப்பக்கம் வரவேற்க வந்தவர்களில் ஒரு நபர் 'PERSON FROM KANNABIRAN' என்று எழுதின அட்டையைப் பிடித்துக் கொண்டிருக்க... அவனை நோக்கிச் சென்று புன்னகைத்தார்கள்.

"மிஸ்டர் பார்க்கர் ஸ்மித்?" என்றான் அவன்.

"யா."

"வெல்கம். நான் மார்ட்டின். உங்களை வரவேற்று தங்க வைக்கச் சொன்னார் என் முதலாளி கண்ணபிரான்" என்றான் ஆங்கிலத்தில்.

"மகிழ்ச்சி."

மார்ட்டின் அவர்களிடமிருந்து லக்கேஜ்களை வாங்கிக் கொண்டான். வெள்ளை ஃபியட் காருக்கு அழைத்துச் சென்று, டிக்கியில் வைத்துவிட்டு, கதவு திறந்து பின் இருக்கைகளில் அமர்ந்து கொண்டதும், காரை ஓட்ட ஆரம்பித்தான்.

"சென்னைக்கு இது முதல் முறையா சார்?"

"இல்லை. இரண்டாம் முறை."

மூன்று நட்சத்திர மரிஜ்ஜிவானா ஹோட்டல் தனி சூட்டில் அவர்களைத் தங்க வைத்துவிட்டு, "எது வேண்டுமோ ஆர்டர் செய்து கொள்ளுங்கள். நான் போய் மிஸ்டர் கண்ணபிரானை அழைத்து வருகிறேன்" என்று புறப்பட்டான் மார்ட்டின்.

மென்த்தால் சிகரெட் கொளுத்திக் கொண்ட பார்க்கர் ஸ்மித் ஆனியைப் பார்த்தார். அவள் மெனு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

ஓவர்கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிவிட்டு, டையைக் கழற்றிவிட்டு, ஷூக்களை உதறி, ஏர்கண்டிஷனரை இயக்கி விட்டு, "கொஞ்சம் விஸ்கி சாப்பிட விரும்புகிறேன் ஆனி. உனக்குத் தேவையா?"

"இந்தியாவின் உஷ்ணத்திற்கு பீர்தான் சிறந்தது. எனக்கு பீர் சொல்லுங்கள்."

போனில் ஆர்டர் சொல்லிவிட்டு சிகரெட்டை ஆழமாக இழுத்தார் பார்க்கர் ஸ்மித்.

அரை மணி நேரம் கழித்து கதவைத் தள்ளிவிட்டு உள்ளே வந்தார் கண்ணபிரான். உடன் வந்த மார்ட்டின் மரியாதையான தூரத்தில் நின்றான்.

"பார்க்கர், வாய்யா... எப்படி இருக்கே?"

"ஹலோ கண்ணபிரான்"

இருவரும் லேசாகத் தழுவி விலகினதும்...

"மீட் மிஸ் ஆனி."

"பேரைப் பார்யா. ஆணி, சுத்தியல்னு."

"வாட்?"

"பியூட்டிஃபுல் நேம், ஐ டோல்ட்" என்றார் கண்ணபிரான். அவர்களுடன் அமர... மார்ட்டின் நின்று கொண்டே இருந்தான்.

"வேலையை விட்டுட்டேன்னு எழுதியிருந்தே. திடீர்னு உன் வயசுக்கே சம்மந்தமே இல்லாத ஒரு குட்டியோட வந்து நிக்கிறே. என்ன சமாச்சாரம்?"

"வாட்"

"சும்மா வாட், வாட்னு கழுத்தை அறுக்காதே. இவன் மார்ட்டின். நம்ம ஆளு. ஆறு மொழியும் தெரியும். டேய், டிரான்ஸிலேட்டு செய்யிடா."

"டிரான்ஸ்லேட் சார்"

"அதான் செய்யி."

மிஸ்டர் பார்க்கர், வேலையை விட்டு விலகி விட்டதாக கடிதம் எழுதியிருந்தீர்கள். இப்போது ஒரு பெண்ணுடன் வந்திருக்கிறீர்கள். என்ன விஷயம்?"

(தொடர்ந்து வரும்)

பட்டுக் கோட்டை பிரபாகர்

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம். ராஜ்குமார்
வயது: 23
முகவரி: 33,பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை
பொழுது போக்கு: பத்திரிகை, டி.வி., சினிமா.

பெயர்: எம். ரமிஸ்தீன்
வயது: 20
முகவரி: உப தபால் அலுவலகம், குறிஞ்சிப்பிட்டி, புத்தளம்.
பொழுது போக்கு: பாடல்கள் இயற்கையை ரசித்தல்.

பெயர்: ஆர். சரஸ்வதி
வயது: 27
முகவரி: 145/18, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
பொழுது போக்கு: வானொலி, புத்தகம், தொலைக்காட்சி.

பெயர்: பவ்ஞன் முகமது
வயது: 24
முகவரி: P.O.VOX-281, AMMAN, JORDAN.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. முனியாண்டி
வயது: 26
முகவரி: P.O.BOX-614, POSTAL CODE-113, MUSCAT, S.OF.OMAN.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, புத்தகம்.

பெயர்: எம். சி. கலீல்
முகவரி: 328, ஹனிபா வீதி, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, வ்ரனொலி.

பெயர்: எஸ். தமிழ்ச் செல்வன்
வயது: 19
முகவரி: எதன்சைட், கொட்டகலை
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: அஷிக்
வயது: 17
முகவரி: பசார் வீதி, சம்மாந்துறை-02.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: ஆர். வசந்தன்
வயது: 29
முகவரி: EUROPIS-32, IRAKLION, CRETE, GREECE.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பேனாநட்பு.

பெயர்: எம். மன்சூர்
வயது: 26
முகவரி: MARKEZ OLEYAH, MADINA ROAD, AL-NAWARIYAH, MACCAH, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. ராஜேந்திரன்
வயது: 22
முகவரி: 70, போப்பிட்டிய வீதி, டெத்தோட்ட.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். நியாஸ்
வயது: 17
முகவரி: இல. 32, ஹிங்குனோயா, மாவனல்லை.
பொழுது போக்கு: வழமையானவை.

# தாய்

## மக்சீம் கார்க்கி

46

**...கொடியின் கம்பு இரண்டாக முறிந்து கிடப்பதையும் அதன் ஒரு முனையில் சிவப்புத் துணித் துண்டு கொஞ்சம் போல் ஒட்டிக் கொண்டிருப்பதையும் கண்டாள்.**



**தா**ய் கண்ணிமையே தட்டாமல் வெறித்துப் பார்த்தாள். அந்தத் தெருவின் அகலம் முழுவதையும் அடைத்துக் குறுக்காகத் தோன்றிய அந்தச் சிப்பாய்களின் சாம்பல் நிற முன்னணி ஒன்று போல், நிதானமாக, நிற்காமல் முன்னேறி வந்தது; அந்த அணிக்கு முன்னால் துப்பாக்கிச் சனியன்கள் வெள்ளிச் சீப்பின் பற்களைப்போல மின்னிக் கொண்டு வந்தன. விடுவிடு என்று நடந்து, அவள் தன் மகனுக்கு அருகிலே போய்ச் சேர்ந்தாள். அந்திரேய் பாவெலுக்கு முன்னால் போய் நின்று தனது நெடிய உருவத்தால் பாவெலைப் பாதுகாத்து மறைத்து நிற்பதைக் கண்டாள்.

"உன் இடத்துக்குப்போ, தோழா!" என்று பாவெல் உரக்கக் கத்தினான்.

அந்திரேய் தனது கைகளைப் பின்னால் நீட்டியவாறு தலையைப் பின்னால் சாய்த்துப் பாடிக்கொண்டிருந்தான். பாவெல் அவனது தோளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டே, மீண்டும் கத்தினான்.

"பின்னாலே போ! இப்படிச் செய்வதற்கு உனக்கு உரிமை கிடையாது! கொடிதான் முதலில் போகவேண்டும்!"

"கலைந்து விடுங்கள்!" என்று தனது வாளைச் சுழற்றியவாறே அந்தக் குட்டி அதிகாரி மெல்லிய குரலில் உத்தர விட்டான். அவன் தனது கால்களை உயர்த்தி, முழங்கால்களைச் சிறிதும் வளைக்காமல், பூட்ஸ் காலால் தரையை ஓங்கி மிதித்து நடந்து வந்தான். தாய் அந்தப் பூட்ஸ்களின் பளபளப்பைக் கண்டாள்.

கட்டையாக வெட்டிவிடப்பட்ட கிராப்புத் தலையும், அடர்த்தியான நரைத்த நிற மீசையும் கொண்ட ஒரு நெட்டை மனிதன் அவனுக்குப் புறத்தே பின்னால் நெருங்கி நடந்து வந்தான். அவன் ஒரு நீண்ட சாம்பல் நிறக் கோட்டு அணிந்திருந்தான்; கோட்டின் விளிம்புகளில் சிவப்பு வரிக் கோடுகள் காணப்பட்டன. அவனது கால் சராயின் மஞ்சள் கோடுகள் கீழ் நோக்கி ஓடின. ஹஹோலைப் போலவே அவனும் தன் கைகளைப் பின்னால் கோர்த்தவாறே நடந்து வந்தான். அடர்ந்த புருவங்கள் உயர்ந்து நிற்க, அவனது கண்கள் பாவெலின் மீது பதிந்து நிலைகுத்தி நின்றன.

தாயால் தான் பார்த்தவற்றை உணர்ந்தறிய முடியவில்லை. அவளது இதயத்துக்குள் ஒரு பயங்கர ஓலம் நிறைந்து விம்மி எந்த நிமிஷத்திலும் வெடித்து வெளிப் பாய்வது போல் முட்டி மோதும் அந்த ஓல உணர்ச்சியால் அவள் திக்குமுக்காடினாள். தன் மார்பை அழுத்திப் பிடித்து அதை உள்ளடக்கினாள். ஜனங்கள் அவளைத் தள்ளினார்கள். எனவே அவள் தள்ளாடியபடி முன்னே நடந்தாள். ஞபகமின்றி அநேகமாக நினைவிழந்து நடந்தாள் அவள். தனக்குப் பின்னால் நின்ற கூட்டம் தம்மை எதிர்நோக்கிவரும் பேரலையால் கொஞ்சம் கொஞ்சமாக அடித்துச் செல்வது போல் அவள் உணர்ந்தாள்.

கொடியைத் தாங்கி நின்றவர்களும் இன்னும் நெருங்கிப்போனார்கள். அந்தச் சாம்பல் நிறச் சிப்பாய்கள் இறுக்கமான சங்கிலிக் கோர்வையாய் இன்னும் நெருங்கி வந்தனர். பற்பலவித வர்ணங்கள் பெற்ற கண்களோடு ஒழுங்கற்றுத் தெரியும் மஞ்சள் நிற வரிக்கோடுகளோடு, விகாரமாக குலைந்து போன அந்தச் சிப்பாய்முகம் தெருவை முழுதும் அடைத்தவாறு முன்னேறி வருவதைப் பார்த்தாள். அதற்கு முன்னால், ஊர்வலம் வருபவர்களின் மார்புகளுக்கு நேராக ஏந்திப்பிடித்த துப்பாக்கிச் சனியன்களின் கொடிய முனைகள் பளபளத்தன; அந்தக் கூட்டத்தினரின் மார்பகங்களைத் தொடாமலேயே அந்தக் கூட்டத்தை ஒவ்வொருவராக பிரித்துக் கலைத்துவிட்டன.

தனக்குப் பின்னால் ஜனங்கள் ஓடுவதையும், கூக்குரலிடுவதையும் அவள் கேட்டாள்:

"கலையுங்களடா!"

"விலாசவ், ஓடிப்போ!"

"பின்னாலே வா, பாவெல்!"

"கொடியை இறக்கு, பாவெல்!" என்று நிகலாய் வெஸோவ்ஷிகோவ் மெதுவாகச் சொன்னான். "என்னிடம் கொடு. நான் அதை மறைத்து வைக்கிறேன்."

அவன் கொடியின் கம்பைப் பற்றிப் பிடித்து இழுத்தான்; கொடி பின்புறமாகச் சாய்ந்து ஆடியது.

"விடு அதை!" என்று கத்தினான் பாவெல்.

நிகலாய் சூடுபட்டது போலத் தன் கையை வெடுக்கென்று பிடுங்கினான். அந்தப் பாட்டு நின்றுவிட்டது. ஜனங்கள் நின்று விட்டார்கள். பாவெலைச் சுற்றி ஒரு மதில் போல நின்றார்கள் ஆனால் அவனோ இன்னும் முன்னேறினான். ஏதோ ஒரு மேகம் வானத்திலிருந்து தொப்பென்று விழுந்து அவர்களைக் கவிந்து சூழ்ந்ததுபோல் திடீரென்று ஒரு சவ அமைதி நிலவியது.

கொடியைச் சுற்றி நின்றவர்கள் சுமார் இருபது பேருக்கு அதிகமில்லை. எனினும் அவர்கள் அனைவரும் அசையாது உறுதியோடு நின்றார்கள். தாய் பயத்தோடும் அவர்களிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்று இனந் தெரியாத விருப்போடும் அவர்கள் பக்கமாக நெருங்கிச் சென்றாள்.

"லெப்டினென்ட்! அந்தப் பயலிடத்திலிருந்து அதைப்பிடுங்கு" என்று கொடியைச் சுட்டிக்காட்டியவாறு சொன்னான் அந்தக் கிழட்டு நெட்டை மனிதன்.

அந்தக் குட்டி அதிகாரி உடனே பாவெலிடம் ஓடிப்போய், கொடியைப் பற்றிப் பிடுங்கினான்.

"கொடு இதை!" என்று அவன் கீச்சிட்டுக் கத்தினான்.

"எடு கையை!" என்று உரத்த குரலில் சொன்னான் பாவெல்.

கொடி வானில் பிரகாசத்தோடு நடுங்கியது. முன்னும் பின்னும் ஆடியது; பிறகு மீண்டும் நேராக நின்றது. அந்தக் குட்டி அதிகாரி துள்ளிப்போய் பின்னால் வந்து விழுந்தான். நிகலாய் தன் முஷ்டியை ஆட்டியவாறு தாயைக் கடந்து விரைந்து சென்றான்.

"இவர்களைக் கைது செய்" என்று தனது காலைப் பூமியில் ஓங்கியறைந்து கொண்டு சத்தமிட்டான், அந்தக் கிழட்டு நெட்டை மனிதன்.

பல சிப்பாய்கள் முன்னே ஓடினார்கள். அவர்களில் ஒருவன் துப்பாக்கியை மாற்றிப் பிடித்துச் சுழற்றிவீசினான்- கொடி நடுங்கியது; முன்னால் சாய்ந்து விழுந்தது. சிப்பாய்களின் கூட்டத்தில் மறைந்து போய்விட்டது.

"ஹா!" என்று யாரோ ஒருவன் அசந்துபோய்க் கத்தினான்.

தாய் தன் நெஞ்சுக்குள் புழுங்கித்தவித்த பயங்கர ஓலத்தை அடிபட்ட மிருகம் போல அலறிக் கொண்டு வெளியிட்டாள்.

அந்தச் சிப்பாய்களுக்கு மத்தியிலிருந்து பாவெலின் தெளிவான குரல் ஒலித்தது:

"வருகிறேன், அம்மா! போய் வருகிறேன், அன்பே...."

தாயின் மனதில் இரண்டு எண்ணங்கள் பளிச்சிட்டன: "அவன் உயிரோடிருக்கிறான்! அவன் என்னை நினைவு கூர்ந்தான்!"

"போய் வருகிறேன், அம்மா!"

அவர்களைப் பார்ப்பதற்காகத் தாய் குதியங்காலை உயர்த்தி எட்டிப் பார்க்க முயன்றாள். சிப்பாய்களின் தலைக் கூட்டத்துக்கு அப்பால், அந்திரேயின் முகத்தை அவள் பார்த்தாள். அவன் புன்னகை செய்து கொண்டே அவளுக்குத் தலை வணங்கினான்.

"ஆ! என் கண்மணிகளே.... அந்திரியூஷா! பாஷா" என்று அவள் கத்தினாள்.

"போய் வருகிறோம், தோழர்களே!" என்று அவர்கள் சிப்பாய்களின் மத்தியிலிருந்து சொன்னார்கள்.

பல குரல்கள் அவர்களுக்கு எதிரொலியளித்தன. அந்த எதிரொலி ஜன்னல்களிலிருந்தும், எங்கோ மேலேயிருந்தும், கூரைகளிலிருந்தும் வந்து ஒலித்தன.

**யா**ரோ அவளது மார்பில் ஓங்கி அறைந்தார்கள்; தனது கண்ணில் படிந்திருந்த நீர்த்திரையின் வழியாக, அவள் அந்தச் சிவந்து கனன்ற குட்டி அதிகாரியின் முகத்தைத் தன் எதிரே கண்டாள்.

"ஏ, பெண் பிள்ளை! தூரப்போ!" என்று அவன் கத்தினான்.

அவள் அவனை ஒரு பார்வை பார்த்தாள். அவனது காலடியில் கொடியின் கம்பு இரண்டாக முறிந்து கிடப்பதையும் அதன் ஒரு முனையில் சிவப்புத் துணித் துண்டு கொஞ்சம் போல் ஒட்டிக் கொண்டிருப்பதையும் கண்டாள். அவள் குனிந்து அதை எடுத்தாள். அந்த அதிகாரி அவளது கையிலிருந்து அதைப்பிடுங்கி, தூரப்பிடித்துத் தள்ளி, பூமியில் ஓங்கி மிதித்தவாறு சத்தமிட்டான்:

"நான் சொல்கிறேன். போய்விடு!"

அந்தச் சிப்பாய்களின் மத்தியிலிருந்து அந்தப்பாட்டு ஒலித்தது:

துயில் கலைந்து அணியில் சேர
விரைந்து வாரும் தோழர்காள்!

எல்லாமே சுற்றிச் சுழன்று நடுங்கி மிதந்தன. காற்றில் தந்திக் கம்பிகளின் இரைச்சலைப்போல, ஒரு முணுமுணுப்புச் சத்தம் நிரம்பி நின்றது. அதிகாரி விடுவிடென்று ஓடினான்.

"உங்கள் பாட்டை நிறுத்துங்கள்" என்று வெறிபிடித்துக் கூவினான்; "ஸார்ஜெண்ட் மேஜர் கிராய்னவ்...."

கீழே போட்ட உடைந்து போன கொடிக்கம்பை நோக்கி, தாய் தட்டுத் தடுமாறிச் சென்றாள். மீண்டும் அதைக் கையில் எடுத்தாள்.

"அவர்களது வாயை மூடித் தொலை!"

அந்தப் பாட்டுக் குரல் திமிறியது. நடுங்கியது, உடைந்தது, பின் நின்றுவிட்டது. யாரோ ஒருவன் தாயின் தோளைப் பற்றிப் பிடித்துத் திருப்பிவிட்டு, முதுகில் கைகொடுத்து முன்னே நெட்டித் தள்ளிக் கத்தினான்:

"போ, போய் விடு!"

"தெருவைக் காலி செய்யுங்கள்!" என்று அந்த அதிகாரி கத்தினான்.

சுமார் பத்தடிக்கு முன்னால் அவள் வேறொரு கூட்டத்தைப் பார்த்தாள். அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டும், திட்டிக்கொண்டும், சீட்டியடித்துக் கொண்டும் தெருவை விட்டு விலகிச் சென்று, வீட்டு முற்றங்களில் மறைந்து கொண்டிருந்தார்கள்.

"விலகிப் போ-ஏ, பொட்டைப் பிசாசே!" என்று அந்த மீசைக்காரக் குட்டிச் சிப்பாய் தாயின் காதிலேயே சத்தமிட்டு அவளைத் தெருவோரமாகப் பிடித்துத் தள்ளினான்.

தான் கொடிக்கம்பின் பலத்தின் மீது சாய்ந்தவாறே நடந்து சென்றாள். ஏனெனில் அவளது பலமெல்லாம் காலை விட்டு ஓடிப் போய்விட்டது. மற்றொரு கையால் அவள் சுவர்களையும், வேலிகளையும் பிடித்துக் கொண்டு கீழே விழுந்துவிடாதபடி நடந்தாள். அவளுக்கு முன்னால் நின்ற ஜனங்கள் அவள் மீது சாடிச் சாய்ந்தார்கள் அவளுக்குப் பின்னாலும், பக்கத்திலும் சிப்பாய்கள் நடந்து வந்தார்கள்.

"போங்கள், சீக்கிறம் போங்கள்!"

அவள் அந்தச் சிப்பாய்கள் தன்னைக் கடந்து போக விட்டுவிட்டு, நின்றாள்; சுற்றுமுற்றும் பார்த்தாள். தெருக் கோடியில் மைதானத்துக்குச் செல்லும் வழியை மறித்துச் சிப்பாய்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

மைதானமோ காலியாய் இருந்தது. சாம்பல் நிற உருவங்கள் அந்த ஜனங்களை நோக்கி மெதுமெதுவாக முன்னேறிவரத் தொடங்கின.

அவள் திரும்பிப் போய்விட எண்ணினாள். ஆனால் தன்னையு மறியாமல் அவள் முன்னாலேயே போக நேர்ந்தது. கடைசியில் அவள் அப்படியே நடந்து நடந்து ஒரு வெறிச்சோடிப்போன குறுகிய சந்துப் பக்கமாக வந்து சேர்ந்தாள், அதனுள் நுழைந்தாள்.

மீண்டும் அவள் நின்றாள். ஆழ்ந்த பெருமூச்செறிந்தவாறே காதுகொடுத்துக் கேட்டாள். எங்கிருந்தோ கூட்டத்தின் இரைச்சல் கேட்டது.

அந்தக் கம்பின்மீது சாய்ந்தவாறே, அவள் மீண்டும் நடந்தாள். அவளது உடம்பெல்லாம் வியர்த்துப் பொழிந்தது: அவளது புருவங்கள் நடுங்கின; உதடுகள் அசைந்தன; கை அசைந்தது. தீப்பொறிகளைப்போல் பளிச்சிடும் சில தொடர்பற்ற வார்த்தைகள் மனத்தில் வரவர வளர்ந்து பெருகி, ஒரு பிரமாண்டமான ஜோதிப் பிளம்பாக விரிந்து விம்மி, அந்த வார்த்தைகளை வெளியிட்டுச் சொல்லிக் கூக்குரலிடத் தூண்டுவது மாதிரி இருந்தது.

அந்தச் சந்து திடீரென இடது புறமாகத் திரும்பியது; அங்கு ஒரு கோடியில் ஜனங்கள் பெருந்திரளாக கூடி நின்றதை அவள் கண்டாள்.

"என்னடா தம்பிகளா! துப்பாக்கிச் சனியன்களை எதிர்நோக்கிச் செல்வது என்ன, வேடிக்கையா, விளையாட்டா?" என்று பலத்த குரலில் ஒருவன் சொன்னான்.

"நீ அவர்களைப் பார்த்தாயா? அந்தச் சனியன்கள் அவர்களை நேருக்கு நேராக விரட்டியது, எனினும் அவர்கள் அசையாது நின்றார்கள் மலையைப் போல் நின்றார்கள், தம்பிகள்! கொஞ்சம்கூட அசையாமல் அஞ்சாமல் நின்றார்கள்!"

"பாவெல் விலாசவை எண்ணிப் பார்!"

"அந்த ஹஹோலையுந் தான்!"

"அவன் தன் கைகளைப் பின்னால் கோத்துக் கட்டியவாறு அப்போதும் புன்னகை செய்தான். அஞ்சாத பேய்ப் பிறவி அவன்!"

"நண்பர்களே!" என்று அவர்கள் மத்தியிலே முண்டியடித்துச் சென்று கொண்டே, தாய் கத்தினாள். ஜனங்கள் அவளுக்கு மரியாதையுடன் வழிவிட்டு ஒதுங்கினார்கள். யாரோ சிரித்தார்கள்:

"பாரடா, அவள் கொடி வைத்திருக்கிறாள்; கொடி அவள் கையில் இருக்கிறது!"

"வாயை மூடு" என்றது ஒரு கரகரத்த குரல்.

(தொடர்ந்து வரும்)

---

# தூரத்துப் பச்சை

## சிலாபம்– பொ. புஷ்பராஜு



**வா**னம் காலையிலேயே இருட்டிக் கொண்டிருந்தது. வானத்தில் முகில் படர்ந்து மழை வரப்போகிறது என சுட்டிக் காட்டிக் கொண்டிருந்த நேரம் தோட்டத்து ஸ்டோரிலிருந்து சங்கொலி முழங்கியது. சங்குச் சத்தம் கேட்டதும் பெண்கள் அரக்கப் பறக்க தேயிலை கொழுந்துக் கூடையைத் தலையில் சுமந்தவாறு வேகமாக மலைக்குப் போய்க் கொண்டிருந்தனர். ஆண்கள் கவ்வாத்து கத்தியையும், மண்வெட்டியையும், சுரண்டியையும் எடுத்துக்கொண்டு பிரட்டுக்களம் (வேலைத்தலம்) நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

முத்துமீனாட்சி கொடுத்த சாயத் தண்ணீரைக் குடித்துவிட்டு பிரட்டுக் களத்திற்கு நடக்கத் தொடங்கினான். பிரட்டுக் களத்தில் கணக்குப்பிள்ளையும், பெரிய துரையும் நின்று கொண்டிருந்தனர். ஆண் தொழிலாளர்கள் வேலை பெறுவதற்காகக் கூட்டமாகக் கூடி நின்றனர். எல்லோருக்கும் அன்று செய்ய வேண்டிய வேலைகளை துரை சொல்லிக் கொண்டிருந்தான்.

எல்லோரும் போனப்பின் முத்து துரையிடம் சென்றான். "சலாம் தொரே" என்றான்.

பதிலுக்கு அவனும் தன் அருவா மீசையை தடவிக் கொண்டே உரத்த குரலில் "சலாம். என்னா வேணும்?" என்று அதிகார தோரணையில் கேள்வியை எழுப்பினான்.

"ஐயா என் புள்ள செவ்வந்தி பெரிய புள்ளையாகியிருச்சிங்க. எங்க லயத்து காம்பரா கூரைத்தகரம் ஓட்டையாகி மழை காலத்துக்கு ஒழுகுதுங்க. கொஞ்சம் திருத்திக் கொடுத்தா நல்லதுங்க. புள்ள சடங்குக்கு பக்கத்து தோட்டத்துல்லயிருந்து சாதி சனங்கள் வருவாங்க. நம்ப லயத்துக்கு கூரைத்தகரம் மாத்தி நாற்பது வருஷமாகுதுங்க."

"சரி என்ன என்னா செய்ய சொல்ற மேன்?"

"இல்லங்க ஐயா. எங்கப்பன் காலத்துல போட்ட தகரங்க. அப்ப நம்ப தோட்டத்துல சீமை வெள்ளக்கார துரைமாருங்கயிருந்தாங்க. அந்தக் காலத்துல சீமை வெள்ளைக்கார துரைமாரு வருசா வருசம் ஆடிமாதம் மாரியாயி ஆத்தாவுக்கு திருவிழா எடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்துவாங்க அப்ப வருசா வருசம் லயத்து காம்பராக்களுக்கு கூரைத்தகரத்தை மாத்திரிப்பேரு பண்ணுவாங்க. செவுத்துக்கு சுண்ணாம்பு பூசி பூமிக்கும் செவத்துக்கும் ஒரு அடி உயரத்திலை கறுப்பு பெயிண்டு பூச சொல்லுவாங்க. பெயிண்டு நாத்தத்துக்கு பூச்சி புழு வராதுன்னு சீமை தொர சொல்லுவாங்க. எல்லா செலவும் தோட்டத்து கணக்குலதாங்க. லயத்து காம்பரா எல்லாத் துக்கும் சுண்ணாம்பு பூசியாச்சுன்னு பெரிய கங்காணி சொன்னதும் பெரியதுரையும், சின்ன துரையும் காம்பரா காம்பராவா பூந்து பார்ப்பாங்க. இது எல்லாம் பழைய கதைங்க. இருபது வசத்துக்கு முன்னே கவுருமெண்டு தோட்டத்தை எல்லாம் எடுத்துச்சுங்க. பொறகு இப்ப கம்பெனிக் காரங்க எடுத்தாங்க. இவங்க எல்லாம் எங்க சனங்களுக்கு என்னத்தை செய்தாங்க? எல்லாமே சீமை தொரமாரோட போச்சுங்க"

"நீ என்னா வீடு கட்டித்தர சொல்லுகிறாயா?"

"ஐயையோ... அதெல்லாம் ஒன்னும் வேணாங்க ஐயா. கூரைத்தகரத்தை மாத்தி தந்தா போதுங்க. கம்பெனிக்காரங்க குவாட்டஸ் கட்டித் தரமட்டும். ஒரு மாதிரி பேச்சை இழுத்தான் முத்து.

"தோட்டத்துல வேற ஆள் தகரம் கேட்க மாட்டாங்க. நீ மட்டும் என்னா? காலையிலேயே என்னை பயமுறுத்த....."

"ஐயா இல்லீங்க. எங்க உரிமையைத்தான் கேட்கிறேன். நீங்க பெரிய மனசு வைச்சா....."

"நீ யாப்பனே தமிழா? உரிமை கேட்கிறே? நீ எல்லாம் இந்தியா மேன்ங்க. எங்களுக்கு வேலைக்காரங்க. தகரம் டெமேச்ன்னா. அந்த சவுக்கு மரத்தை வெட்டி தகர ஓட்டைக்கு மேலே மரத்து இலையைப் போடு. மரத்தை பங்களாவுக்கு அனுப்பு. நீ ஒருமாதிரி. எப்ப பார்த்தாலும் நீ உரிமை, உரிமை சொல்ற. உனக்கும் யாப்பனே சம்பந்தம் உண்டா?"

இப்போது முத்துவுக்கு இதயத்தில் ஓங்கி அறைந்தது போல இருந்தது. துரை பேசிய வார்த்தைகள். "என்ன வார்தை பேசிவிட்டான்; நான் எதையோ சொல்ல இவன் என்னையே பொலிசில் மாட்டி விடுவான் போல, என மனதில் நினைத்துக்கொண்டிருக்கையில் துரையின் அப்பு (சமையற்காரன்) வடிவேலு மிக வேகமாக ஓடிவந்தான், பதட்டத்துடன்

"துரை ஐயா! நம்ப ரோசியின் கூட்டு கூரையிலே கருப்பந் தேயிலை மரம் விழுந்து கூரை சீட்டு பழுதாகி விட்டதுங்க. வானமும் இருட்டிக்கொண்டு வருகுங்க. மழையும் வரப்போகுது. நேத்து முழுவதும் ரோசிக்கு உடம்பு சரியில்லைங்க ஐயா."

"மை கோர்ட். வட்டூ டு நவ்? என்னா சொன்ன அப்பு. ரோசி கூடு டெமேஜ். லயத்துக்கு போய் சிறசேன பாஸ்சை கூட்டிவந்து ஸ்டோர்க்கு வாங்கிய அஸ்பஸ்டர் சீட்டை கூடுக்கு போடச் சொல்" என்று சொல்லிவிட்டு வேகமாக தன் பஜ்ரோ ஜீப்பில் ஏறிய துரை பங்களாவின் பக்கமாக ஜீப்பை செலுத்தினான்.

அப்போது முத்துவுக்கு அழுகை வருமாய் போலயிருந்தது. 'பரம்பரை பரம்பரையாக இந்த தோட்டத்தையே நம்பி வாழ்ந்து விட்டோம். எங்கள் பரம்பரை நாற்றி இருபது வருசமா வாழ்ந்துவிட்ட இந்த லயத்து காம்ப்ராவை திருத்த கம்பெனிக்காரங்க மறுக்கிறாங்க. இவுங்கதான் பெரிசா தொழிலாளர்களுக்கு போனஸ் தரப்போறங்களாம். பாவிகள். துரைவீட்டு அல்சேசியன் நாய் ரோசிக்கு இருக்கும் உரிமையும் சுதந்தரமும் கூட நம்ப தோட்டத்து சனங்களுக்கு இல்லையே. ஏன் தெரியுமா? நாங்கள் தமிழரா பொறந்துட்டோம். என்ற காரணம் தான்' என் மனதில் பேசிக் கொண்டே தலையில் தலைப்பாகையை கழற்றி முகத்தால் வடிந்த வியர்வைத்துளிகளை துடைத்துக் கொண்டான். அப்போது பலமாக காற்று வீசியது. மழையும் மெதுவாக பெய்யத் தொடங்கியது.

தன் லயத்து காம்பரா கூரை ஓட்டையை மூடுவதற்காக மலை படிகட்டு வழியாக வேகமாக ஓடிவந்தான் முத்து. அப்போது வேலுவும் சிறிசேன பாஸ்சுவும் கையில் சுத்தியலுடன் வேமாக சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு மலைப்படிக்கட்டில் துரையின் பங்களாவை நோக்கி போய்க் கொண்டிருந்தனர். அவர்களின் வேகநடையைப் பார்த்த முத்து துரையின் அல்சேயசின் நாய்க்கு இருக்கும் மதிப்பையும் மரியாதையையும் எண்ணி மனதிற்குள் சிரித்துக் கொண்டான். அந்தக் காலை நேரத்தில் எங்கும் புதுக்கம்பளம் விரித்த மாதிரியிருந்த பசுமையான தேயிலை செடிகள் முத்துவைப் பார்த்து அழுமாப்போல முத்துவின் பார்வைக்கு தெரிந்தன.

# அவள்

**செல்வி இ.வானதி– கொழும்பு**

**அவனுக்கு புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. பொங்கி வந்த அழுகையை பற்களால் உதடுகளை அழுத்தி அடக்கினான்**

சனநெரிசல் மிகுந்த அந்தக் கடற்கரையில் ஓர் ஒதுக்குப்புறத்தில் அவளும் அவனும் அமர்ந்திருந்தனர். வெகு நேரமாக அவர்களிடையே நிலவிய மௌனத்தைக் கலைத்தது அவன் குரல்.

"நான் கனடா போறேன்."

"ரியலி... எப்போ?"

அவன் சட்டென்று அவள் முகத்தை ஏறிட்டான். எந்த விதமான உணர்ச்சிகளோ, சலனங்களோ அற்றிருந்தது அவள் முகம். அவன் பார்வையைச் சந்தித்தவள் மீண்டும் வினவினாள்.

"எப்போ?"

அவனுக்கு அடிமனதில் எங்கோ வலித்தது.

"உனக்கு வருத்தமாயில்ல....?"

"எதுக்கு?"

"நான் உன்னை விட்டுப் போறேன்னு...." அவள் மெல்லப் புன்னகைத்தாள்.

"ம்.... வருத்தம் தான்....!"

ஒரு கணம் அவள் முகத்தை ஊன்றி நோக்கியவன்,

"நீ வருத்தப்படற மாதிரி எனக்குத் தெரியல" என்றான். அவள் பேசாதிருந்தாள். சில நிமிடங்கள் மௌனத்தில் கழிந்தன. மீண்டும் அவனே அந்த மௌனத்தைக் கலைத்தான்.

"என்னால புரிஞ்சுக்க முடியல....!"

"எதை?"

"உன்னை. உன் மனசை. உன்னோட இந்த விட்டேத்தியான போக்கை. ஏன்..... எதுக்காக நீ இப்படி இருக்கிற? எதிலயும் ஒட்டாம.... எவரோடயும் நெருங்காம.... வொய்?"

அவன் படபடத்தான். அவள் மீண்டும் புன்னகைத்தாள். அவனுக்கு ஒரே ஆத்திரமாக இருந்தது. சரேலென்று எழுந்தவன், காலால் தரையில் உதைத்தான். அவளை விட்டு விலகி சிறிது தூரம் நடந்தான். மீண்டும் திரும்பி வந்து அவள் எதிரில் அமர்ந்து, அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான். இன்னும் அவள் உதடுகளில் அந்தப் புன்னகை அமர்ந்திருந்தது. இது தான்– இந்தப் புன்னகை தான் இவளது பலம் என்று தோன்றியது. இவள் மீது கோபப்படவோ, திட்டவோ தன்னால் முடியாது என்று தோன்றியது. சட்டென்று அவளை நெருங்கி அமர்ந்தவன், அவள் கைகளில் ஒன்றை எடுத்து தன் கைகளுக்குள் சிறைப்படுத்திக் கொண்டான்.

"என் இனிய சிநேகிதியே, நான் உன்னை ரொம்பவும் நேசிக்கிறேன்"

அவள் மூன்றாம் முறையாய் புன்னகைத்தாள். மெதுவாக அவள் கையை அழுத்



தியவன் தொடர்ந்து சொன்னபோது உணர்ச்சி மிகுதியால் அவன் குரல் கரகரத்தது.

"காதல் என்ற மூன்று எழுத்துக்குள் என் நேசத்தை அடக்கிவிட முடியும்னு எனக்கு தோணல. பட்.... என் வாழ்க்கையின் எல்லை வரைக்கும் நீ என்னோட வருவியானா, நான் சந்தோஷப்படுவேன்."

சட்டென்று அவள் இதழ்களிலிருந்த புன்னகை மறைந்தது. மெதுவாகத் தன் கையை விடுவித்துக் கொண்டு எழுந்தவள், சற்று விலகி நின்று கொண்டாள். பார்வை தொலைவில் எதையோ துழாவிக் கொண்டிருந்தது.

"நான் உன்னை நோகப் பண்ணிட்டேனா?" அவன் வினவினான்.

பெருமூச்சொன்றே அவளிடமிருந்து பதிலாக வந்தது. அது அலுப்பா வெறுப்பா என்று தெரியவில்லை.

"நீ ஏன் இப்பிடி இருக்கிற?"

அவன் மீண்டும் வினா தொடுத்தான். அவள் மௌனம் சாதித்தாள். அவன் அவளது பதிலுக்காகக் காத்திருந்தான்.

"நான் ஏன் இப்படி இருக்கேன்னு எனக்கே தெரியல...."

திடீரென்று சொன்னவள் திரும்பிவந்து அவன் எதிரில் குத்துக்காலிட்டு அமர்ந்தாள். நெற்றியில் விழுந்த முன்னுச்சி மயிரை பின்னால் தள்ளி விட்டாள். கைகளால் முழங்கால்களைக் கட்டிக்கொண்டவள் சற்று நிமிர்ந்து அவன் கண்களை நேராகப் பார்த்தாள். அவன் விழிகளுக்குள் எதையோ தேடினாள். பின் பார்வையைத் தணித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள்.

"எத்தனையோ உறவுகள்..... எத்தனையோ நண்பர்கள்.... எவர் மீதும் எனக்கு ஒட்டுதல் இல்ல. ஆத்மார்த்தமான ஒட்டுதல் இல்ல. இது ஏன்னு எனக்கே தெரியல...."

என்று சொல்லி நிறுத்தினாள்; அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உனக்குப் புரியுதா?"

அவனுக்கு புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. 'இப்படியும் ஒருத்தியால் இருக்கமுடியுமா?'

இத்தனை இயல்பாய் மனிதரை நேசிக்க... மனத்தளவில் எவரோடும் ஒட்டாமல் இருக்கமுடியுமா?' அந்த ஒரு கணத்தில் அவள் அவனை விட்டு எங்கோ தொலைதூரம் சென்று விட்டது போல் உணர்ந்தான். அவனுக்குச் சட்டென்று அழ வேண்டும் போல் இருந்தது.'ஓ'வென்று வாய்விட்டுக் கதறி அழவேண்டும் போலிருந்தது. பொங்கி வந்த அழுகையை பற்களால் உதடுகளை அழுத்தி அடக்கிக்கொண்ட போதும் விழிகளில் நிறைந்த நீரை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளுக்கு அவன் அவஸ்தைபுரிந்தது. அவன் எதிரில் மண்டியிட்டு அமர்ந்தவள் அவனிரு தோள்களிலும் தன் கரங்களை வைத்தாள்.

"லுக் ஹியர் மை பிரெண்ட், இருபது வருஷமா நான் இப்பிடியே வாழ்ந்து பழகிட்டேன். என்னை மாத்திக்கணும்னு என்னைக்குமே நான் நினைச்சதில்ல. நான் நானாக இருக்கவே விரும்பறேன். இன்னொருத்தர் என்னை ஆக்கிரமிக்கிறத நான் விரும்பல்ல. உன் வேதனை எனக்குப் புரியறது. ஆனா..... இந்த நிமிஷம் வரைக்கும் நான் ரொம்பத் தெளிவா இருக்கறேன். ஒருவகையில நான் இப்படி இருக்கிறது தான் எனக்கு பிடிச்சிருக்கு. நிம்மதியாகவும் இருக்கு. நீ எதிர்பார்க்கிற அன்பு... ஐ மீன் காதல் நிச்சயம் என்கிட்ட கிடைக்காது. ஐ ம் ரியலி சொரி. என்னால என்னை மாத்திக்க முடியாது. நீ என்னைப் புரிஞ்சுக்கணும். பிளீஸ்....."

கூறி முடித்தவள் எழுந்தாள்.

"குட் லக் அண்ட் குட் பை"

சட்டென்று திரும்பி நடந்தாள். அவன் மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மனசு ஏனோ பாறங்கல்லாகக் கனக்க, அவளின் நினைவு மட்டும் இன்னும் ஒரு புதிராக அவன் மனசுக்குள்.....

# கரண்ட் கட்

**கவிதா ராஜரட்ணம் - கண்டி**

'ட்ரீங்......' படுக்கையில் இருந்து எழுந்த வேகத்தில் ஓடிச்சென்று மேசை மணிக்கூட்டிற்கு ஒரு அடிவிட்டேன். அலாரம் நின்றது. 'சீ.....சீ....சீ.... இதெல்லாம் ஒரு மணிக்கூடு, அந்த சீத்துவத்தில அலாரம் வேறு! அடிக்கிற சத்தத்தில பக்கத்து வீட்டுக்காரனும் எழும்பிடுவான்' காலையிலேயே சலித்துக் கொண்டேன். கரண்ட் கட் என்பதால் பங்கஜம்– அதுதான் என்ர மனிசி, மெழுகுதிரியோட 'புளோரன்ஸ் நைற்றிங்கேல்' மாதிரி அங்குமிங்கும் அலைந்து திரிந்தாள்.

"இஞ்சயப்பா, உந்த மெழுகுதிரியக் கொண்டு வா" பவ்வியமாகக் கேட்டேன். "வேணுமெண்டா அலுமாரித் தட்டில் இருக்கும் போய் எடுங்கோ" சூடாகப் பதில் வந்தது. பெருமூச்சு விட்டபடி இருட்டினுள் வலம் வந்த நான் தடால் என்று விழுந்தேன்.

"மூதேசி இப்பிடிப் பிரண்டு போய்க் கிடக்கிறியே, ரெண்டு கழுதை வயசாகுது எழும்பிப் படியடா எருமை!" மூத்த மகனில் தடுக்கி விழுந்த கோவத்தில் காலையிலேயே அவனைக் கரித்துக் கொட்டினேன்.

நாலு மணிக்கு அலாரம் வைச்சு அது அஞ்சு மணிக்கு அடிக்க, நான் ஆறுமணிக்கு அலுவலகம் செல்ல ரெடி!

இப்ப வெளிக்கிட்டாத்தான் எட்டு மணிக்கு அந்தச் சுடுதண்ணிக்கு முன்னால (எங்கட மனேஜர்தான்) நிக்கலாம். அதற்கிடையில் எனர பஞ்ச புத்திரா புத்திரிகள் பள்ளிக் கூடம் வெளிக்கிட அமர்க்களம் செய்து கொண்டிருந்தனர்.

"அம்மோய் என்ர கொப்பி எங்க?" இது கடைசித் தவ்வல்!" எணேய் அம்மா, என்ர சாப்பாட்டு பெட்டியைக் காணேலை!" இது மூத்தது! "இஞ்சயப்பா என்ர சப்பாத்து எங்க?" இது நான்! நானும் பிள்ளைகளுமாய் சேர்ந்து அவளை வேலை வேண்டுறம் எண்டு மாத்திரம் நினைச்சுப் போடாதீங்கோ! கரண்ட் இல்லாத சோகம் அவளை அலைக்கழிக்க, எங்களுக்கிடையில் கொசு மாமி போல் பறந்து திரிந்தாள் பங்கஜம்.

எப்படியோ துட்டுத்தடுமாறி வாசல்வரை வந்த பின் தான் ஞாபகம் வந்தது முக்கியமான ஒன்றை எடுக்காமல் வந்தது. வேறொண்டும் இல்லை என்ர அடயாள அட்டைதான்!

நான் நாட்டின் தலைப்பகுதித் தமிழன் ஆகையால் பாத்றூம் போகிற வேளையிலும் கூட அடயாள அட்டையை விட்டுட்டுப்போக மாட்டன்.



மீண்டும் குரல் கொடுக்க அடயாள அட்டையுடன் பங்கஜம் ஓடிவர, வீட்டிலிருந்து விடை பெற்ற நான் 'பஸ்தறிப்பு' (அப்படித் தான் பெயர் பலகையில் எழுதப் பட்டுள்ளது) வை அடைந்தேன்.

எல்லா பஸ்ஸினுள்ளும் சனம் நிரம்பி வழிந்தது. உதைப் பார்த்துக் கொண்டிருந்தால் இண்டைக்கு முழுக்க இங்கதான்! என்றெண்ணியபடி ஒரே தாவலில் ஒரு தனியார் பஸ்ஸினுள் ஏறி மூச்சடங்கப் பயணம் செய்த நான் அலுவலக பஸ் தரிப்பில் இறங்கினேன். வழமைபோல் அவர்கள் கையில் துப்பாக்கியுடன் அங்குமிங்கும் திரிந்தனர். நான் ஏன் பயப்பிடவேணும்? கையில அடயாள அட்டை! பையிலே பொலீஸ் பதிவுத்துண்டு. துணிவாக நடந்தாலும் கல்கள் இலேசாக நடுங்கின.

இந்தத் தமிழ்ச் சனத்துக்கே இப்பிடித் தான்! உந்தக் காக்கிக் கலரைக் கண்டாலே ஒரு அலர்ஜி! செக்கிங் பொயின்ரை அண்மித்த நான் கடைக்கண்ணால் என் பார்வையைச் செலுத்தினேன். மண் மூட்டைக்கு மேல் நின்று யாரோ என் மண்டையை நோக்கித் துப்பாக்கியைக் குறிவைத்தது போல் இருந்தது. உண்மையில் அப்படியில்லை; எனினும் அஞ்சிப் பயந்தவனுக்கு ஆகாயம் எல்லாம் பேய்தானே? இப்போ உடலெல்லாம் வியர்த்துக் கொட்ட, சமாளித்தபடி நிற்கிறேன்.

"மே...நம மொகத?" 'அழகு சுந்தரம்'

சிரித்தபடி சொன்னேன், முறைத்தார்கள். 'என்ர புளியடி வயிரவா! இண்டைக்குப் போக்கே சரியில்ல; நீ தான் காப்பாத்தணும்.' மனம் ஓலமிட்டது. அடயாள அட்டையை வேண்டிப் பார்த்தார்கள்.

அவ்வளவுதான்!

எல்லோரது முகமும் இறுகிவிட்டது.

திடீரென்று செவிட்டில் ஒன்று விழுந்தது.

அழுவதற்குக் கூட அவகாசம் இருக்கவில்லை.

அடுத்த அரைமணி நேரத்தில் நான் நாலாம் மாடிக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டேன்.

'டேய் அழகு சுந்தரம் நீ என்னடா பிழை செய்தாய்?'

மீண்டும் மீண்டும் மனம் கெஞ்சிக் கேட்டது.

காதில வேண்டின உறைப்பான அடி. இன்னும் கிண்ணென்று வலித்தது.

சிறிது நேரத்தில் ஒரு அதிகாரி வந்தார். என்னைப் பார்த்து இலேசாக முறைத்தார்.

அவரது கையில் இருந்த என் அடயாள அட்டையை எட்டிப் பார்த்தேன். நாசமாப்போக!

விடியக் காலையில் மெழுகுதிரி வெளிச்சத்தில என்ர வெங்காயம் தன்ரை கண்ணைப் பிடரியில வைச்சுக் கொண்டு தன்ர அடயாள அட்டையை மாறித் தந்துவிட அதைக் கவனிக்காமல் நாசமாய்ப்போன நான் வேண்டிப் பொக்கற்றில் வைச்சு.....! அதற்கு மேல் சிந்திக்க முடியாமல் "அடியே.... பங்கஜம்!!" உச்சஸ்தாயியில் அலறினேன் சிறைக் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்த படி!

# சாபக்கேடு

**ஆத்மராஜா ரூத் சந்திரிக்கா**
**கோட்டைக் கல்லாறு**

ஊழிக்காலப் பிரளயம் போலவொரு அல்லோலகல்லோலம். ஏணையில் கிடந்த குழந்தையை அள்ளியெடுத்துக் கொண்டு அக்கா ஓட, அவள் பின்னால் ஆச்சி ஓட, அதைப்பார்த்து என்னையும் இழுத்துக் கொண்டு அம்மா ஓட...வீடு வெறிச்சோடி வீதியில் புழுதி கிளம்புகிறது. எல்லார் இதயத்திலும் மரணபயம். 'உதென்ன கிலிசம்பறையப்பா உந்த வயசு போன காலத்திலை' சீறிவிழும் ஷெல்லோசை காதுபிளக்க ஆச்சி அவஸ்தைப்படுவதைப் பார்க்க எனக்கு சகிக்க முடியவில்லை. 'தட்டாதெரு சந்தி முதல் நாயன்மார்கட்டுவரை கனசனம் இடம் பெயர்ந் திருக்கினமாம்.....



ஆயிரமாயிரம் குடும்பங் களும் படுற அவஸ்தையை சொல்லிலை விளக்கேலாது..... கெதியிலை வாங்கோப்பா எங்கேனும் ஓடித்தப்புவோம்' பக்கத்து வீட்டு குடும்பமும் ஓடிக்கொண்டிருக்கிறது, இலக்கே தெரியாமல். எனக்கு இந்த ஓட்டம் ஆரம்பித்து கனகாலமாகிவிட்டது.... தொண்ணூறிலை கல்முனையிலை ஆரம்பிச்ச ஓட்டம்... இப்பவந்து மானிப்பாயிலை நிக்குது.... இனிக் கொக்குவில்.... வேறு எங்கெங்கவோ...

ஐஞ்ச வருஷத்துக்கு முன்னம் ஷெல் விழுந்து செத்தால் பெரிய அதிசயம். இப்போது வலு சிம்பிள். இன்னும் கொஞ்சநேரத்திலை என்ரை மண்டையில விழுந்தாலும் ஆரும் ஆச்சரியப்பட மாட்டினம், இழவு வீடு செய்ய மாட்டினம்...அப்பிடியொரு சாதாரணம்.

தொண்ணூறாம் ஆண்டு நான் கல்முனையிலை இருக்கேக்க உடையார் றோட்டிலையொரு வீட்டிலை ஷெல்விழுந்து தாய் பிள்ளையள் செத்துப்போனதை நினைச்சு எத்தினை நாள் சாப்பிடாமல் கண்ணீர் விட்டிருப்பன், பேயறைஞ்ச மாதிரி இருந்திருப்பன். இப்போது மனம் எவ்வளவு இயல்பாகிவிட்டது. ஏ.எல்.சோதினைக்குப் படித்துக்கொண்டிருந்த சிவாவும், கோபியும் என் முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். "என்ன சிவா மூட்டையொண்டு உடுப்புகளே? மண்ணாங்கட்டி, மனுஷன் உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு ஓடேக்க அது தானொரு குறைச்சல்?"

"பின்ன என்னத்தையடா சுமந்து கொண்டு ஓடுறீங்கள்?"

"கொஞ்சம் புத்தகங்களக்கா.... உயிர் தப்பிப் பிழைச்சால் சோதின எழுத வேணுமெல்லே, அதுதான் மினக்கெட்டனாங்கள்!" மறுவார்த்தை பேச வரவில்லை துக்கம் தொண்டையை நெருக்கிற்று. சே... இப்பிடியொரு வாழ்க்கையா...? ஏனிந்த சாபக்கேடு? நிம்மதியாய் இருந்து படிச்சு சோதின எழுதமுடியாமல் நிறையப் பிள்ளைகள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் செவி பிளக்கும் ஷெல்லோசை.... எதிர் தெருவில் மரண ஓலம். என் கால்கள் தள்ளாடுகின்றன. மனபலமும் உடல்பலமும் இழக்கப்பட்டுவிட்டன. சங்கிலித் தொடராய் மனித கால்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன....மீண்டும் என் மனம் சமநிலை இழக்கிறது. சிவாவும், கோபியும் என்னை உற்சாகப்படுத்துகிறார்கள், அவர்களின் விழிகளில்தான் எத்தனை கனவுகள்? இதயத்தில் எத்தனை எதிர்பார்ப்புகள். பன்னிரெண்டு வருடங்கள் படித்ததற்கான எதிர்பார்ப்புகள்..... எத்தனை அறுவடைக் கனவுகள்? என் மனம் சட்டென கிழக்கின் நிகழ்வுகளுக்குத் தாவியது. நினைவுப் புரவி புழுதிகிளப்பி வேதனையை விஸ்தரித்தது....

ஏ.எல். பரீட்சை எழுத இருந்த இளங்கோவும், நிதர்ஷனும், தீபனும், யோகராஜாவும் இன்னும்....இன்னும் அனேகர் 'மிஸ்ஸிங்' ஆனார்கள். அவர்களுக்குள் எத்தனை கனவுகள்? எதிர்பார்ப்புகள் இருந்திருக்கும்! அத்தனையும் கருகிப்போய்... மேற்கொண்டு என்னால் சிந்திக்க முடியவில்லை.

சித்தன்கேணி ராமநாதன் குடும்பமும் ஓடிக்கொண்டிருக்கிறது..... தோளிலும், கையிலும் இடுப்பிலும், வயிற்றிலும் குழந்தைகளோடு ஓடுகிறார்கள்.

மீண்டும் இடியோசை. ஒரு மரநிழலில் ஒதுங்குகிறோம்.... காதுகளையும் பொத்திக் கொண்டு கடவுளை நினைத்துக்கொண்டு. நான் சிவா, கோபி, இராமநாதன் குடும்பம். சீறிவிழும் சப்தம்... உயிர் துடிக்கிறது உடல் நடுங்குகிறது... 'ஆ...ஆ....ஆ' கண்களை விழித்த போது என்னருகேயிருந்த சிவா சிதிலமாகி உருத்தெரியாமல்.... 'இறைவா....'

என் உடையெங்கும் இரத்தக்கறை... ஒரு கணப்பொழுதில் வாழ்வு ஸ்தம்பித்து விட்டது. எனக்கு அழுகை வந்தது....இதயம் வெடித்துவிடும் போல ஒரு ஓலம் அகத்திலிருந்து குபுக்கென வெளியேறியது. கோபி அழவில்லை. மௌனமாக சம்மணமிட்டு அமர்ந்திருக்கிறான். அருகில் சிவா சுமந்துவந்த புத்தகமூட்டை அனாதரவாய் கிடக்கிறது. இராமநாதன் குடும்பம் ஓடுகிறது. நான் இனி ஓடப்போவதில்லை. என் கால்களுக்கு ஓடுதற்கு சக்தியில்லை. நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. மெல்ல மெல்ல பதட்டம் தணிகிறது. மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்து கோபியையும் பிடித்துக் கொண்டு அகதிகளாய்.... சொந்த மண்ணில்.... நடந்து கொண்டிருக்கிறோம்.

# ஒரே கேள்வி

**கு. சக்திவேல்**

குளித்து விட்டு உடை மாற்றப்போன கணேசன் கூச்சலிட்டான்.

"என்னடி துவைச்சிருக்கே? அழுக்கு அப்படியே இருக்கு! என்னதான் இருந்தாலும் எங்கம்மா மாதிரி முடியலை உன்னால."

உமாவுக்கு வேதனையாக இருந்தது. கல்யாணமாகி இந்த இரண்டு வருஷமாய் இதே பாட்டுத்தான்.



உடுப்பைப் போட்டுக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

"தூ.... சட்னியில் உப்பு! இட்லி கல்லு மாதிரி இருக்கு. ஆயிரம் தான் இருந்தாலும் எங்கம்மா மாதிரி சமைக்க துப்பில்லை உனக்கு."

'பார்த்துப் பார்த்துச் செய்தாலும் இத்தனை வசவா?' கண்களில் நீர் கட்டிக் கொண்டது.

சப்பாத்தைப் போட்டுக் கொள்ளப்போன கணேசன் கத்தினான்.

"என்னடி பொலிஷ் பண்ணியிருக்கே எருமை? எங்கம்மா பொலிஷ் முகம் பார்க்கலாம்.... எங்கம்மா மாதிரி பண்ண முடியாது உனக்கு."

பொறுமைக்கு ஒரு எல்லை உண்டே! இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவுகட்டத் தீர்மானித்தாள் உமா.

இரவு தோசையைப் பிய்த்த கணேசன், "தோசை ருசியே இல்லை ஆயிரம்தான் இருந்தாலும்...."

"நிறுத்துங்க..... எதுக்கெடுத்தாலும் எங்கம்மா மாதிரி எங்கம்மா மாதிரியின்னு சொல்றீங்களே... உங்கப்பா மாதிரி கைநிறைய சம்பாதிக்க உங்களுக்கு துப்பு இருக்கா?"

கணேசன் மௌனமானான்.

'மலைச்சாரல் தழுவிவரும் தென்றல் இதமா? கனிச்சோலை போலிருந்து என் நெஞ்சத்தைப் பதம் பார்க்கும் இவள் பனிப்பார்வை இதமா?'

குறளரசன் யோசித்தான். அவன் அருகினிலே அமர்ந்திருந்த சொர்ணாவுக்குப் பொறுமையில்லை.

'கைக்கெட்டும் தூரத்தில் கனியிருக்க, இவர் மட்டும் கனவுக்குள் காணாமல் போய்விடுகிறாரே!' என்று மனதுக்குள் கோபித்தாள். அது ஆசை கலந்த கோபம்.

'காணக் கண் இரண்டு போதாத கனகமணித் தேர் எனக்குக் காதலியாய் வாய்த்தாளே!' என்று மனதுக்குள் வியந்தான் குறளரசன்.

இக்கரை பச்சையாக இருக்க, அக்கரையை நோக்கி வியக்காதவனுக்கு நிறைவு ஏற்பட்டுவிடுகிறது.

கையில் வெண்ணெய் இருக்க நெய் இல்லையே என்று அலைபவனுக்கு நிறைவும் வராது. தெளிவும் வராது.

குறளரசன் நிறைவு கண்டவன். தெளிவும் பெற்றவன்.

எல்லாம் சரிதான் வேகம் மட்டும்தான் சற்றே மந்தம். அது மட்டும்தான் சொர்ணாவுக்கு உள்ள குறை.

இனியும் பொறுத்தால் பொழுது போய்விடும். சொர்ணாவே முன் முயற்சியில் இறங்கினாள்.

மெல்ல நகர்ந்து அவன் தோளில் தலை சாய்த்தாள். கூந்தலில் சூடியிருந்த மல்லிகை மலர்கள் வீசிய வாசம், அவனது உபவாச நிலைக்கு முற்றுப புள்ளியிட்டது.

போர்க்களத்தில் கோபம் முக்கியம். அது எதிரிகளை திணறடிக்க!

காதல் களத்தில் இதமான வாசம் முக்கியம். அது இருவரையும் கிறங்கடிக்க.

குறளரசன் கிறங்கிப் போனான். தோளில் தலைசாய்ந்தவளின் உச்சந்தலை முகர்ந்தான். அவளுக்குள் ஆசை சிறகடித்தது. அவனுக்கோ உச்சிவரை நெருப் பெரிந்தது.

கூந்தல் கோதி பிடரி நரம்புகளில் நாதம் மீட்டினான். இடது கரத்தால் அவளின் முகம் உயர்த்தி, விழிகளுக்குள் தன்முகம் தானே கண்டான்.

"அழகாகத்தான் இருக்கிறேன்."

"நீரில் இருப்பதுதானே மீனுக்கு அழகு. என் விழிகளுக்கு நேரில் இருப்பதால்தான் உங்களுக்கும் அழகு!"

"இல்லாவிட்டால்?"

"சகிக்காது!" உதடு சுழித்து அழகு காட்டினாள்.

"சகிக்கவில்லை என்றால் காதல் சலிக்கிறது என்று அர்த்தம். சலிக்கிறது என்றால், ஏதோ ஒரு முள் நம் உறவில் குத்துகிறது என்று அர்த்தம். முல்லையாக மணத்த உறவில் முள் எப்படி முளைத்தது?"

"முள்ளை என் முகம் எதிரே வைத்துக் கொண்டு, சொல்லை வீசினால் என்ன அர்த்தம்?"

"முள்ளா? என்னிடமா?"

"ஆம்!" என்றவள் தன் சுட்டு விரல் நீட்டி அவன் மீசையில் தொட்டாள்.

"அடியே கள்ளி," என்றவன், "முள்ளோ, மலரோ என்று பார்க்கலாம் வா."

என்று, அவள் இதழ்களில் முத்திரை இட்டான்.

"முள் குத்தியதோ?" என்று கேட்டான். அவள் தன் இதழ்களைத் தொட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னாள்; "பயந்தே விட்டேன் பறிபோய் விட்டதோ என்று."

"எடுக்கட்டுமா?"

"ஓட்டுமொத்தமாக எடுதது்க்கொண்டால் சுவையிருக்காது."

"யானைப்பசிக்கு சோளப் பொரியால் பயனிருக்காது."

"காட்டு யானைக்கு கரும்புக் கொல்லையின் அருமை புரியாது."

குறளரசன் அது கேட்டு கோபம் கொண்டவனாய் ஒரு பாவனை செய்தான்.

"கட்டிளங்காளையை காட்டு யானையென்றா சொல்கிறாய்? உன் விழியம்பு ஏதோ வம்பு செய்கிறது. தவறான எண்ணத்தை உன் மூளைக்குள் விதைக்கிறது."

"அம்மாடி... என்ன பலம்.

# கொடிதிலும் கொடிது!



இது மனித பலமாகப் படவில்லை."

"இதுவும் விழிகண்ட உண்மையோ? அல்லது உன் எழில் மேனி பட்டறிந்த செய்தியோ?"

"முறிந்ததோ என்று நினைத்த என் முதுகெலும்பு சொன்ன செய்தி. மலர் என்பீர்கள். கனி என்பீர்கள். அணைக்கும் போதும் மட்டும் மரமாய் நினைப்பீர்களாக்கும்."

"நீங்கள் மட்டும் என்னவாம், வேண்டாம் என்பீர்கள். விடுங்கள் என்பீர்கள். சுகயாடம் தொடங்கிவிட்டால் மலராகவா இருக்கிறீர்கள்? நம்மை மாணாக்கராகவல்லவோ மாற்றிவிடுகிறீர்கள்."

சொர்ணா முகம் சிவந்தாள். வெட்கத்தை மறைக்க அவன் மார்பிலேமுகம் புதைத்தாள்.

அவன் குனிந்து அவள் முதுகில் கன்னம் வைத்துக் கொண்டு, கரங்களால் கனியுடலில் கவிதை நெய்தான்.

எழுதும் மடலையே வியக்கவைக்கும் கவிதை. எழுத, எழுத மடலுக்கும் இனிமை ஊற்றெடுக்கும் கவிதை.

கவிதையே விதையானது. ஆசையே உரமானது. ஒரு பூந்தோட்டமே அவன் வசமானது. அவன் உணர்வெங்கும் வாசமானது. நாணம் அங்கே நாசமானது. மூச்சுக்காற்று மட்டுமே கானமானது.

"இப்போது நினைத்தாலும் சொர்ணாவுக்கு கோபம் வந்தது."

அயலூர் சென்ற குறளரசன் திரும்பி வரும்வரை, சுகவூருக்கு செல்லும் பாதையன்றோ காணாமல் போனது.

தூங்கினால் தோளில் இருக்கிறான். விழித்துக் கொண்டால் நெஞ்சில் இருக்கிறான்.

நல்ல உணவு உண்டவுடன் செரிக்கும். இன்ப நினைவோ காதலனைக் கண்டவுடன்தானே களிக்கும்!

இரவுகளில் விளக்குகள் மட்டுமா எரிகின்றன?

பிரிந்திருக்கும் காதலர் இதயங்களிலும் ஒரு திரி எரிகிறதே! அது வேதனையெனும் திரி. விரகதாபமே அதற்கு நெய்.

என்றெல்லாம் நொந்தாலும் காதலன்மீது மட்டும் சொர்ணாவுக்கு கோபமே வரவில்லை.

# இலக்கிய நயம்

பிரிவை வசைபாடினாள். நீண்டு செல்லும் இரவையும் வசைபாடினாள்.

இரவு கேட்டது; "சொர்ணா ஒன்று கேட்கவா?"

"ஒன்றென்ன நூறே கேள்! பெரும் தொல்லையும் நீயே, பேச்சுத் துணையும் நீயே!"

"காதலர் நேரில் இருந்தால் இரவே வா என்று இசை பாடுவீர்கள். வந்தாலும் போகாதே, திரை வேண்டும் விலக்காதே என்று விண்ணப்பம் போடுவீர்கள். பிரிவென்று வந்துவிட்டால் மட்டுமே என்மீது வசை வீசுவீர்கள்! நீதியா இந்த முறை? தேவையா எனக்கு இந்த வசை?"

"திரை போட்டாய் மறுக்கவில்லை. ஆனால் அப்போதெல்லாம் 'நில்' என்று சொன்னாலும் விரைவாக நடை போட்டாய்! விடியாதே விடியாதே, படியாத கதையின்னும் பாக்கியுண்டு என்று அடம்பிடித்தாலும், முடியாது போ என்று ஓடிப் போவாய்! ஆனால் இப்போதோ எனக்குள் திரண்டிருக்கும் வேதனையும் போதாதென்றுநீயும் முரண்டு பிடிக்கிறாயே!" என்றாள் சொர்ணா.

நட்சத்திர மின்னலாய் இரவு சிரித்தது.

"எய்தவன் இருக்க அம்மை நோகலாமா? கொத்து மலர் சரத்தை அள்ளாமல் அயலூரில் நாட்களை தள்ளுகிறாரே அவரன்றோ கொடியவர்!" என்றது இரவு.

அதற்கு சொர்ணா சொன்னாள்;

"மனம்வந்து பிரிந்திருக்கும் அவரும் கொடியவர்தான். ஆனால், அதனைவிடக் கொடிது நெடுநேரம் நீள்கின்ற நீ!"

"இது அநியாயம்!"

"எது அநியாயம்? நாலும் தெரிந்த திருவள்ளுவரே கொடிது நெடிய இரவென்று கூறியிருக்கிறார்" என்றாள் சொர்ணா.

இரவு வாயடைத்தது.

திருவள்ளுவர் சொன்ன குறள் இதுதான்.

"கொடியார் கொடுமையின் தாம்
கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா"

குறள் – 1169. அதிகாரம்-117.



## குறுக்கெழுத்துப் போட்டி இல–122

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | | 3 | |
| 4 | | | | ■ | | ■ |
| | 5 | | | | ■ | 6 |
| | | ■ | ■ | 7 | | |
| ■ | | 8 | ■ | | ■ | |
| 9 | | | ■ | | ■ | |
| ■ | | ■ | 10 | | | |

### இடமிருந்து வலம்

02. இத்தகைய பிள்ளை பிறந்தால் குடும்பமே சிறப்புறும்.
04. உடல்வலிமை இல்லாவிட்டாலும் உள்ளத்தில் இது இருந்தால் வெற்றி கிடைப்பது சுலபம்.
05. ஒளிந்து கொண்ட திருடனைத் தேடிப் பிடிப்பதற்காக இதனை போட்டுத் தேடினர் என்று கூறுவார்கள்.
07. மன்னார் மாவட்டத்தில் சிலாபத்துறை முன்பு இதற்குப்பேர் போனது.
09. மின் சக்தி பெறுவதற்கு இதனையும் பயன்படுத்துகிறார்கள்.
10. சப்ரகமுவா மாகாணத்தில் அண்மையில் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தியது.

### மேலிருந்து கீழ்

01. அதிஷ்டமிருந்தால் நமக்கும் கிடைக்கலாம்.
02. வங்காள விரிகுடாவில் அடிக்கடி தலை காட்டுகிறது.
03. இதனைத் தொலைத்துவிட்டால் வீட்டுள் புகமுடியாது.
05. மங்களகரமான நிகழ்ச்சிகளில் மணக்கும்.
06. இக்காலத்தில் பள்ளி மாணவர்களையும் அடிமைப் படுத்திவிடுகிறது.
07. நல்ல புத்திமதிகளைக் கூறினாலும் செவிசாய்க்கமாட்டான்.
08. இதிகாச காலத்து ஆயுதம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 21.10.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-122
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-120ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 து | ர் | 2 வா | ச | ர் | ■ | 3 க |
| லா | ■ | 4 ச | ர | ஸ் | 5 வ | தி |
| 6 பா | த | க | ம் | ■ | த | ர் |
| ர | ■ | ர் | ■ | 7 தி | ன | ■ |
| ம் | 8 த | ■ | 9 அ | ரு | ம் | 10 பு |
| ■ | 11 வ | லை | ■ | ட் | ■ | ன |
| 12 வி | ளை | யா | ட் | டு | ■ | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 120இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:

1. எம். சிறீதரன், மட்டக்குளி.
2. செல்வி. சிவா. தர்ஷினி, திருகோணமலை.
3. என். பாத்திமா சக்ரியா, நாவலப்பிட்டி.
4. எம். சானாஸ், ஹேனமுல்லை.
5. ஏ. காயத்திரி, பூண்டுலோயா.
6. ஜே. யோசேப்பு, கொழும்பு-13.
7. எவ். முனவ்பர், புதிய காத்தான்குடி.
8. செல்வி. பாத்திமா பர்ஹத், ஏறாவூர்.
9. திருமதி. நிர்மலா ஸ்ரீராம், கண்டி.
10. ஆர். குமரேசன், வவுனியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

**தந்தை சொல் மந்திரமா? மனைவி சொல் மந்திரமா?**

ஜே.ஜிப்ரி-அக்கரைப்பற்று-06

இருவரில் யார் மந்திரம் தெரிந்து வைத்திருக் கிறார்களோ அவர் சொல்!

□□

**மக்கள் யாரைக் கண்டு பயப்படுகிறார்கள் சிந்தியா?**

ரிபான் எம்.பௌஸர்-ரம்புக்-எல

தமது தோளில் ஏறி நின்று காதைக் கடிப்பவர்களைக் கண்டு.

□□

**கோபம் வந்தால் என்ன செய்ய வேண்டும்?**

எஸ்.வசந்தமலர்-திருமலை.

கோபம் வந்தவுடன் கண்ணாடி முன்பாகச் சென்று உங்கள் முகத்தைப் பாருங்கள். உங்களுக்கே வெட்கமாகிவிடும். அந்தளவுக்கு சகிக்கமுடியாமல் இருக்குமாம். இது திருமுருக கிருபானந்த வாரியார் சொன்னது. (வாரியாரும் கண்ணாடி பார்த்திருப்பார் போலிருக்கிறது)

□□

**டியர் சிந்தியா! தமிழர்கள் அனைவரும் தமிழில் கையெழுத்திடும் நந்நாள் எப்போது வரும்?**

த.ரொசான் –கோமாரி.

இப்போது தமிழில் கையெழுத்துப் போடமுடியாது என்று உங்களுக்கு யார் சொன்னது? தமிழிலும் போடலாம். எந்த மொழியில் போடுகிறோம் என்று தெரியாமலேயே கிறுக்கலாகவும் போடலாம். அதுதானே கையெழுத்து.

□□

**என்னாங்கோ சிந்தியா! புதுசா ஷில்பா சட்டியோ, ரொட்டியோ வந்து கலக்கப் போவுதாமே? அப்ப நம்ம நக்மாவோட கதை என்னங்க ஆவுறது?**

எம். பாஹிம்-கண்டி

ஒண்ணும் ஆகாதுங்கோ. சட்டியோ, ரொட்டியோ; சட்டி உடைந்தால் போச்சு. ரொட்டி உண்டால் போசசு. நக்மாவின் கதையும் அது தானுங்கோ. நாளைக்கு ஷில்பாவின் கதையும் அம்புட்டுத்தானுங்கோ.

□□

**தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவிப்பாளர்களின் தமிழ் உச்சரிப்பு வர வரத் தேய்ந்து போகிறதே?**

வ.தேவசகாயம்-மாத்தளை

அரசியல் சிபாரிசுகளால் வருபவர்கள்தான் கெடுக்கிறார்கள் என்று பார்த்தால், எம்.ரி.வி.போன்ற தனியார் தொலைக் காட்சிகளில் வரும் தமிழ் அறிவிப்பாளர்களும் வாயில் வாளோடு தோன்றுகிறார்களே!

□□

# சிந்தியா பதில்கள்

**ஓர் எழுத்தாளனையும், ஒரு புத்தகக் கம்பனி முதலாளியையும் சிறைக்குள் ஒரே அறையில் போட்டுவைத்தால்...?**

ஹிஸான் நஸீஸ்-ஹேனமுல்லை.

சிறை அனுபவம் பற்றி எழுத்தாளரை அளக்கவைத்து, அதை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொள்வார் முதலாளி; வெளியே போனதும் பதிப்பிக்கத்தான்.

□□

**ஹாய் சிந்தியா! இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிடி

முயற்சி திருவினையாக்கும். அடிமேல் அடி அடித்தால் ரன் ரேட் உயரும். எனவே முயற்சிக்குக் கிடைத்த பரிசு. அதற்காக பாகிஸ்தான் அணியையும் பாராட்ட வேண்டும். 'பாகிஸ்தானையே தோற்கடித்து விட்டார்களே!' என்று வியக்கப்படுவதில் பாகிஸ்தான அணியே பலமானது என்னும் மறைமுக பாராட்டும் அடக்கம்தானே நிஷா!

□□

**இளமையை என்றும் பாதுகாக்க விரும்புகிறேன். உமது ஆலோசனை?**

கே.உதயன்-பாலாவி.

எதையும்-எப்போதும் அளவோடு வைத்துக்கொள்ளும்.

□□

**"மிஸ்டர் மெட்ராஸ்" படம் பார்த்து விட்டீர்களா? சூப்பரா?**

எஸ்.நிரோசன்-கொழும்பு 5

கதையைத் தவிர மற்றெல்லா மசாலாக் களையும் பதமறிந்து கலந்திருக்கிறார்கள். தெய்வமகன் சிவாஜி மாதிரி நடிக்க முயல்கிறார் பிரபு. 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்பது பொய்த்துப் போன பட்டியலில் அதனையும் சேர்த்துக் கொள்ளலாம்.

□□

**ஓ.ஜெ.ஸிம்சன் விடுதலையாகி விட்டாராமே. அறம் தவறியதோ?**

வி.காட்கில்-மட்டக்களப்பு

முன்னர் ஒரு வெள்ளையர் அமெரிக்காவில் கறுப்பர் ஒருவரைத் தாக்கிவிட்டார். தாக்கப் பட்டதை வீடியோவில் பதிவு செய்த ஆதாரத்தை நீதிமன்றத்தில் காட்டியும் கூட வெள்ளையர் விடுதலையானார். ஜுரிகளில் பலர் வெள்ளையர்கள். அந்தத் தீர்ப்பால் கலவரமே வெடித்தது. தற்போது தனது வெள்ளைஇன மனைவியைக் கொலை செய்த வழக்கில் சிம்சன் விடுதலையாகிவிட்டார். சிம்சன் கறுப்பு இனத்தவர். தீர்ப்புச் சொன்ன ஜுரிகளில் பலர் கறுப்பு இனத்தவர்கள் பழையதை மறக்காமல் பழிவாங்கி விட்டார்களோ?!

# இராமாயணம்

## அங்கம் 2


# தேவரிடர் தீர்க்கத் திருமால் அவதரிப்பார்

### தேவருலகில் மேகநாதன்

அமரர்களுக்கு அரசனான தேவேந்திரன் சோகமே உருவாக- செய்வதறியாது திகைத்துப் போயிருந்தான். அமராவதி நகருக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும் அபாயச் சங்கு முழங்கியது. என்றுமே ஏற்பட்டிராத பேரபாயம் சூழ்வதை எண்ணும்போது ஏக்கம்தான் மேலிட்டது.

அமராவதியை அரண்செய்யும் அமர காவலர்கள் அத்தனை பேரையும் அசுரர்கள் சிறைப்பிடித்துவிட்டார்கள். தெய்வீக அஸ்திரங்களைத் தாங்கி நின்ற அவர்களுடைய வீரம் செயலிழந்து போய் விட்டது. அரக்கர் படைகள் அணி அணியாக வந்து அமரபுரக் காவலர்களை அடிபணிய வைத்து விட்டனர்.

தானைத் தளபதி ஓடோடிவந்து இந்திரனிடம் நடந்தவற்றைச் சொன்னான். இத்தகைய கொடுமை என்றுமே நடந்திருக்கவில்லை-இன்று ஏன் இவ்வாறு நடக்கிறது? என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் போதே ஆயிரம் இடி. முழக்கங்கள் ஒன்று சேர்ந்து இடித்தாற்போல் பெரும் ஓசை எழுந்தது.



வசிட்டமாமுனிவர்

"எங்கே ஒளிந்திருக்கிறான் அந்த இந்திரன்? இங்கே அவன் உடன் வரா விட்டால், சங்கிலியால் பிணைத்து இழுத்து வாருங்கள் அவனை!"

சிம்மகர்ச்சனை போலெழுந்த அந்த ஆணையைத் தொடர்ந்து ஆயிரம் அரக்க வீரர்கள் அணிவகுத்துச் சென்று இந்திரனை வளைத்தனர். அந்தப் பரந்தாமனை நினைத்து அபயம் கோருவதற்கே அவகாசம் கிட்டவில்லை. அமரர்க்கதிபனாம் இந்திரனின் கைகளில் விலங்குகள் பூட்டப்பட்டன.

"இழுத்துச் செல்லுங்கள் அவனை- இலங்காபுரியின் சிறைக் கூடங்களில் ஏற்கனவே அமரர்கள் அனைவரும் அடைபட்டுக் கிடக்கின்றனர். அவர்களுக்கே தலைவனான இவன் மட்டும் ஏன் இங்கு தனியாக தவித்து வாட வேண்டும்? எமது நாட்டின் சிறைகளிலே இந்த அமரர்களெல்லாம் அரச பரிபாலனம் செய்யட்டும். இழுத்துச் செல்லுங்கள்....."

ஆணைகளைப் பிறப்பித்த அந்த உருவம் அகன்ற தோள்களுடன் ஆஜானுபாகுவான உருவமைப்பும் கொண்டிருந்தது. ஆவேசம் ததும்பும் அந்த முகத்தில் ஏளனமும் எக்காளமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. ஆணவச் சிரிப்பினை அடிக்கடி உதிர்த்தது அந்த உருவத்தின் வாய். ஆழமான கண்களில் குறும்புத்தனம் கொலுவிருந்தது. அரக்கத்தனம் குடிகொண்டிருந்த போதும் முகம் அழகாகவும் களையுடனும் திகழ்ந்தது. கொடுமையான கட்டளைகளைப் பிறப்பித்த போதும் கூரிய மூக்கின் மேல்-பரந்த நெற்றியில் அழகாக மூன்று விரல்களால் திருநீற்று அடையாளமும் நடுவில் சந்தனப் பொட்டும் காணப்பட்டன. இக்குறிகளைக் கண்ணுற்ற எவரும் 'இவன் ஒரு சைவன்' என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியும்.

அசுர வீரர்கள் இந்திரனை சங்கிலியால் பிணைத்து இழுத்துச் சென்றதும் அந்த அமரருலகமே அதிரும் வண்ணம் மற்றுமொரு சிரிப்பை உருள விட்டு மெல்ல நகர்ந்து இந்திரனுடைய அரியணையில் ஏறி அமர்ந்து கொண்டது அந்த உருவம். அங்குள்ள ஆசனங்களில் பல அசுர அதிகாரிகள் வந்தமர்ந்தனர்.

"மூவுலகங்களையும் ஒரே குடைக்கீழ் ஒருங்கிணைத்து, முப்பத்து முக்கோடி தேவர்களையும் தம்மடிப்படுத்தி, பத்துத் திக்கிலும் தன் புகழைப் பரவவிட்ட தசகண்ட இராவணேசனின் புதல்வன், வெற்றிச் செல்வன், விறல் வேந்தன், வீராதி வீரன்; தன்னை மிஞ்சிய தார் வேந்தர் எவருமில்லை என்று இறுமாப்புடன் இந்த அமராபதியை ஆண்டு வந்த இந்திரனின் கர்வத்தை அடக்கி, அவனைச் சிறைப்பிடித்து, தேவருலகச் சிங்காசனத்தில் சிறப்புடன் வீற்றிருக்கும் இலங்கையின் இளவல் மேகநாதன் வாழ்க!"

இவ்வாறு அசுரவீரர்களுள் ஒருவன் கட்டியம் கூற, அங்கு திரண்டிருந்த ஏனைய அசுர அதிகாரிகள் வாழ்க...! வாழ்க! என்று வாழ்த்தொலி எழுப்பினர். அப்போது அந்தத் தேவருலகு மட்டுமல்ல மூவுலகுமே அதிர்ந்தன.

அந்த அவையிலிருந்த அரக்கர்களில் ஓர் இளைஞன் எழுந்தான்.

"தேவர்களின் சபையில், தேவேந்திரன் அரியணையில் வந்தமர்ந்ததும் தேவகன்னியர்களான அரம்பை, ஊர்வசி, திலோத்துமை ஆகிய மூவர் வந்து சதிராட்டம் புரிவார்களாமே? எங்கே அவர்கள்.....? ஒளித்து விட்டார்களா.....? இழுத்து வாருங்கள் அவர்களை...!"

என்று கர்ஜித்தான்.

எழில் பூத்த இளஞ்சிட்டுக்கள் மூவர் - அஞ்சி நடுங்கியவர்களாக அவை நடுவே வந்து நின்றனர். அன்றலர்ந்த தாமரை போன்று என்றும் மலர்ந்திருக்கும் அவர்களுடைய வதனம் வாடிய காந்தள் போல் கூப்பிக்காணப்பட்டது.

என்றும் தங்களுக்கு அபயமளித்து ஆதரித்துவரும் அமரர்கோன் அரியணையில் இல்லை. அமர்ந்திருக்கும் அரக்கர் தலைவனை ஏறெடுத்துப் பார்க்கவும் அவர்களுக்கு அச்சம். இருப்பினும் அவையில் அன்றாடம் ஆடற்கலை புரியும் பணி அவர்களுடையது. பின்னணியில் இருந்து பண் பாடவும் வாத்தியங்களை மீட்டவும் உரியவர்களும் வந்துவிட்டனர். இம் மூவரையும் அழைத்து வர ஆணையிட்டவனே மறுமுறையும் குரலெழுப்பினான். "இந்திரன் இச்சபையில் இருந்தால்தான் உங்களுக்கு ஆட வருமோ...? அரியணையில் இனிமேல் அமர்ந்து அரசோச்சப் போகும் உரிமை இனி இந்த இளவலுக்குத்தான்! ஆட மறுத்தால் நீங்கள் அனுபவிக்கும் தண்டனை எவ்வாறிருக்கும் என்பதை நான் கூறப்போவதில்லை... இம்... ஆரம்பியுங்கள் உங்கள் ஆட்டத்தை...!"

இசை எழுந்தது-ஆனால் அதில் சுருதி இழையோடவில்லை... ஆடலும் தொடங்கியது: அதில் அழகேதும் தென்படவில்லை. இருப்பினும் அந்த ஆடல் முறை அசுரர்களுக்குப் புதுமையாக இருந்தமையினால் தலைகளை ஆட்டி இரசித்தார்கள்.

♦♦♦

### பிரம்மன் கொடுத்த வரம்

படைப்புத் தொழிலுக்கு அதிபனாம் நான் முகனாகிய பிரம்மனின் மகன் வசிட்டமாமுனிவன் தவத்தால் உயர்ந்தவன். நிகரற்ற சக்தி படைத்தவன்.

தசரத மாமன்னன், மகப்பேறற்று வருந்தி மந்திரிப் பிரதானிகளுடன் தன்னிடம் யோசனை கேட்டபோது, அந்த வசிட்டமாமுனிவர், சிலகாலத்தின் முன்னர் அமராவதி நகரில் அரக்கர் கூட்டத்தினால் இந்திரன் சிறைபிடிக்கப்பட்ட அந்தக் காட்சியை மனத்திரையில் காண்கிறார்.

இந்திரன் கைதானதை அறிந்த பிரம்மதேவர் இலங்காபுரிக்குச் சென்று இந்திரனைச் சிறை மீட்டு வந்ததையும் அறிகிறார்.

ஐம்புலன்களையும் அடக்கி, ஒரே சிந்தையாய், காலத்தை உணராது-பசி, தூக்கம் ஆகிய அனைத்தையும் மறந்து கடும் தவமியற்றுபவர்கள் எண்ணுதற்கரிய மகாசக்திகளைப் பெறுகிறார்கள். அத்தகைய தவ வலிமையில் சிறந்தவர்களுள் ஒருவரான வசிட்டமாமுனியும் முக்காலமும் உணரும் வலிமையைப் பெற்றிருந்தார். மூவுலகிலும் நடைபெறும் சம்பவங்களையும் உடனடியாகவே தெரிந்து கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருந்தார். ஆகவே, தசரத மாமன்னனின் குழந்தையில்லாக் குறை நீங்க வழி உண்டா என்று தன் சிந்தனா சக்தி எனும் குதிரையைத் தட்டிவிட்டார். அவர் கண்ட காட்சியில் பல விண்ணுலக வித்தைகள் வெளிப்பட்டன.

இலங்கையர்கோன் இராவணேசன் முற்றும் துறந்த முனிவனாக இல்லாவிட்டாலும் கடும் தவம் மேற்கொண்டவன். சிவபக்தன். இல்லறத்தை மேற்கொண்டிருந்த போதிலும் இறைவனை இசைபாடித் துதிப்பதில் தவறுவதில்லை.

படைத்தற் கடவுளான பிரம்மனை நோக்கித் தவமிருந்தான் இராவணேசன். அவனுடைய கடும் தவத்தால் கவரப்பட்ட பிரம்மதேவன், இராவணன் முன்தோன்றி "நீ என்ன வரம் கேட்டாலும் தந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டார். இறைவனை அன்பால் கட்டிவிட்டால் ஒருவன் எத்தகைய கொடுமையைப் புரிபவனாக இருந்தாலும் ஆண்டவன் அன்புக்கு அடிமையாகி, அவன் வேண்டுவனவற்றையெல்லாம் வாரி வழங்கி விடுவான். இதேபோல்தான் இராவணனின் அன்பில் கட்டுண்ட பிரம்மன், அவன் அப்போது கேட்ட வரத்தை தங்கு தடையின்றித் தந்து விட்டார்.

"பல்லுயிரையும் படைக்கும் பெரும் பணி புரியும் பிரம்மதேவனே! வேதத்தின் முதல்வனே! அடியேனுக்கு அழிவிலா வரம் தந்தருள வேண்டுகிறேன். தேவராலோ அவுணராலோ-முனிவர்களாலோ என் வழி வந்தோருக்கும் எனக்கும் என்றும் இறப்பு ஏற்படாமல் சாகாவரம் அருள வேண்டுகிறேன்."

இவ்வாறு இராவணேசன் இரந்ததும், "நீ கோரியபடி வரமருளினேன் பக்தனே! நீ சிரஞ்சீவியாக என்றென்றும் வாழக் கடவது" என்றருளி பிரம்மதேவன் மறைந்து விட்டார்.

பெறற்கரிய பேறுபெற்றதும் ஒருவனுக்குத் தன்னை விட தரணியிலே எவனுமில்லை என்ற தலை வீக்கம் ஏற்பட்டு விடுவதுண்டு. இதற்கு அரக்கர் தலைவன் இராவணனும் எவ்வாறு விதிவிலக்காக முடியும்! "தேவர்களாலும் அவுணர்களாலும் முனிவர்களாலுமே அழிக்க முடியாத என்னை எவர்தான் எதிர்க்க முடியும்?" என்ற எண்ணம் மேலிட்டவனாக மூவுலகங்களையும் இராவணன் ஆட்டிப் படைக்கலானான். பூவுலகில் புகுந்த இடங்களிலெல்லாம் பேரழிவை ஏற்படுத்தினான். தவசிலிருக்கும் முனிவர்களையெல்லாம் சிறையில் தள்ளினான்; சூரியன், சந்திரன் முதலான கோள்களையும் தன் குற்றேவலுக்குக் கடமைப் படுத்திவிட்டான்; வாயுவையும் வருணனையும் வாட்டி வதைக்கலுற்றான். தேவேந்திரனை தன்மகன் மேகநாதனை அனுப்பி சிறைப்பிடிக்க வைத்தான்.

இந்திரனை சிறைப் பிடித்தமையினால் தன் மகன் மேகநாதனுக்கு 'இந்திரசித்து' என்று சிறப்புப் பெயர் சூட்டி மகிழ்ந்தான்.

இவ்வாறு இராவணேசனின் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போவதால், சிறை மீண்ட இந்திரனும் ஏனைய தேவர்களும் மகாமேருமலையில் உறைந்திருக்கும் பிரம்மதேவனை நாடி ஓடினர். இராவணன் கொடுக்கும் இம்சைகளை எடுத்துரைத்தனர். தான் கொடுத்த வரத்தால் தலைக்கனம் பிடித்து, நிலை தடுமாறி , தறி கெட்டலையும் தன் பக்தனுக்கு உரிய தண்டனை தர தன்னாலாகாது என்றுணர்ந்த பிரம்மதேவர் தேவேந்திரன் முதலான தேவர்களையும் அழைத்துக் கொண்டு வைகுந்தம் நோக்கிப் புறப்பட்டார்.

மெய்யடியார்கள் நினைத்த மாத்திரத்தில் தோன்றி நிலையான அருளைப் பொழியும் கருணைக் கடலான திருமால் தன்னை நோக்கி தேவர்கோனும் ஏனையோரும் வருவதை அக்கணமே உணர்ந்தார். பிரம்மதேவனுடைய மேருமலை மண்டபத்திலேயே அவர்களுக்குக் காட்சி அளித்தார்.

செந்தாமரையை உறைவிடமாகக் கொண்ட இலக்குமிதேவியுடன் கருட வாகனத்தின் மீதமர்ந்து தோன்றினார். தேவர்கள் திருமாலைத் தொழுதெழுந்தனர். அவர்கள் கூறப்போகும் தகவல்களை உணர்ந்தவர்தான் எனினும் "என்ன குறை உங்களுக்கு". என்று திருமால் வினவினார்.

பிரம்மன் தான் இராவணேசனுக்களித்த சாகாவரத்தைப் பற்றிக்கூறி, அவ்வரத்தால் அகம்பாவம் மேலிட்டு அவ்வரக்கர்கோன் புரியும் அட்டூழியங்களனைத்தையும் விபரித்தார். புன்முறுவல் பூத்தவராக அந்தப் புருடோத்தமன் அனைத்தையும் கேட்டறிந்தார்.

தனக்கு தேவர்களாலும் முனிவர்களாலும் அவுணர்களாலும் மரணம் சம்பவிக்கலாகாது எனத் தவமிருந்து வரம்பெற்ற இராவணேசன் மாநிடர்களால் தனக்கு மரணம் ஏற்படலாகாது என்று கேட்க ஏனோ மறந்து விட்டான். அரக்கர்கோனான தன்னை எந்த நரனும் அழிக்கத் துணிவானோ என்ற இறுமாப்பில் இருந்து விட்டான்போலும். இதனால் திருமாலே மாநிடனாக அவதரிக்க திருவுளம் கொண்டார். தான் தன்னுடைய அம்சமாக மாநிட உருவினைப் பிறக்க வைக்க நினைத்த அந்தப் பரம்பொருள், தன்னுடைய அம்சத்துக்கு உறுதுணையாக அவதரிக்க ஏனைய தேவர்களுக்கும் கோரிக்கை விடுத்தார்.

உலகின் கண்ணே தர்மம் தடுமாறி, நீதி நிலைபெறாமல் அநீதி தலையெடுத்து, அதர்மம் ஆட்சி புரிந்து அக்கிரமங்கள் மலியும் காலங்களில் அந்தப் பரம்பொருளே மாநிட அவதாரம் எடுத்து 'துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்' செய்வதாக வேதங்கள் கூறுகின்றன. இவ்வாறு அவதாரம் இடம் பெறும்போது அவ்வவதாரத்துக்கு ஏற்றாற்போல் சூழலில் வேறுபல சம்பவங்களும் நடைபெறுகின்றன. திருமால் தனது அம்சமாக ஒருருவை மாநிடனாக அவதரிக்க வைப்பதற்கான முடிவெடுத்ததும் அதற்கு உடந்தையாக இருந்து துணைபுரிய தேவர்கள் பலருக்கும் ஆக்ஞை பிறப்பிக்கிறார்.

♦♦♦

### துறவியை தவிக்க விட்ட தையலர்

விண்ணுலகில் இடம் பெற்ற இந்த அரிய காட்சிகள் யாவும்-மண்ணுலகில் அயோத்தி மாநகரின் கண், அரசர்க்கரசரான தசரதனுடன் இருக்கும் வசிட்டமாமுனிவனுக்கு நொடிப் பொழுதில்-அகக்கண்ணில் தோன்றி மறைகின்றன. இக்காட்சியைக் கண்டு சிந்தையில் களிப்புற்ற மாமுனிவன், புத்திரகாமேட்டி வேள்வியை கலைக்கோட்டு முனிவன் இருசியசிருங்கரின் தலைமையில் நடத்தினால் நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகும் பாக்கியம் தசரதனுக்கு உண்டென்று கூறி முடித்தார்.

♦♦♦

அங்க நாட்டரசனான உரோமபாதனால் இருசியசிருங்கரை அழைத்து வரும்படி ஏவிய அழகும் இளமையும் பொருந்திய மங்கையர் தங்கள் பணியினை சிறப்புடன் நடத்தி முடிக்க ஆயத்தமாயினர்.

தேன் சுவைதரும் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளையும் வகை வகையான-நறுமணத்துடன் கூடிய இன்சுவைப் பண்டங்களையும் தங்கத் தட்டங்களில் ஏந்திய வண்ணம் இருசியசிருங்கரின் தவச்சாலையின் நடுவே அமைந்திருந்த குடிசையின் வாயிலில் வந்து நின்றனர்.

தன் தந்தையையும் தன்னையும் தவிர வேறு அந்த வனத்தில் எந்த மனிதரையுமே இதற்குமுன் இருசியசிருங்கர் கண்டதில்லை. ஓரிரு மிருகங்களையும் ஒருசில பறவைகளையுமே-உயிரினங்களாக அவர் கண்டிருக்கிறார். காலைக் கதிரவனின் எழிலையோ மாலை வேளையில் வானில் தோன்றும் வண்ண ஜாலங்களையோ அவர் அன்றுவரை பார்த்துப் பரவசமடைந்ததில்லை. உதயம் முதல் உறங்கும்வரை அவருடைய வாய் வேத மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டேயிருக்கும். அவருடைய கண்கள் எப்போதும் அரைநிலையில் மூடியபடியே இருக்கும் என்பதால் இயற்கையின் அற்புதக் கோலங்களை அவர் இரசித்ததில்லை.

அங்க தேசத்திலிருந்து வந்த அழகிகளை முதன்முதலாக அவர் பார்த்ததும் முதலில் துணுக்குற்றார். தன்னைப்போன்ற உருவ அமைப்புடன் தென்பட்டாலும், அவர்கள் நடையில் தன் மனதை ஊடுருவும் படை ஒன்றினைக் கண்டார். அவர்களின் கண்வீச்சில் ஏதோ காந்த சக்தி எழுந்து தன் உள்ளத்தைக் கவ்வுவதை உணர்ந்தார். அவர்கள் உதிர்த்த ஒரு சில வார்த்தைகளிலும் உடனெழுந்த சிரிப்பொலியிலும் ஒருவித மாயமந்திர சக்தி வெளியேறி தன்னை நிலை தடுமாற வைத்ததைத் தெரிந்தார்.

இவர்களும்-இதுவரை தான் கண்டு கொள்ளாமலே தவம் செய்யும் தவசிகள்- என்றே கருதினார். ஆனால் தன்னிடத்தில் இல்லாத ஏதோ ஒரு சிறப்பம்சம் அவர்களிடம் இருப்பதைக் கண்டார். அவர்களுடன் மேலும் சில வார்த்தைகளைப் பேசி வேறு சில தகவல்களையும் பெறுவதற்குள்ளாகவே அவர்கள் சிட்டுப் போல் பறந்தோடி விட்டனர். அன்று முழுவதும்-இரவு முழுவதும் தூக்கமேயின்றி அந்தப் புதுமைத் தவசிகளை எண்ணிய வண்ணம் இருந்த இருசியசிருங்கர் அடுத்த நாள்காலையில்-இளஞ்சூரியன் கீழ்வானில் பவனிவரத்தொடங்கி-இரவு முழுவதும் கொட்டிய பனி மெல்ல மெல்லக் கலையும் பொழுதில்-அந்த அழகிகளை தன் குடிசையின் முன்றிலிலே கண்டார்.

மனித வாடை இன்றி மனத்தை அடக்கி ஆண்டுகள் பலவாக ஆரண்யத்தில் கடுந் தவசிருந்த காளையை காமக் கணை எய்து காமத்தீ சுட்டெரிக்க வைத்து விட்டனர் அந்த அங்கநாட்டு அழகிகள். மயங்கி விட்டான் அந்த மாமுனிவன் என்றுணர்ந்த அந்த மங்கையர் இருசியசிருங்கரை தமது பர்ணசாலைக்கு அழைத்துச் சென்றனர். வகைவகையான உண்டி கொடுத்து, பருகப் பாலும் பசும்தேனும் பழரசமும் தந்து, நறுமணப் புகைகளைப் பொங்க வைத்து, காணாதவற்றையெல்லாம் கண்டு விட்ட போதையில் கிறங்க வைத்து அத்துறைவியை உடனடியாகவே இரதத்திலேற்றிக் கொண்டு புறப்பட்டனர்.

♦♦♦

### முனிவன் வருகையால் பொழிந்தது பெருமழை

அங்க நாட்டு எல்லையை இருசிய சிருங்கர் போய் அடைவதற்கு முன்னமே அந்நாட்டில் கருமேகங்கள் கனவேகத்தில் சூழ்ந்து கொண்டன. பெருத்த இடி முழக்கத்துடன் மழை பொழியத் தொடங்கியது.

பந்நெடுங்காலமாக மழை காணாது வறண்டு கிடந்த வயல் நிலங்கள் எங்கும் வெள்ளம் பெருகியது. குளம் குட்டைகளெல்லாம் நீர் நிரம்பப் பெற்றன. மக்கள் மனம் குளிர, மன்னவனும் இன்புற்றான். இருசியசிருங்கரை வரவேற்க மன்னவனுடன் அந்நகர மக்களும் வந்திருந்தனர். வரவேற்பு முறைகளைக் கண்ட முனிவனுக்கு எதுவுமே புரியவில்லை. அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஆடல் பாடல் முதலிய கலைகள் இடம்பெற்றன.

இந்தவேளையில்தான், ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது என்பதனை அந்த இளம் துறவி உணரத்தலைப்பட்டார். தான் ஏமாற்றப்பட்டு விட்டதாக-வஞ்சிக்கப்பட்டு விட்டதாகக் கருதத் தொடங்கினார். முனிவர் உண்மையை உணர்ந்து சாபமிடுவதற்கு முன்னதாக அம்முனிவரின் காலடியில் மன்னன் உரோமபாதன் சரணடைந்தான். மாமுனிவரை அழைத்து வந்த காரணத்தை அமைதியாக எடுத்துரைத்தான். மழையின்மையால் பயிர் விளையாமல் மக்கள் பசிப் பிணியால் பட்ட துயரத்தை விளக்கினான். ஒருவாறு இருசியசிருங்கரின் மனம் மாறி கருணை சொரிந்தது. தக்க தருணம் பார்த்து இருசியசிருங்கருக்கு தன்மகளான சாந்தை என்பாளை மணம் முடித்து வைத்தார் மன்னவன்-உரோமபாதன்.

♦♦♦

தசரதச் சக்கரவர்த்தி தன் நண்பரான உரோமபாதனிடம் வந்து, தான் நடத்தவிருக்கும் வேள்விக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்கு இருசியசிருங்கரை அனுப்பி வைக்குமாறு கோரினார். உரோமபாதனும் தனது மருமகனிடம் தக்கவாறு எடுத்துரைத்து தனது மகளையும் மருமகனான இருசியசிருங்கரையும் அனுப்பி வைத்தார். வேள்வியை நடத்துவதற்கு தனக்கு உதவி புரிவதற்கான வேறுபல முனிவர்களையும் அழைத்துக் கொண்டு இருசியசிருங்கர் அயோத்திமா நகரை வந்தடைந்தார்.



(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### இராமாயணப் போட்டி

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- இருசியசிருங்கர் மணம்முடித்த பெண்ணின் பெயர் என்ன?**

ஒக்டோபர் 21ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ. இல- 1772
கொழும்பு

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)



அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மஸ்தானா மஸ்தானா

ஹொலிவூட் திரையுலகின் இன்றைய கவர்ச்சி நட்சத்திரம் இவர்தான். பெயர் ஷெரான் ஸ்டோன். எத்தனை வயது என்று நினைக்கிறீர்கள்? 37 என்று உண்மையைச் சொன்னால் நம்பத்தான் மாட்டீர்கள். 'பேசிக் இன்ஸ்டிங்க்ட்' படத்தில் இரு பாலாருடனும் உறவு கொண்டு அவர்களை குதறிக் கொலை செய்யும் வேசம். அதன்மூலம் ஹொலிவூட்டின் உச்சியில் ஏறினார். கராத்தே மற்றும் கச்சிதமான உடற் பயிற்சிகளை கற்றுத் தேர்ந்தவர். சில்வஸ்ரர் ஸ்ரலோனுடன் 'ஸ்பெசலிஸ்ட்' படத்திலும் அசத்தியிருக்கிறார். ஆணைவிட பெண்ணுக்கு ஆக்கிரமிப்பு சக்தி அதிகம். அந்த ஆக்கிரமிப்பின் அவதாரம் இந்த ஷெரான் ஸ்டோன் என்று ஹொலிவூட் உலகம் கிறங்கிப்போயிருக்கிறது. நீங்களும் பார்த்துச் சொல்லுங்கள். உண்மை தானே!




அம்மன் ஜுவல்
AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# நிரப்ப முடியாத இடம்

# சாகசத்தில் மன்னன்



யுத்த முனைக்கு அனுப்பும் ஹெலிகொப்டர்கள் தயாரிப்பதில் முன்னணியில் நின்றது சோவியத் யூனியன். தற்போது நேட்டோ நாடுகள் தனிரக ஹெலி-பொம்பர் ரக ஹெலிகொப்டர்களை தயாரித்து வருகின்றன.

படத்தில் இருப்பது 'மில் எம்.ஐ.24 ஹின்ட்டி' ஹெலிகொப்டர். பொம்பர் அதாவது குண்டு வீச்சு விமானத்தின் செயற்பாடும் கலந்தது. பொம்பரின் தம்பி மாதிரி. சண்டைக்குப் போவதற்கு வசதியாக இது வைத்துள்ள ஆயுதங்கள் 57 மில்லிமீற்றர் றொக்கட்டுக்கள், தரைக்கு ஏவக்கூடிய 4 ஏவுகணைகள் மற்றும் 12.7 மில்லிமீற்றர் பாரல் துப்பாக்கிகளும் நான்கு பொருத்தப் பட்டுள்ளன. அவற்றால் நிமிடமொன்றுக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ரவைகளைச் சுட்டுத் தள்ள முடியும். அது தவிர கைக்குண்டுகளை போடக்கூடிய கலம், 500 கிலோ கிராம் கிளஸ்ரர் குண்டுகளை வீசக்கூடிய வசதி என்று சண்டைக்கு ஏற்ற சமாச்சாரங்கள் பல உண்டு. 'நேட்டோ' நாடுகளில் உள்ள விமானப்படையினர் இதனைப் பயன்படுத்துகின்றனர்.



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வசீகரமான வீரர்களில் ஒருவர் வாசிம் அக்ரம். ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்த வாசிம் அக்ரம் பாகிஸ்தான் அணியின் பல வெற்றிகளுக்கு காரணமானவர். அண்மையில் பாகிஸ்தான் மண்ணில் இலங்கை ஆடியபோது வாசிம் அக்ரம் தொடர்ச்சியாக பங்கெடுக்க முடியாமல்போனதும் பாகிஸ்தான் அணிக்கு ஒரு கை உடைந்தது போலத்தான். பாகிஸ்தான் அணிக் கப்டனாக இருக்கவேண்டிய வாசிம் அக்ரம் மீது சூழ்ந்த புகார்களும், சர்ச்சைகளும் ஒரு சிறந்த சகலதுறை ஆட்டக்காரரின் திறமைகளை பாகிஸ்தான் அணி முழுமையாக கறக்க முடியாமல் செய்திருக்கின்றன. இம்ரானுக்குப்பின் பாகிஸ்தான் அணிக்கு கிடைத்துள்ள புதையல் வாசிம். சளைக்காமல், களைக்காமல் பந்துவீசுவது மட்டுமல்ல, துரிதமாக துடுப்பை வீசி ரன்களை சேகரிப்பதும், எதிரணியின் ஓட்டங்களை கட்டுப்படுத்துவதும் ஒரு நாள் போட்டியின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அதெல்லாம் வாசிமுக்கு கைவந்த கலை.

# தருவது லியோடெ



# இரு துருவங்கள்

← இருவரும் நடுத்தர எடை குத்துச்சண்டை வீரர்கள். அமெரிக்காவைச் சேர்ந்தவர் நி செல் பென் (இடது) இத்தாலியைச் சோந்தவர் வின்செண்ஷோ தார்டியெல்லோ (வலது) இருவரும் மோதிக்கொள்ள முன்னர் மூக்காலே உரசி பலம் மற்றும் பதம் பார்த்துக் கொள்கிறார்கள். குத்தினால் தாங்குமா? என்று ஒரு முன் ஆராய்ச்சி! நிறத்திலும் களத்திலும் இரு துருவங்கள்.

# நீரும் நெருப்பும்

கடற்போரில் பலசாலியான கப்பல்கள் முன்னர் சோவியத் யூனியனிடம் இருந்தன. 'கிரோவ் கிளாஸ்' என்னும் சோவியத் போர்க் கப்பல்கள் பொல்லாதவை. அவற்றுக்குப் போட்டியாக அமெரிக்காவும் USS CO WA என்னும் கப்பல்களை நவீனமயப்படுத்தியது. அக் கப்பல் விபத்தொன்றில் வெடித்துச் சிதறியது. அதன் பின்னர் USS New Jersey என்னும் போர்க் கப்பல்களை அமெரிக்கா தயாரித்தது. அதுதான் அருகே படத்தில் இருக்கிறது. ஏவுகணைகள், நீண்ட தூர சுடு துப்பாக்கிகள், நீண்டதூர பீரங்கிகள், மிக நவீன ராடர் வசதிகள் என்று பல பயங்கர சங்கதிகள் இருக்கின்றன. இராணுவ இரகசியம் கருதி அமெரிக்கா அவற்றை வெளியிடவில்லை.

கடலில் சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. பீரங்கிகள் நீரின் மேல் நெருப்பைத் துப்புகின்றன. கடற் போரில் அமெரிக்கா இன்றும் ஜாம்பவான். சிறிய நாடுகளின் கடற்படைகள் இந்த ஒரு கப்பலுக்கே பதில் சொல்ல முடியாது. வல்லரசுகள் விடயத் திலும் சோவியத் யூனியன் இல்லாமல் போனதால் அமெரிக்காவுக்கு கடலிலும் போட்டி இல்லை.

